Alagar kovil sthala Mahatmiyam

Shribalasubiksham Ramasubramanian

ஸ்ரீ

ஸ்ரீ விருஷபாத்திரி பரப்ரமணே நம:

பிர்மாண்டபுராணம் வராகபுராணம்

வாமனபுராணத்திற் கூறும்

திருமாலிருஞ்சோலைமலை யென்னும்

அழகர்கோயில்ஸ்தல

மான்மியமும்.

ஆழ்வாராதிகள் பிரபந்தமும்

௸ ஸ்தலம்

ஸ்ரீலஸ்ரீ பிரம்ம ஸ்ரீ

ஆத்தான் சடகோபராமாநுஜஜீயர்

சுவாமிகள்.

திருவடிசம்பந்தர்

மதுரை வடக்குமாசிவீதி

வெ. நீலமேகக்கோனார்குமாரர்


இராகவக்கோனரால்

மதுரை ஸ்ரீ ராமச்சந்திர விலாச அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது

1908-௵ டிசம்பர்-௴

இதன் விலை அணா—8



சாற்றுக்கவிகள்,

மதுரைஜில்லா வேம்பத்தூர் ...

பிச்சுவைய ரவர்கள...

வெண்பா.

ஆவ லுடனே யழகரின்மேற் செந்தமிழ்தேர்
பாவலவர் சொன்னபிர பந்தமெல்லாம்—மாவளஞ்சேர்
எச்சிட் டரும்புகழ வெல்லாரும் முத்திபெற
அச்சிட்டான் ராகவக்கோ னும்.

ங்கை ராஜாஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் பிரமஸ்ரீ தெய்வசிகா
ஐயரவர்கள் மாணாக்கரும, மதுரை பசுமலை ஹை அண்டுடிரெயி
னிங்ஸ்கூல்களின் தலைமைபபண்டிதருமான

வித்வான் கணபதியாபிள்ளையியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

புருவமுகி லனையவணன் பசுந்துளப மாலழகன்
பதியாய்ப் பன்னும்
திருவளரு மிடபகிரி மான்மியத்தை வடமொழியின்
றிரட்டிச் சேர்த்து
மருவளருங் குழன்மடவார் வதிந்தாடு மலர்ததடஞ்சூழ்
மதுரை வாசன்
தருவளருங் கரதலத்தா னிராகவக்கோன்
அச்சிலிட்டுத் தழைத்தான் மன்றே.

மதுரை ஜில்லா செம்பூர்

வி. ஆறுமுகஞ்சேர்வை யவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

கடவரையின் குலத்தோங்கு மிடபகிரி தனிலெழுந்து
தரங்கஞ் சூழ்மா
புடவியிசைப் பலபுதுமை புரிந்தமஞ்சு வணக்கடவுள்
புகழ்சேர் காதை

வடமொழியிற் றிகழுவதைத் தென்மொழியி லிருந்தபடி
வயங்க வாற்றி
திடமுடனே யசகிலிட்டி ராகவனங் கூடலிலே
சிறந்தா னம்மா.

மதுரை த. குப்புச்சாமிநாயுடு அவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

படியளந்த திருமார்பன் பதசசிலம்பிற் றோன்றியநதப்
படியப பூவின்
அடியளநது பாய்கின்ற நூபுரகங கைக்கிடனு
யமைநது பத்தா
மிடியளந்து தீர்க்கவல வியபபுடைததா மிடபகிரி
மேன்மை யாவுங
கடியளநது பகரவொணுத துளவணியன் ஜேன்சிறப்புங்
கலநது காண.


இதுவுமது.

வடமொழியி லழகாகோ விறறலமான மியமென்ன
வருததது மேலோர்
திடமுறசெய் தேயிருநத வநநூலைத தென்மொழியிற்
றிருபபி யிஙகு
மடமகற்றுங் கலைவல்ல வெங்கட்ட ராமசாத
திரியாம் வள்ளல்
உடனகொடுகக வசகிலிட்டி ராகவனு முதவியிக
வுயாவுற றுலை.



ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



பொதுத்தனியன்கள்.

அழகியமணவாளனருளிச்செய்தது.

ஸ்ரீசைலேசதயாபாத்ரம்-தீபக்த்யாதிகுணார்ணவம்
யதீந்த்ரப்ரவணம்வந்தே-ரம்யஜாமாதரம்முநிம்

கூரத்தாழ்வானருளிச்செய்தது.

லக்ஷ்மீநாதஸமாரம்பாம்-நாதயாமுநமத்யமாம்
அஸ்மதாசார்யபர்யந்தாம்-வந்தேகுருபரம்பராம்

யோநித்யமச்யுதபதாம்புஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ்ததிதராணி த்ருணாயமேநே
அஸ்மத்குரோர்பகவ தோஸ்யதயைகஸிந்தோ
ராமாநுஜஸ்யசரணௌஸரணம்ப்ரபத்யே.

ஆளவந்தாரருளிச்செய்தது.

மாதாபிதாயுவதயஸ்தநயாவிபூதிஸ்
ஸர்வம்யதேவநியமேநமதந்வயாநாம்
ஆத்யஸ்யந:குலபதேர்வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளம்ப்ரணமாமிமூர்த்நா.

பட்டரருளிச்செய்தது.

பூதம்ஸரஸ்யமஹதாஹ்வயபட்டநாத
ஸ்ரீபக்திஸாரகுலசேகரயோகிவாஹாந்
பக்தாங்க்ரிரேணுபரகாலயதீந்த்ரமிஸ்ராந்
க்பாராங்குசமுநிம்ப்ரணதோஸ்மிநித்யம்.

தனியன்.

நாதமுனிகளருளிச்செய்தது.

குருமுகமநதீத்யப்ராஹவேதாநஸேஷாந்
நரபதிபரிக்லிப்தம்ஸுல்கமாதாதுகாம:
ஸ்வஸுரமமரவந்த்யம்ரங்கநாதஸ்யஸாக்ஷாத்
த்விஜகுலதிலகம்தம்விஷ்ணுசித்தம்நமாமி.

பாண்டியபட்டரருளிச்செய்தது.

நேரிசை வெண்பா.

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூ ரென்றொருகால்
சொன்னார் கழற்கமலம் சூடினோம்—முன்னாள்
கிழியறுத்தா னென்றுரைத்தோம் கீழ்மை யினில்சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே வந்து.

பாண்டியன் கொண்டாடப் பட்டாபிரான் வந்தானென்
றீண்டிய சங்க மெடுத்தூத—வேண்டிய
வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று.

தனியன்கள்-முற்றும்.

ஜீயர் திருவடிகளே சரணம்.





ஸ்ரீ

ஸ்ரீ ராமஜெயம்.

ஆழ்வார்பிரபந்தங்கள்.

பெரியாழ்வார் பிரபந்தம்.

உன்னையுமொக்கலையிற் கொண்டுதமில்மருவி
உன்னொடுதங்கள்கருத் தாயினசெய்துவரும்
கன்னியரும்மகிழக் கண்டவர்கண்குளிரக்
கற்றவர்தெற்றிவரப் பெற்றவெனக்கருளி
மன்னுகுறுங்குடியாய் வெள்ளறையாய் மதிள்சூழ்
சோலைமலைக்கரசே கண்ணபுரத்தமுதே
என்னவலம்களைவா யாடுகசெங்கீரை
ஏழுலகுமுடையா யாடுகவாடுகவே. (1)

ன்றிநின்றுயர்தழைகளிடச சுருள்பங்கிநேத்திரத்தாலணிந்து, பற்றிநின்றுய
கடைத்தலையே பாடவுமாடக்கண்டேன், அன்றிப்பின் மற்றொருவர்க்கென்
னப்பேசலொட்டேன் மாலிருஞ்சோலை யெம்மாயர்கல்லால், கொற்றவனுக்
வளாமென் றெண்ணிக்கொடுமின்கள்கொடீராகிற் கோழம்பமே. (2)

திருமாலிருஞ்சோலைச்சிறப்பு.

அலம்பாவெருட்டாக் கொன்றுதிரியுமரக்கரை
லம்பாழ்படுத்துக் குலவிளக்காய்நின்றகோன்மலை
லம்பார்க்கவந்து தெய்வமகளிர்களாடும் சீர்,
லம்பாறுபாயும்தென் திருமாலிருஞ்சோலையே. (3)

பல்லாளன்தோளும் வாளரக்கன்முடியும் தங்கை
பொல்லாதமூக்கும் போக்குவித்தான்பொருந்துமலை
ல்லாவிடத்திலு மெங்கும்பரந்து-பல்லாண்டொலி
செல்லாநிற்கும் சீர்த்தென்திருமாலிருஞ்சோலையே. (4)

தக்கார்மிக்கார்களைச் சஞ்சலஞ்செய்யும்சலவரை
தெக்காநெறியேபோக்குவிக்கும் செல்வன்பொன்மலை
ரக்காலமுஞ்சென்று சேவித்திருக்குமடியரை
அக்காநெறியைமாற்றும்தண் மாலிருஞ்சோலையே. (5)

ஆனாயர்கூடி யமைத்தவிழவை அமரர்தம்
கோனார்க்கொழியக் கோவர்த்தனத்துச்செய்தான்மலை
வானாட்டில்நின்று மாமலர்க்கற்பகத்தொத்திழி
தேனாறுபாயும்தென் திருமாலிருஞ்சோலையே. (6)

ஒருவாரணம்பணிகொண்டவன் பொய்கையில் கஞ்சன்றன்
ஒருவாரணமுயிருண்டவன் சென்றுறையும்மலை
கருவாரணமதனபிடி துறந்தோட கடல்வண்ணன்
திருவாணைகூறத்திரியும்தண் மாலிருஞ்சோலையே (7

ஏவிற்றுச்செய்வானேன் றெதிர்ந்துவந்தமல்லரை
சாவத்தகர்த்த சாந்தணிதோட்சதுரன்மலை
ஆவத்தனமென் றமரர்களும்நன்முனிவரும்
சேவித்திருக்கும் தென்திருமாலிருஞ்சோலையே (8

மன்னர்மறுக மைத்துனன்மார்க்கொருதேரின்மேல்
முன்னங்குநின்று மோழையெழுவித்தவன்மலை
கொன்னவிற்கூர்வேற்கோன் நெடுமாறன் தென்கூடற்கோன்
தென்னன்கொண்டாடும் தென்திருமாலிருஞ்சோலையே. (9

குறுகாதமன்னரைக் கூடுகலக்கி வெங்கானிடைச்
சிறுகால்நெறியேபோக்குவிக்கும் செல்வன்பொன்மலை
அறுகால்வரிவண்டுகள் ஆயிரநாமஞ்சொல்லி
சிறுகாலைப்பாடும்தென் திருமாலிருஞ்சோலையே. (10

சிந்தப்புடைத்துச் செங்குருதிகொண்டு பூதங்கள்
அந்திபலிகொடுத் தாவத்தனஞ்செய்யப்பன்மலை
இந்திரகோபங்க ளெம்பெருமான்கனிவாயொப்பான்
சிந்தும்புறவில்தென் திருமாலிருஞ்சோலையே. (11

எட்டுத்திசையு மெண்ணிறந்தபெருந்தேவிமார்
விட்டுவிளங்க வீற்றிருந்தவிமலன்மலை
பட்டிப்பிடிகள் பகடுரிஞ்சிச்சென்று, மாலைவாய்
தெட்டித்திளைக்கும்தென் திருமாலிருஞ்சோலையே. (12

மருதப்பொழிலணி மாலிருஞ்சோலைமலைதன்னை
கருதியுறைகின்ற கார்க்கடல்வண்ணனம்மான்றன்னை
விரதங்கொண்டேத்தும் வில்லிபுத்தூர்விட்டுசித்தன்சொல்
கருதியுரைப்பவர் கண்ணன்கழலிணைகாண்பர்களே. (13

திருமாலிருஞ்சோலைமலையின் மாட்சி.

உருப்பிணிநங்கைதன்னைமீட்பான் தொடர்ந்தோடிச்சென்ற
உருப்பனையோட்டிக்கொண்டிட் டுறைத்திட்டவுறைப்பன்மலை
பொருப்பிடைக்கொன்றைநின்று முறியாழியும்காசுங்கொண்டு
விருப்பொடுபொன்வழங்கும் வியன்மாலிருஞ்சோலையதே. (14

ஞ்சனும்காளியனும் களிறும்மருதுமெருதும்
ஞ்சனையில்மடிய வளர்ந்தமணிவண்ணன்மலை
ஞ்சமிழ்நாகமெழுந்தணவி களிர்மாமதியை
செஞ்சுடர்நாவளைக்கும் திருமாலிருஞ்சோலையதே. (15)

ன்னுநரகன்றன்னைச் சூழ்போகிவளைத்தெறிந்து
ன்னிமகளிர்தம்மைக் கவர்ந்தகடல்வண்ணன்மலை
ன்னைசெருந்தியொடு புனவேங்கையுங்கோங்குநின்று
பொன்னரிமாலைகள்சூழ் பொழில்மாலிருஞ்சோலையதே. (16)

ாவலிதன்னுடைய மகன்வாணன்மகளிருந்த
ாவலைகட்டழித்த தனிக்காளைகருதும்மலை
காவலாகோவிந்தனைக் குறமாதர்கள்பண்குறிஞ்சிப
ாவொலிபாடிநடம்பயில் மாலிருஞ்சோலையதே. (17)

லபலநாலஞ்சொல்லிப் பழித்தசிசுபாலன்றன்னை
லைவலைமைதவிர்த்த வழகனலங்காரன்மலை
லமலைகோலமலை குளிர்மாமலைகொற்றமலை
லமலைநீண்டமலை திருமாலிருஞ்சோலையதே. (18)

ாண்டவர்தம்முடைய பாஞ்சாலிமறுக்கமெல்லாம்
ண்டங்குநூற்றுவர்தம் பெண்டிர்மேல்வைத்தவப்பன்மலை
ாண்டகுவண்டினங்கள் பண்கள்பாடிமதுப்பருக
தாண்டனுடையமலை தொல்லைமாலிருஞ்சோலையதே. (19)

ஙகுழையாள்பொருட்டாக் கணைபாரித்து, அரக்கர்தங்கள்
னம்கழுவேற்றுவித்த வெழிலதோளெம்பிராமனமலை
ஙகொழிதெள்ளருவி வந்துசூழ்ந்தகல்ஞாலமெல்லாம்
னங்குழுவாடும்மலை யெழிலமாலிருஞ்சோலையதே. (20)

ரிசிநறும்சாந்தம் விலங்கைபிலை தன்னுடைய
ரிசிலையாயிற்பொய்து வாயகம்கொட்டம தவிர்த்துகந்த
ரையனமருமமலை யமரரொடு கோனுமசென்று
சுடர்சூழும்மலை திருமாலிருஞ்சோலையதே. (21)

ாட்டுமண் கொண்டிடநது குடங்கையில் மண்கொண்டளந்து
ட்டுமதுண்டுமிழ்ந்து விளையாடும் விமலன்மலை
ட்டியபல்பொருள்க ளெம்பிரானுக் கடியுறையென்று
ட்டரும்தண்சிலம்பாறுடை மாலிருஞ் சோலையதே. (22)

ஆயிரந்தோள்பரப்பி முடியாயிரமின்னிலக
ஆயிரம்பைந்தலைய அனந்தசயனனாளும்மலை
ஆயிரமாறுகளும் சுனைகள்பலவாயிரமும்
ஆயிரம்பூம்பொழிலுமுடை மாலிருஞ்சோலையதே. (2

மாலிருஞ்சோலையென்னும் மலையையுடையமலையை
நாலிருமூர்த்திதன்னை நால்வேதக்கடலமுதை
மேலிருங்கற்பகத்தை வேதாந்தவிழுப்பொருளின்
மேலிருந்தவிளக்கை விட்டுசித்தன் விரித்தனனே. (2

திருமாலிருஞ்சோலை யெம்பெருமானை மீக்கூறல்.

துக்கச்சுழலையைச் சூழ்ந்துகிடந்த வலையையறப்பறித்து
புக்கினிற்புக்குன்னைக் கண்டுகொண்டேனினிப் போகவிடுவதுண்டே
மக்களறுவரைக் கல்லிடைமோத இழந்தவள்தன்வயிற்றில்
சிக்கெனவந்துபிறந்துநின்றாய் திருமாலிருஞ்சோலையெந்தாய். (29

வளைத்துவைத்தேனினிப் போகலொட்டேனுன்றனிந்திரஞாலங்களால்
ஒளித்திடில்நின்திருவாணைகண்டாய் நீயொருவர்க்கும்மெய்யனல்லை
அளித்தெங்குநாடுநகரமும் தம்முடைத்தீவினைதீர்க்கலுற்று
தெளித்துவலஞ்செய்யுந்தீர்த்தமுடைத் திருமாலிருஞ்சோலையெந்தாய் (30

உனக்குப்பணிசெய்திருக்கும் தவமுடையேனினிப்போயொருவன்
தனக்குப்பணிந்து கடைத்தலை நிற்கைநின்சாயையழிவுகண்டாய்
புனத்தினைக்கிள்ளிப்புதுவவிகாட்டி உன்பொன்னடிவாழ்கவென்று
இனக்குறவர்புதியதுண்ணு மெழில்மாலிருஞ்சோலையெந்தாய். (27

காதம்பலவுந்திரிந்துழன்றேற் கங்கோர்நிழலில்லை நீருமில்லை உன
பாதநிழலல்லால்மற்றோருயிர்ப்பிடம் நானெங்குங்காண்கின்றிலேன்
தூதுசென்றாய்குருபாண்டவர்க்காய் அங்கோர்பொய்ச்சுற்றம்பேசிச்சென்று
பேதஞ்செய்தெங்கும்பிணம்படுத்தாய் திருமாலிருஞ்சோலையெந்தாய்

காலுமெழாகண்ணநீருநில்லா உடல்சோர்ந்துநடுங்கி குரல்
மேலுமெழாமயிர்க்கூச்சுமறா எனதோள்களும் வீழ்வொழியா
மாலுகளாநிற்குமென்மனனே யுன்னைவாழத்தலைப்பெய்திட்டேன்
சேலுகளாநிற்குநீள்சுனைசூழ் திருமாலிருஞ்சோலையெந்தாய். (

எருத்துக்கொடியுடையானும் பிரமனுமிந்திரனுமற்றும்
ஒருத்தருமிப்பிறவியென்னும்நோய்க்கு மருந்தறிவாருமில்லை
மருத்துவனாய்நின்ற மாமணிவண்ணா மறுபிறவிதவிரத்
திருத்தியுன்கோயில் கடைப்புகப்பெய்திருமாலிருஞ்சோலையெந்தாய்

...க்கரையென்னுமனத்தக்கடலு ளெழுந்தியுன்பேரருளால்
...க்கரையேறியிளைத்திருந்தேனை யஞ்சேலென்றுகைகவியாய்
...க்கரமும்தடக்கைகளும் கண்களும பீதகவாடையொடும்
...செக்கர்நிறத்துச்சிவப்புடையாய் திருமாலிருஞ்சோலையெந்தாய். (31)

...த்தனைகாலமுமெத்தனையூழியு மின்றொடுநாளையென்றே (ன்
...த்தனைகாலமும்போய்க்கிறிபட்டே னினியுன்னைப்போகலொட்டே
...மைத்துனன்மார்களைவாழ்வித்து மாற்றலர்நூற்றுவரைக்கெடுத்தாய்
...த்தமநின்பாலதறிதியன்றே திருமாலிருஞ்சோலையெந்தாய். (32)

...அன்றுவயற்றிற்கிடந்திருந்தே யடிமைசெய்யலுற்றிருப்பன்
இன்றுவந்திங்குனைக்கண்டுகொண்டே னினியெப போகவிடுவதுண்டே
...சென்றங்குவாணனையாயிரந்தோளும் திருச் சக்கரமதனால்
...தென்றித்திசைதிசைவீழச்செற்றாய் திரு...மாலிருஞ்சோலையெந்தாய்

...சன்றுலகம்குடைந்தாடுஞ்சுனை த திருமாலிருஞ் சோலைதன்னுள்
...நின்றபிரான் அடிமேலடிமைத்திறம் நேர்படவிண்ணபபஞ்செய் (தன்
...பொன்திகழ்மாடம்பொலிந்துதோன்றும் புதுவைக்கோன்விட்டுசித்
...ன்றிதேனொன்பதும் பாடவல்லாருலக மளந்தான் தமரே. (34)

பெரியாழ்வார் திருவடிகளேசரணம்.

ஆண்டாள் பிரபந்தம்

திருமாலிருஞ்சோலை யெம்பெருமானை வழிபடல்.

...ந்தூரச்செம்பொடிப்போல் திருமாலிருஞ்சோலையெங்கும்
...ந்திரகோபங்களே யெழுந்தும்பரந்திட்டனவால்
...மந்தரம்நாட்டியன்று மதுரகொழுஞ்சாறுகொண்ட
...சுந்தரத்தோளுடையான் சுழலையில்நின்றுய் துங்கொலோ. (1)

...போர்க்களிறுபொரும் மாலிருஞ்சோலையம்பூம்புறவில்
...தார்க்கொடிமுல்லைகளும் தவளநகைகாட்டுகின்ற
...கார்க்கொள்படாக்கள்நின்று கழறிச்சிரிக்கத்தரியேன்
...ஆர்க்கிடுகோதோழீ அவன்தார்செய்த பூசலையே.

...கருவிளையொண்மலர்காள் காயாமலர்காள்திருமா
...லுருவொளிகாட்டுகின்றீ ரெனக்குய்வழக்கொன்றுரையீர்
திருவிளையாடுதிண்டோள் திருமாலிருஞ்சோலைநம்பி
...வரிவளையில்புகுந்து வந்திபற்றும்வழக்குளதே. (3)

பைம்பொழில்வாழ்குயில்காள் மயில்காள் ஒண்கருவிளைகாள்
வம்பக்களங்கனிகாள் வண்ணப்பூவைநறுமலர்காள்
ஐம்பெரும்பாதகர்காள் அணிமாலிருஞ்சோலைநின்ற
எம்பெருமானுடையநிற முங்களுக்கென்செய்வதே.

துங்கமலர்ப்பொழில்சூழ் திருமாலிருஞ்சோலைநின்ற
செங்கட்கருமுகிலின் திருவுருப்போல மலர்மேல
தொங்கியவண்டினங்காள் தொகுபூஞ்சுனைகாள் சுனையில்
தங்குசெந்தாமரைகா ளெனக்கோர்சரண் சாற்றுமினே.

நாறுநறும்பொழில் மாலிருஞ்சோலை நம்பிக்குநான்
நூறுதடாவில்வெண்ணெய் வாய்நேர்ந்து பராவிவைத்தேன்
நூறுதடாநிறைந்த அக்காரவடிசில் சொன்னேன்
ஏறுதிருவுடையா னின்றுவந்திவை கொள்ளுங்கொலோ.

இன்றுவந்தித்தனையு மமுதுசெய்திடப்பெறில் நான்
ஒன்றுநூறாயிரமாகக்கொடுத்துப் பின்னுமாளும்செய்வன்
தென்றல்மணங்கமழும் திருமாலிருஞ்சோலைதன்னுள்
நின்றபிரான் அடியேனமனத்தே வந்துநேர்படிலே.

காலையெழுந்திருந்து கரியகுருவிக்கணங்கள்
மாலின்வரவுசொல்லி மருள்பாடுதல்மெய்ம்மைகொலோ
சோலைமலைப்பெருமான் துவராபதியெம்பெருமான்
ஆலினிலைப்பெருமா னவன்வார்த்தை யுரைக்கின்றதே.

கோங்கலரும்பொழில் மாலிருஞ்சோலையில் கொன்றைகண்மேல்
தூங்குபொன்மாலைகளோ டுடனாய்நின்று தூங்குகின்றேன்
பூங்கொள்திருமுகத்து மடுத்தூதியசங்கொலியும்
சார்ங்கவில்நாணொலியும் தலைப்பெய்வதெஞ்ஞான்றுகொலோ.

சந்தொடுகாரகிலும்சுமந்து தடங்கள்பொருது
வந்திழியுஞ்சிலம்பா றுடை மாலிருஞ்சோலைநின்ற
சுந்தரனைச்சுரும்பார்குழல்கோதை தொகுத்துரைத்த
செந்தமிழ்ப்பத்தும்வல்லார் திருமாலடிசேர்வர்களே.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.



திருமங்கையாழ்வார் பிரபந்தம்.

உளங்கனிந்திருக்குமுன்னையே பிதற்றுமுனக்கன்றியெனக்கன் பொன்றி
னால், வளங்கனிபொழில்சூழ்மாலிருஞ் சோலைமாயனேயென்றுவாய்வெருவு
களங்கனிமுறுவலகாரிகைபெரிது கவலையோடவலஞ்சேர்ந்திருந்த
இளங்கனி யிவளுக்கென்னினைந் திருந்தாயிடவெந்தை யெந்தைபிரானே. (1

எட்டனைப்பொழுதாகிலுமென்று
மென்மனத்தகலாதிருக்கும்புகழ்
தட்டலர்த்தபொன்னே யலர்கோங்கின்
தாழ்பொழில்திருமாலிருஞ்சோலையங்
கட்டியைக் கரும்பீன்றவின்சாற்றைக்
காதலால்மறைநான்குமுன்னோதிய
பட்டனை பரவைத்துயி லேற்றையென்
பண்பனையன்றிப் பாடல்செய்யேனே. [2)

நீயோங்குதண் திருமாலிருஞ்சோலைமலையுறையும்
மாயாஎனக்குரையாயிது மறைநான்கினுளாயோ
தீயோம்புகைமறையோர் சிறுபுலியூர்ச்சலசயனத்
தாயோஉனதடியார்மனத்தாயோ வறியேனே. (3)

மஞ்சுயர்மாமதிதீண்டநீண்ட மாலிருஞ்சோலைமணாளர்வந்துஎன்
நெஞ்சுள்ளுங்கண்ணுள்ளும்நின்றுநீங்கார்நீர்மலையார்கொல்நினைக்கமாட்டேன்
மஞ்சுயர்பொன்மலைமேலெழுந்தமாமுகில்போன்றுளர்வந்துகாணீர்
அஞ்சிறைப்புள்ளுமொன்றேறிவந்தார்ச்சோவொருவரழகியவா. (4)

திருமாலிருஞ்சோலை அழகர்விஷயம்.

முந்துறவுரைக்கேன் விரைக்குழல்மடவார் கலவியைவிடுதடுமாறல்
அந்தரமேழுமலைகடலேழுமாய வெம்மடிகள்தம்கோயில்
சந்தொடுமணிமயில்தழையும் தழுவிவந்தருவிகள்நிறைந்து
வந்திழிசாரல்மாலிருஞ்சோலை வணங்குதும்வாமடநெஞ்சே. (5)
மதள்
வள்ளி
திமையோர்
பார்த்துடையும்புனலும் கொண்டிடையின்றி யெழுமினேதொழுதுமென்
காத்தண்டரும்பரவவரவணைத்துயின்றசுடர் முடிக்கடவுள்தம்கோயில்
தீர்த்தண்டலர்தூளிவேய்வளர் புறவில்விரைமலர்க் குறிஞ்சியின்நறுந்தேன்
மூர்த்தண்டமர்சாரல்மாலிருஞ்சோலை வணங்குதும்வாமடநெஞ்சே. (6)

பிணிவளராக்கைநீங்கநின்றேத்தப் பெருநிலமருளில்முன்னருளி
அணிவளர்குறளாயகலிடமுழுதுமளந்தவெம்மடிகள்தம்கோயில்
கணிவளர்வேங்கைநெடுநிலமதனில் குறவர்தம்கவணிடைத்துரந்த
மணிவளர்சாரல்மாலிருஞ்சோலை வணங்குதும்வாமடநெஞ்சே. (7)

சூர்மயிலாயபேய்முலைசுவைத்துச் சுடுசரமடுசிலைத்துரந்து
நீர்மையிலாததாடகைமாள நினைந்தவர்மனங்கொண்டகோயில்
கார்மலிவேங்கைகோங்கலர்புறவில் கடிமலர்குறிஞ்சியின்நறுந்தேன்
வார்புனல்சூழ்தண்மாலிருஞ்சோலை வணங்குதும்வாமடநெஞ்சே. (

வணங்கலிலரக்கன்செருக்களத்தவிய மணிமுடியொருபதும்புரள
அணங்கெழுந்தவன்றன் கவந்தம்நின்றாட அமர்செய்தவடிகள்தம்கோயில்
பிணங்கலில்நெடுவேய்நுதிமுகம்கிழிப்பப் பிரசம்வந்திழிதர பெருந்தேன்
மணங்கமழ்சாரல்மாலிருஞ்சோலை வணங்குதும்வாமடநெஞ்சே.

விடங்கலந்தமர்ந்தவரவணைத்துயின்று விளங்கனிக்கிளங்கன்றுவிசிறி
குடங்கலந்தாடிக்குரவைமுன்கோத்த கூத்தவெம்மடிகள்தம்கோயில்
தடங்கடல்முகந்துவிசும்பிடைப்பிளிறத் தடவரைக்களிறென்றுமுனிந்து
மடங்கல்நின்றதிரும்மாலிருஞ்சோலைவணங்குதும்வாமடநெஞ்சே. 10

தேனுகனாவிபோயுகவங்கோர் செழுந்திரள்பனங்கனியுதிர
தானுகந்தெறிந்ததடங்கடல்வண்ண ரெண்ணிமுனிடங்கொண்டகோயில்
வானகச்சோலைமரதகச்சாயல் மாமணிக்கல்லதாநிறைந்து
மானுகர்சாரல்மாலிருஞ்சோலை வணங்குதும்வாமடநெஞ்சே. (11)

புதமிகுவிசும்பில்புணரிசென்றணவப் பொருகடலரவணைத்துயின்று
பதமிகுபரியின்மிகுசினம்தவிர்த்தபணிமுகில்வண்ணர் தம்கோயில்
கதமிகுசினத்தகடதடக்களிற்றின கவுள்வழிகளிவண்டுபருக
மதமிகுசாரல்மாலிருஞ்சோலை வணங்குதும்வாமடநெஞ்சே. (12)

புந்தியில்சமணர்புத்தரென்றிவர்க ளொத்தன பேசவுமுகந்திட்டு
எந்தைபெம்மானிமையவர்தலைவ ரெண்ணிமுனிடங்கொண்டகோயில்
சந்தனப்பொழிலின் தாழ்சினைநீழல்தாழ்வறைமகளிர்கள்நாளும்
மந்திரத்திறைஞ்சும்மாலிருஞ்சோலை வணங்குதும்வாமடநெஞ்சே.

வண்டமர்சாரல்மாலிருஞ்சோலை மாமணிவண்ணரைவணங்கும்
தொண்டரைப்பரவும்சுடரொளிநெடுவேல்சூழ்வயலாலிநன்னாட
கண்டல்நல்வேலிமங்கையர்தலைவன்கலியன்வாயொலிசெய்தபனுவ
கொண்டிவைபாடும்தவமுடையார்களாள்வரிக் குரைகடலுலகே. (

இதுவுமது

மூவரில்முன் முதல்வன் முழங்கார்கடலுள்கிடந்து
பூவலருந்திதன்னுள் புவனம்படைத்துண்டுமிழ்ந்த
தேவர்கணாயகனை திருமாலிருஞ்சோலைநின்ற
கோவலர்கோவிந்தனைக் கொடியேரிடைகூடுங்கொலோ. (15)

புனைவளர்பூம்பொழிலார் பொன்னிசூழரங்கநகருள்
முனைவனைமூவுலகும்படைத்த முதல்மூர்த்திதன்னை
சினைவளர்பூம்பொழில்சூழ் திருமாலிருஞ்சோலைநின்றான்
கனைகழல்காணுங்கொலோ கயல்கண்ணியெம்காரிகையே. (16)

உண்டுலகேழினையு மொருபாலகனாலிலைமேல்
கண்டுயில்கொண்டுகந்த கருமாணிக்கமாமலையை
திண்டிறல்மாகரிசேர் திருமாலிருஞ்சோலைநின்ற
அண்டர்தம்கோவினையின் றணுகுங்கொலென்னாயிழையே. (17)

சிங்கமதாயவுணன் திறலாகம் முன்கீண்டுகந்த
பங்கயமாமலர்க்கண்பரனை யெம்பரஞ்சுடரை
திங்கள்நன்மாமுகில்சேர் திருமாலிருஞ்சோலைநின்ற
நங்கள்பிரானையின்று நணுகுங்கொலென்நன்னுதலே. (18)

தானவன்வேள்விதன்னில் தனியேகுறளாய்நிமிர்ந்து
வானமும்மண்ணகமு மளந்ததிரிவிக்கிரமன்
தேனமர்பூம்பொழில்சூழ் திருமாலிருஞ்சோலைநின்ற
வானவர்கோனையின்று வணங்கித்தொழ வல்லள்கொலோ. (19)

நேசமிலாதவர்க்கும் நினையாதவர்க்குமரியான்
வாசமலர்ப்பொழில்சூழ் வடமாமதுரைப்பிறந்தான்
தேசமெல்லாம்வணங்கும் திருமாலிருஞ்சோலைநின்ற
கேசவநம்பிதன்னைக்கெண்டை யொண்கண்ணிகாணுங்கொலோ. (20)

புள்ளினைவாய்பிளந்து பொருமாகரிகொம்பொசித்து
கள்ளச்சகடுதைத்த கருமாணிக்கமாமலையை
தெள்ளருவிகொழிக்கும் திருமாலிருஞ்சோலைநின்ற
வள்ளலைவாணுதலாள் வணங்கித்தொழவல்லள்கொலோ. (21)

பார்த்தனுக்கன்றருளிப் பாரதத்தொருதேர்முன்னின்று
காத்தவன்றன்னைவிண்ணோர் கருமாணிக்கமாமலையை
தீர்த்தனைப்பூம்பொழில்சூழ் திருமாலிருஞ்சோலைநின்ற
மூர்த்தியைக்கைதொழவும் முடியுங்கொலென்மொய்குழற்கே. (22)

வலம்புரியாழியனை வரையார்திறடோளன்றனை
புலம்புரிநூலவனைப் பொழில்வேங்கடவேதியனை
சிலம்பியலாறுடைய திருமாலிருஞ்சோலைநின்ற
நலந்திகழ்நாரணனை நணுகுங்கொலென்னனுதலே. (23)

தேடற்கரியவனைத் திருமாலிருஞ்சோலைநின்ற
ஆடல்பறவையனை யணியாயிழைகாணுமென்று
மாடக்கொடிமதிள்சூழ் மங்கையார்கலிகன்றிசொன்ன
பாடல்பனுவல்பத்தும் பயில்வார்க்கில்லை பாவங்களே. (24)

பத்தராவியைப் பான்மதியை அணித்
தொத்தைமாலிருஞ் சோலைதொழுதுபோய்
முத்தினைமணியை மணிமாணிக்க
வித்தினைசென்று விண்ணாகக்காண்டுமே. (25)

மஞ்சுறுமாலிருஞ்சோலை நின்றமணாளனார்
நெஞ்சம்நிறைகொண்டுபோயினார் நினைகின்றிலர்
வெஞ்சுடர்போய் விடியாமலெவ்விடம்புக்கதோ
நஞ்சுடலம்துயின்றால் நமக்கினிநல்லதே. (26)

தேனொடுவண்டாலும் திருமாலிருஞ்சோலை
தானிடமாக்கொண்டான் தடமலர்க்கண்ணிக்காய்
ஆன்விடையேழன்றடர்த்தார்க்காளானாரல்லாதார்
மானிடவரல்லரென்றென்மனத்தேவைத்தேனே. (27)

பாயிரும்பரவைதன்னுள் பருவரைதிரித்துவானோர்க்
காயிருந்தமுதங்கொண்ட வப்பனையெம்பிரானை
வேயிருஞ்சோலைசூழ்ந்து விரிகதிரிரியநின்ற
மாயிருஞ்சோலைமேய மைந்தனைவணங்கினேனே. (28)

சீராரும்மாலிருஞ்சோலை திருமோகூர்
பாரோர்புகழும்வதரி வடமதுரை (29)

மன்னனைமாலிருஞ்சோலைமணாளனை
சொன்னவிலுமாழிப்படையானை கோட்டியூர். (30)

திருமங்கையாள்வார் திருவடிகளேசரணம்.

பூதத்தாழ்வார் பிரபந்தம்.

உணர்ந்தாய்மறைநான்கு மோதினாய்நீதி
மணந்தாய் மலர்மகள்தோள்மாலே—மணந்தாய்போய்
வேயிரும்சாரல் வியலிருஞாலம்சூழ்
மாயிருஞ்சோலைமலை. (1)

வெற்பென் றிருஞ்சோலை வேங்கடமென் றிவ்விரண்டும்
நிற்பென் றுநீமதிக்கும் நீர்மைபோல்—நிற்பென்
றுளங்கோயி லுள்ளம்வைத் துள்ளினேன் வெள்ளத்
திளங்கோயில்கைவிடேலென்று. (2)

பேயாழ்வார் பிரபந்தம்.

பண்டெல்லாம்வேங்கடம் பாற்கடல்வைகுந்தம்
கொண்டங்குறைவார்க்குக் கோயில்போல்—வண்டு
வளங்கிளரும்நீள்சோலை வண்பூங்கடிகை
இளங்குமரன் றன்விண்ணகர். (1)

நம்மாழ்வார் பிரபந்தம்.

கிளரொளியிளமை கெடுவதன்முன்னம்
வளரொளிமாயோன் மருவியகோயில்
வளரிளம்பொழில்சூழ் மாலிருஞ்சோலை
தளர்விலராகில் சார்வதுசதிரே. (1)

சதிரிளமடவார் தாழ்ச்சியைமதியாது
அதிர்குரல்சங்கத் தழகர்தம்கோயில்
மதிதவழ்குடுமி மாலிருஞ்சோலை
பதியதுவேத்தி யெழுவதுபயனே. (2)

பயனல்லசெய்து பயனில்லைநெஞ்சே
புயல்மழைவண்ணர் புரிந்துறைகோயில்
மயல்மிகுபொழில்சூழ் மாலிருஞ்சோலை
அயன்மலையடைவ ததுகருமமே. (3)

கருமவன்பாசம் கழித்துழன்றுய்யவே
பெருமலையெடுத்தான் பீடுறைகோயில்
வருமழைதவழும் மாலிருஞ்சோலை
திருமலையதுவே யடைவதுதிறமே. (4)

திறமுடைவலத்தால் தீவினைபெருக்காது
அறமுயலாழிப் படையவன்கோயில்
மறுவில்வண்சுனைசூழ் மாலிருஞ்சோலை
புறமலைசாரப் போவதுகிறியே. (5)

கிறியெனநினைமின் கீழ்மைசெய்யாதே
உறியமர்வெண்ணெ யுண்டவன்கோயில்
மறியொடுபிணைசேர் மாலிருஞ்சோலை
நெறிபடவதுவே நினைவதுநலமே. (6)

நலமெனநினைமின் நரகழுந்தாதே
நிலமுனமிடந்தான் நீடுறைகோயில்
மலமறுமதிசேர் மாலிருஞ்சோலை
வலமுறையெய்தி மருவுதல்வலமே. (7)

வலஞ்செய்துவைகல் வலங்கழியாதே
வலஞ்செய்யும் ஆயமாயவன்கோயில்
வலஞ்செய்யும்வானோர் மாலிருஞ்சோலை
வலஞ்செய்துநாளும் மருவுதல்வழக்கே. (8)

வழக்கெனநினைமின் வல்வினைமூழ்காது
அழக்கொடியட்டா னமர்பெருங்கோயில்
மழக்களிற்றினஞ்சேர் மாலிருஞ்சோலை
தொழக்கருதுவதே துணிவதுசூதே. (9)

சூதென்றுகளவும் சூதுஞ்செய்யாதே
வேதமுன்விரித்தான் விரும்பியகோயில்
மாதுறுமயில்சேர் மாலிருஞ்சோலை
போதவிழ்மலையே புகுவதுபொருளே. (10)

பொருளென்றிவ்வுலகம் படைத்தவன்புகழ்மேல்
மருளில்வண்குருகூர் வண்சடகோபன்
தெருள்கொள்ளச்சொன்ன வோராயிரத்துளிப்பத்து
அருளுடையவன்தா ளணைவிக்கும்முடித்தே. (11)

இதுவுமது.

முடிச்சோதியாயுனது முகச்சோதிமலர்ந்ததுவோ
அடிச்சோதிநீநின்ற தாமரையாயலர்ந்ததுவோ
படிச்சோதியாடையொடும் பல்கலனாய்நின்பைம்பொன்
கடிச்சோதிகலந்ததுவோ திருமாலேகட்டுரையே. (12)

கட்டுரைக்கில்தாமரைநின் கண்பாதங்கையொவ்வா
சுட்டுரைத்தநன்பொன்னுன் திருமேனியொளியொவ்வாது
ஒட்டுரைத்திவ்வுலகுன்னைப் புகழ்வெல்லாம்பெரும்பாலும்
பட்டுரையாய்ப்புற்கென்றே காட்டுமால்பரஞ்சோதி. (13)

பரஞ்சோதிநீபரமாய் நின்னிகழ்ந்துபின்மற்றோர்
பரஞ்சோதியின்மையில் படியோவிநிகழ்கின்ற
பரஞ்சோதிநின்னுள்ளே படருலகம்படைத்த எம்
பரஞ்சோதிகோவிந்தா பண்புரைக்கமாட்டேனே. (14)

மாட்டாதேயாகிலுமிம் மலர்தலைமாஞாலம்நின்
மாட்டாயமலர்புரையுந் திருவுருவம்மனம்வைக்க
மாட்டாதபலசமய மதிகொடுத்தாய் மலர்த்துழாய்
மாட்டேநீமனம்வைத்தால் மாஞாலம்வருந்தாதே. (15)

வருந்தாதவருந்தவத்த மலர்கதிரின்சுடருடம்பாய்
வருந்தாதஞானமாய் வரம்பின்றிமுழுதியன்றாய்
வருங்காலநிகழ்காலங் கழிகாலமாய்உலகை
ஒருங்காகவளிப்பாய்சீ ரெங்குலக்கவோதுவனே. (16)

ஓதுவாரோத்தெல்லா மெவ்வுலகத்தெவ்வெவையும்
சாதுவாய்நின்புகழின் தகையல்லாற்பிறிதில்லை
போதுவாழ்புனந்துழாய் முடியினாய்பூவின்மேல்
மாதுவாழ்மார்பினா யென்சொல்லியான்வாழ்த்துவனே. (17)

வாழ்த்துவார்பலராக நின்னுள்ளேநான்முகனை
மூழ்த்தநீருலகெல்லாம் படையென்றுமுதல்படைத்தாய்
கேழ்த்தசீரரன்முதலாக் கிளர்தெய்வமாய்க்கிளர்ந்து
சூழ்த்தமரர்துதித்தா லுன்தொல்புகழ்மாசூணாதே. (18)

மாசூணாச்சுடருடம்பாய் மலராதுகுவியாது
மாசூணாஞானமாய் முழுதுமாய்முழுதியன்றாய்
மாசூணாவான்கோலத் தமரர்கோன்வழிப்பட்டால்
மாசூணாவுன்பாத மலர்ச்சோதிமழுங்காதே. (19)

மழுங்காதவைந்நுதிய சக்கரநல்வலத்தையாய்
தொழுங்காதல்களிறளிப்பான் புள்ளூர்ந்துதோன்றினையே
மழுங்காதஞானமே படையாகமலருலகில்
தொழும்பாயார்க்களித்தா லுன்சுடர்ச்சோதிமறையாதே. (20)

மறையாயநால்வேதத் துள்நின்றமலர்ச்சுடரே
முறையாலிவ்வுலகெல்லாம் படைத்திடந்துண்டுமிழ்ந்தளந்தாய்
பிறையேறுசடையானும் நான்முகனுமிந்திரனும்
இறையாதலறிந்தேத்தவீற்றிருத்தலிதுவியப்பே. (21)

வியப்பாயவியப்பில்லா மெய்ஞ்ஞானவேதியனை
சயப்புகழார்பலர்வாழும் தடங்குருகூர்ச்சடகோபன்
துயக்கின்றித்தொழுதுரைத்த வாயிரத்துளிப்பத்தும்
உயக்கொண்டுபிறப்பறுக்கு மொலிமுந்நீர்ஞாலத்தே. (22)

இதுவுமது

முந்நீர்ஞாலம்படைத்த வெம்முகில்வண்ணனே
அந்நாள்நீதந்த வாக்கையின்வழியுழல்வேன்
வெந்நாள்நோய்வீய வினைகளைவேரறப்பாய்ந்து
எந்நாள்யானுன்னை யினிவந்துகூடுவனே. (23)

வன்மாவையமளந்த வெம்மாமனா நின்
பன்மாமாயப்பல்பிறவியில் படிகின்றயான்
தொன்மாவல்வினைத் தொடர்களைமுதலரிந்து
நின்மாதாள்சேர்ந்து நிற்பதெஞ்ஞான்றுகொலோ. (24)

கொல்லாமாக்கோல் கொலைசெய்து பாரதப்போர்
எல்லாச்சேனையு மிருநிலத்தவித்தவெந்தாய்
பொல்லாவாக்கையின் புணர்வினையறுக்கலறா
சொல்லாயானுன்னைச் சார்வதோர்சூழ்ச்சியே (25)

சூழ்ச்சிஞானச்சுடரொளியாகி என்றும்
ஏழ்ச்சிக்கேடின்றி யெங்கணும்நிறைந்தவெந்தாய்
தாழ்ச்சிமற்றெங்கும் தவிர்ந்துநின்தாளிணைக்கீழ்
வாழ்ச்சி யான்சேரும் வகையருளாய்வந்தே. (26)

வந்தாய்போலேவந்து மென்மனத்தினைநீ
சிந்தாமல்செய்யா யிதுவேயிதுவாகில
கொந்தார்காயாவின் கொழுமலர்திருநிறத்த
வெந்தாய் யானுன்னை யெங்குவந்தணுகிற்பனே. (27)

கிற்பன்கில்லேனென்றிலன் முனநாளால்
அற்பசாரங்க ளவைசுவைத்தகன்றொழிந்தேன்
பற்பல்லாயிர முயிர்செய்தபரமா நின்
நற்பொற்சோதித்தாள் நணுகுவதெஞ்ஞான்றே. (28)

எஞ்ஞான்றுநாமிருந் திருந்திரங்கிநெஞ்சே
மெய்ஞ்ஞானமின்றி வினையியல்பிறப்பழுந்தி
எஞ்ஞான்றுமெங்கு மொழிவறநிறைந்துநின்ற
மெஞ்ஞானசோதிக் கண்ணனைமேவுதுமே. (29)

மேவுதுன்பவினைகளை விடுத்துமிலேன்
ஓவுதலின்றி யுன்கழல்வணங்கிற்றிலேன்
பாவுதொல்சீர்க்கண்ணா என்பரஞ்சுடரே
கூவுகின்றேன்காண்பா னெங்கெய்தக்கூவுவனே. (30)

கூவிக்கூவிக்கொடுவினைத்தூற்றுள்நின்று
பாவியேன்பலகாலம் வழிதிகைத்தலமருகின்றேன்
மேவியன்றுநிறைகாத்தவனுலகமெல்லாம்
தாவியவம்மானை எங்கினித்தலைபெய்வனே. (31)

தலைப்பெய்காலம் நமன்றமர்பாசம்விட்டால்
அலைப்பூணுண்ணு மவ்வல்லலெல்லாமகல
கலைப்பல்ஞானதமென்கண்ணனைக்கண்டுகொண்டு
நிலைபெற்றெனனெஞ்சம் பெற்றதுநீடியிரே. (32)

உயிர்களெல்லா வுலகமுமுடையவனை
குயில்கொள்சோலைத் தென்குருகூர்ச்சடகோபன்
செயிரில்சொல்லிசைமாலை யாயிரத்துளிபபத்தும்
உயிரின்மேலாக்கை யூனிடையொழிவிக்குமே. (33)

இதுவுமது

செஞ்சொற்கவிகாளுயிர்காத்தாட்செய்மின் திருமாலிருஞ்சோலை
வஞ்சக்கள்வனமாமாயன் மாயக்கவியாய்வந்து என்
நெஞ்சுமுயிருமுள்கலந்து நின்றாரறியாவண்ணம் என்
நெஞ்சுமுயிருமவையுண்டு தானேயாகிநிறைந்தானே. (34)

தானேயாகிநிறைந் தெல்லாவுலகுமுயிரும்தானேயாய்
தானேயானென்பானாகித் தன்னைத்தானேதுதித்து எனக்குத்
தேனேபாலேகன்னலேயமுதே திருமாலிருஞ்சோலை
கோனேயாகிநின்றொழிந்தா னென்னைமுற்றுமுயிருண்டே. (35)

என்னைமுற்றுமுயிருண் டென்மாயவாக்கையிதனுள்புக்கு
என்னைமுற்றும்தானேயாய் நின்றமாயவம்மான்சேர்
தென்னன் திருமாலிருஞ்சோலைத் திசைகைகூப்பிச்சேர்ந்தயான்
இன்னம்போவேனேகொலோ என்கொலம்மான் திருவருளே. (36)

என்கொலம்மான்திருவருள்க ளுலகுமுயிரும்தானேயாய்
நன்கென்னுடலம்கைவிடான் ஞாலத்தூடேநடந்துழக்கி
தென்கொள்திசைக்குத் திலதமாய்நின்ற திருமாலிருஞ்சோலை
நங்கள்குன்றம்கைவிடான் நண்ணாவசுரர்நலியவே. (37)

நண்ணாவசுரர்நலிவெய்த நல்லவமரர்பொலிவெய்த
எண்ணாதனகளெண்ணும்நன்முனிவ ரின்பம்தலைச்சிறப்ப
பண்ணார்பாடலின்கவிகள் யானாய்த்தன்னைத்தான்பாடி
தென்னாவென்னுமென்னம்மான் திருமாலிருஞ்சோலையானே. (38)

திருமாலிருஞ்சோலை பானேயாதிச் செழுமூவுலகும்தன்
ஒருமாவயிற்றினுள்ளே வைத் தூழியூழி தலையளிக்கும
திருமாலென்னையாளுமால் சிவனும்பிரமனும்காணாது
அருமாலெய்தியடிபரவ அருளையீந்தவம்மானே. (39)

அருளையீயென்னம்மானேயென்னும முக்கணம்மானும
தெருள்கொள்பிரமனம்மானும் தேவர்கோனும்தேவரும்
இருள்கள்கடியும்முனிவரு மேத்துமம்மான திருமலை
மருள்கள்கடியும்மணிமலை திருமாலிருஞ்சோலைமலையே. (40)

திருமாலிருஞ்சோலைமலையே திருப்பாற்கடலேயென்தலையே
திருமால்வைகுந்தமே தண்திருவேங்கடமேயெனதுடலே
அருமாமாயத்தெனதுயிரே மனமேவாக்கேக ருமமே
ஒருமாநொடியும்பிரியா னென னூழிமுதல்வனொருவனே. (41)

ஊழிமுதல்வனொருவனேயென னு மொருவனுலகெலலாம்
ஊழிதோறும்தனனுள்ளே படைத்துக்காத்துக்கெடுத்துழலும
ஆழிவண்ணனென னம்மா னந்தண்திருமாலிருஞ்சோலை
வாழிமனமேகைவிடேலுடலு முயிருமமங்கவொட்டே. (42)

மங்கவொட்டுனமாமாயை திருமாலிருஞ்சோலைமேய
நங்கள்கோனே யானேநீயாகியென்னையளித்தானே
பொங்கைமபுலனும் பொறியைந்துமக ருமேந்திரியமைம்பூதம்
இங்கிவ்வுயிரேய்பிரகிருதி மானாங்காரமனங்களே. (43)

மானாங்காரமனங்கெட ஐவர்வன்கையாமங்க
தானாங்காரமாய்ப்புக்குத தானேதானேயானானை
தேனாங்காரப்பொழில்குருகூர்ச சடகோபனசொல்லாயிரத்துள
மானாங்காரத்திவைபத்தும் திருமாலிருஞ்சோலைமலைக்கே. (44)

திருமாலிருஞ்சோலைமலை யென்றேனென்ன
திருமாலவந்தென்னெஞ்சு நிறையப்புகுந்தான்
குருமாமணியுந்துபுனல் பொன்னிதென்பால்
திருமால்சென்றுசேர்விடம் தென்திருப்பேரே. (45)

திருப்பேர்நகரான் திருமாலிருஞ்சோலை
பொருப்பேயுறைகின்றபிரா னின்றுவந்து
இருப்பேனென் றென்னெஞ்சுநிறையப்புகுந்தான்
விருப்பேபெற் றமுதமுண்டுகளித்தேனே. (46)

நம்மையாழ்வார்திருவடிகேளே சரணம்.

முற்றிற்று.

—∘○⁂○∘—

சாற்றுமுறை

பெரியாழ்வார் அருளிச்செய்தது.

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா உன்
சேவடி செவ்வித் திருக்காப்பு

அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றியாயிரம் பல்லாண்டு
வடிவாய்நின் வலமார்பினில் வாழ்கின்றமங்கையும் பல்லாண்டு
வடிவார்சோதி வலத்துறையுஞ் சுடராழியும் பல்லாண்டு
படைபோர்புக்கு முழங்குமப்பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே.

பெரியஜீயர் அருளிச்செய்தது.

ஸர்வதேசதசாகாலேஷ்வவ்யாஹதபராக்ரமா
ராமாநுஜார்யதிவ்யாஜ்ஞாவர்த்ததாமபிவர்த்ததாம்.

கந்தாடையண்ணன் அருளிச்செய்தது.

ராமா நுஜார்யதிவ்யாஜ்ஞாப்ரதிவாஸரமுஜ்வலா
திகந்தவ்யாபிநீபூயாத்ஸாஹிலோகஹிதைஷிணீ.

உடையவர் அருளிச்செய்தது.

ஸ்ரீமந்ஸ்ரீரங்கஸ்ரீயமநுபத்ரவாமநுதிநம்ஸம்வர்த்தய
ஸ்ரீமந்ஸ்ரீரங்கஸ்ரீயமநுபத்ரவாமநுதிநம்ஸம்வர்த்தய.

பெரியஜீயர் அருளிச்செய்தது.

நமஸ்ரீசைலநாதாயகுந்தீநகரஜந்மநே
ப்ரஸாதலப்தபரமப்ராப்யகைங்கர்யசாலிநே.

நம்பெருமாள் அருளிச்செய்தது.

ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம்
யதீந்த்ரப்ரவணம்வந்தே ரம்யஜாமாதரம்முநிம்.

மடத்தும்பிள்ளை அருளிச்செய்தது.

வாழி திருவாய் மொழிப்பிள்ளை மாதகவால்
வாழு மணவாள மாமுனிவன்—வாழியவன்
மாறன் திருவாய் மொழிப்பொருளை மாநிலத்தோர்
தேறும் படியுரைக்குஞ் சீர்.

ப்ரதிவாதிபயங்கரமண்ணன் அருளிச்செய்தது.

செய்யதாமரைத் தாளிணைவாழியே
சேலைவாழி திருநாபிவாழியே
துய்யமார்பும் புரிநூலும்வாழியே
சுந்தரத்திருத் தோளிணைவாழியே
கையுமேந்திய முக்கோலும்வாழியே
கருணைபொங்கிய கண்ணிணைவாழியே
பொய்யிலாத மணவாளமாமுனி
புந்திவாழி புகழ்வாழி வாழியே

அடியார்கள் வாழ அரங்க நகர்வாழ
சடகோபன் தண்தமிழ்நூல் வாழ—கடல்சூழ்ந்த
மன்னுலகம் வாழ மணவாள மாமுனியே,
இன்னமொரு நூற்றாண் டிரும்.

ஆண்டாள் வாழித்திருநாமம்

வெண்பா.

வேதப்பிரான்பட்டரருளிச்செய்தது.

கோதைபிறந்தவூர்கோவிந்தன்வாழுமூர்
சோதிமணிமாடமதோன் றுமூர்—நீதியால்
நல்லபத்தர்வாழுமூர் நான்மறைகளோதுமூர்
வில்லிபுத்தூர் வேதக்கோ னூர்.

பாதகங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும்
வேத மனைத்துக்கும் வித்தாகும்—கோதைதமிழ்
ஐயைந்து மைந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதும் வம்பு.

அப்பிள்ளையருளிச்செய்தது.

திருவாடிப்பூரத்துச் செகத்துதித்தாள்வாழியே
திருப்பாவைமுப்பதும் செப்பினாள்வாழியே
பெரியாழ்வார்பெற்றெடுத்த பெண்பிள்ளைவாழியே
பெரும்பூதூர்மாமுனிக்குப் பின்னானாள்வாழியே
ஒருநூற்றுநாற்பத்து மூன்றுரைத்தாள்வாழியே
உயரரங்கர்க்கேகண்ணியுகந்தளித்தாள்வாழியே
மருவாருந்திருமல்லிவளநாடிவாழியே
வண்புதுவை நகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே.

நம்மாழ்வார் வாழித்திருநாமம்

திருக்குருகைப் பெருமாள்தன் திருத்தாள்கள் வாழியே
திருவான திருமுகத்துச் செவியென்றும் வாழியே
இருக்குமொழி யென்னெஞ்சில் தேக்கினான் வாழியே
எந்தையெதி ராசற் கிறைவனார் வாழியே
கருக்குழியில் புகாவண்ணம் காத்தருள்வோன் வாழியே
காசினியில் ஆரியனைக் காட்டினான் வாழியே
வருத்தமற வந்தென்னை வாழ்வித்தான் வாழியே
மதுரகவி தம்பிரான் வாழி வாழி வாழியே

வாழித்திருநாமம் ஸம்பூர்ணம்.

ஜீயர்திருவடிகளே சரணம்.



ஸ்ரீ

ஸ்ரீ ராமஜெயம்.

அழகர்கோயில் மான்மியம்.

கடவுள்வாழ்த்து.

விஷ்ணுதுதி.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்னிறமா மெனப்புவனம் படைத்துக் காத்துப்
புயனிறமாய்த் தழனிறமாய்த் துடைத்துப் போந்து
முந்நிறமாய்த் திளைத்துயர்ந்து முழங்கு நார
முடுகிடவே நீண்டவட விலைமேன் முந்தித்
தொன்னிறமா மண்டரண்ட மெண்ணில் கோடி
துலங்கிடவே வயிற்றமைத்துத் தூய தாய
தன்னிறமாங் குழவியெனப பொலிந்து தோன்றுந்
தலைவனிரு தாளிணையென் தலைமேல் வைப்பாம்.

வேறு.

யாதவர் குலத்துட்டோன்றி யிமையவர்க் கிடர்கள் செய்யும்
பாதகர் மடியவேபார்ப் பாரம தொருவப் பார்த்தன்
றூதனா யைந்தூர்வேண்டிச் சூதனாய்த் தேரு மூருஞ்
சீதரா னைவாசு தேவனை வணக்கஞ் செய்வாம்.

வேறு.

தீய னாரெழுபிறப்பினுஞ் செய்ததீ வினைகண்
மாய நாரண னெட்டெழுத் தினைவழி யொழுகச்
சேய வாயரங் கேசனார் மகிழ்திருப் பணிசெய
ஆய னார்திருத் தாளிணை போற்றுவ மறிவால்.

அநுமார்துதி.

அஞ்சிலே யொன்றுபெற்றா னஞ்சிலே யொன்றைத் தாவி
அஞ்சிலே யொன்றாறாக வாரியர்க் காக வேகி
அஞ்சிலே யொன்றுபெற்ற வணங் கைக்கண் டயலா ரூரில்
அஞ்சிலே யொன்றை வைத்தா னவனெம்மை யளித்துக் காப்பான்.

கலைமகள் துதி.

பொத்தகம் படிகமாலை குண்டிகை பொருள்சேர் ஞான
வித்தகம் தரித்தசெங்கை விமலையை யமலை தன்னை
மொய்த்த கொந்தளக பாரமுகிண் முலைத்த வளமேனி
மைத்தகு கருங்கட் செவ்வா யணங்கினை வணங்கல் செய்வாம்.

நூல்.

திருவுறைபுந திருமார்பனுகிய திருமாலினது திருவுந்தியிற்றோ ன்றிய திசைமுகக்கடவுள் சிருட்டித்த, இடமகன்ற இபபூமண்டலத் தின்கண், இருடியர் தவமபுரிவதற்குத் தகுந்த தானமாய், புராணங்க ளென்னும் பைங்கூழ் விளையும் நல்ல செய்நிலனுய அடவிகட்கெல்லா மரசெனற் பாலதாய் விளங்காநினற "நைமிசாரணியத்தில்" வசிக்கி ன்றவர்களும், வேதவேதாந்தஙகளை ஐயநதிரிபற அறிநதவர்களும், பிரமருத்திரேந்திராதி தேவர்களை நிகாததவர்களும், சொரூபத்தியா னஞ் செய்கின்றவர்களுமு, ஸ்ரீ ஹரிகதாசங்கீாததன சீலர்களுமாகிய சௌனகாதி மகரிஷிகள், ஓர்தினம பிராதக்காலததிலெழுநது ஸ்நான சந்தியாவந்தன ஜெபஹோமாதி முதலாகிய நிததிய கர்மானுஷ்டானங் களை முடிததுக்கொண்டு அந்த நைமிசாரணியததிலோர்பால் வரும் போது, அவ்விடத்தில் முனிவாகளுட் சிரேஷ்டருமு, பத்மாசனததி லிருந்து இருக்கு தைத்திரியம், சாமம், அதாவணம், என்னும நான்கு வேதங்களையும, ஆயுள்வேதம, அருததவேதம, தனுர்வேதம், காந்த ருவவேதம் என்னும் உபவேதங்களையும், வேதாநதம, வைசேடிகம், பாட்டம, பிரபாகரம, பூருவமீமாஞ்சை, உததரமீமாஞ்சையெனனும் ஆறுசாஸ்திரங்களையும், மச்சியம, கூர்மம, வராகம, வாமனம், பிரமம், வைணவம, பாகவதம், சைவம, இலிங்கம, பௌடிகம, நாரதியம், காருடம், பிரமகைவர்த்தம், காநதம, மார்ககண்டேயம், ஆக்கினேயம் பிரமாண்டம், பதுமம் என்னும் பதினெண்புராணங்களையும், சிருத்தி ரம், பிருகதாரண்ணியம், சுவேதாசுவதரம், கைவல்லியம், காலாக்கினி கடம், வல்லி, காத்தியாயனம், பிரமம், நாராயணம, அங்கிசம், பரமா ங்கிசம், பாற்கரம் பிரமபிந்து, ஆருணி, அமிர்தபிந்து, பகுவபஞ்சம், பிரமசாபாலம், தேசோபிந்து, வாசியாயனீயம், போதாயனீயம, ஆசு வலாயனீயம், சாங்கியாயனீயம், வாசிராயனீயம், சௌனகீயம், சிவசங் கற்பம், சிரவணம், பாராகம்; கிம்புரோடியம், மாண்டூகம், முண்டிரம், மௌண்டிரம் என்னும், முப்பத்திரண்டு உபநிடதங்களையும், அக்கர

விலக்கணம், இலிகிதம், கணிதம், வேதம், புராணம், வியாகரணம், நீதிசாத்திரம், சோதிடசாத்திரம், தருமசாத்திரம், யோகசாத்திரம், மந்திர சாத்திரம், சகுனசாத்திரம், சிற்பசாத்திரம், வைத்தியசாத்திரம், உருவசாத்திரம், இதிகாசம், காவியம், அலங்காரம், மதுரபாடணம், நாடகம், நிருத்தம், சத்தப்பிரமம், வீணை, வேணு, மிருதங்கம் தாளம், அத்திரபரீட்சை, கனகபரீட்சை, இரதபரீட்சை, சுகபரீட்சை, அசுவபரீட்சை, இரத்தினபரீட்சை, பூமிபரீட்சை, சங்கிராம விலக்கணம், மல்யுத்தம், ஆக்ருடணம், உச்சாடணம், வித்துவேடணம், மதனசாத்திரம், மோகனம், வசீகரணம், இரசவாதம்,காந்தருவவாதம், பைபீலவாதம், கவுத்துகவாதம், தாதுவாதம், காருடம், நட்டம், முட்டி, ஆகாயப்பிரவேசம், ஆகாயகமனம், பரகாயப்பிரவேசம், அதிரிசயம், இந்திரசாலம், மகேந்திரசாலம், அக்கினித்தம்பம், சலத்தம்பம், வாயுத்தம்பம், திட்டித்தம்பம், வாக்குத்தம்பம், சுக்கிலத்தம்பம், கன்னத்தம்பம், கட்கத்தம்பம், அவத்தைப் பிரயோகமென்னும் அறுபத்துநான்கு கலைக்கியானங்களையும் பாரத இராமாயண முதலிய இதிகாசங்களையும். கற்றுணர்ந்தவரும், வேதசுரங்களையிடமறிந்து மெலித்தும், வலித்தும், உரைக்கத்தக்கவரும், பகுதி விகுதியறிந்து பிரகணத்திற்குத் தக்கபடி சொற்களை உபயோகிக்கத் தக்கவரும், உயிரக்ஷரம், மெய்யக்ஷரம், தளை, மாத்திரை, தப்பாமல் உச்சரிக்கவல்லவரும், மந்திரங்களை யந்திரதேவதா கல்பங்களுடன் அறிந்தவரும் சகலவேதாகம புராணங்களுடைய பொருள்களை நிச்சயித்து நவிலத்தகுந்தவரும் வைதீகலௌகீக வாக்கியங்களை ஓசை குன்றாமல் இணைக்கத்தக்கவரும, சொற்களுக்கெல்லாம் செம்பொருள் ஆக்கப்பொருள், குறிப்புப்பொருள்களை நிச்சயிக்க வல்லவரும், தர்ம சூட்சுமத்தைச் சந்தேகமறப் பகர வல்லவரும், சமயோசிதமாய்ப் பேசுந் திறமை வாய்ந்தவரும், சுக்கிராச்சாரியார் முதலிய முன்னோர்களாற்செய்த அறநூலையறிந்து உபயோகிக்கக் கூடியவரும்,! இங்கிதங்களாலேயே இதயமறியத்தக்கவரும், விதிவழுவாது அனுஷ்டானம் புரிபவரும், கடவுளைத் தொழுவதும், துதிப்பதும் தியானிப்பதுமே தமது கருமமாகக் கொண்டவரும், தேகதத்துவங்களை ஐயமற வுணர்ந்தவரும், காமக்குரோதாதிகளைக் கடிந்தவரும், பஞ்சேந்திரியங்களைத் தம்வயமாக்க வல்லவரும், சரிதை, கிரியை, யோகம், ஞானமென்னும் பூசையியல்புகளை முறையே யுணர்ந்தவரும், அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம் ஈசத்துவம், வசித்துவமெ

ன்னும், அஷ்டமாசித்திகளிற் றெளிந்தவரும், இயமம், நியமம், ஆத னம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி யென்னும் அஷ்டாங்கயோகமார்க்கங்களிற் பழகியவரும், பிர்மநிஷ்டரும், பிரமதேஜஸை யடைந்தவரும், சகலமுனிவர்களாலும், பூஜிக்கப்பட்டவருமாகிய சூதமகா முனிவரைக்கண்டார்கள்.

அவ்வாறு கண்டவுடன் முறைப்படி வணங்கி ஸ்ரீமன் நாராயண ருடைய பக்தியிலீடு பட்டவர்களாய் மேற்கண்ட நைமிசாரணிய வா சிகளாகியரிஷிகளெல்லாருமொன்றுகூடி அந்தச்சூதமகா முனிவரைப் பார்த்து ஓ மகானுபாவரே! ஓ புராணசிரேஷ்டரே!! ஓ சூதமாமுனி யே!!! உம்மிடத்தினின்றும் பர்வதங்கள், சமுத்திரங்கள், புண்ணிய நதிகள், தீர்த்தங்கள், தீவுகள், அத்தீவுகளிலுள்ள பிரதானபட்டண ங்கள், அநேகவிதமான தர்மங்கள், பிராமணக்ஷத்திரிய வைசிய சூத்திரரெ ன்னும் நான்குவர்ணத்தாரும் செய்யவேண்டிய கிரியைகள் முதலிய வைகளின் விருத்தாந்தங்களும், சூரியனையும், சந்திரனையும் பிரதான மாயுள்ள புண்ணிய அரசர்களின் வம்சங்களும் அவர்கள் விசித்திரக் கதைகளும், பூவுலகத்திலுள்ள புண்ணியக்ஷேத்திரங்களும், விஷ்ணு சம்பந்தமாயும், சிவசம்பந்தமாயுமுள்ள சரித்திரங்களும் எங்களாற் கேட்கப்பட்டிருப்பினும், மற்றொரு விசேஷ விருத்தாந்தத்தையும் இப்பொழுது கேட்கவிருப்பமுற்றவர்களாயிருக்கின்றோம். அதாவது:- எந்தக்கதாப் பிரசங்கத்தின் சிரவணமாத்திரத்தில் மானிடம் பாவங்க ளின்று நீங்குகின்றார்களோ? அக்கதையைக் கேட்கவிரும்புகின்றோம் சந்திரனை நிகர்த்த உம்முடைய முகத்தினின்றும் நாவழியாகவுண்டா கிய அமுதம்போன்ற கதைகளை அடிக்கடி செவியுற்றிருப்பினும், பூர் ண திருப்தியை யடையாதவர்களாயிருக்கின்றோம். ஏ. புண்ணியசொ ரூபரான சூதமுனிவரே! நீர் வியாசபகவான் அனுக்கிரகத்தினால் சம ஸ்தமும் நன்கறிந்திருக்கின்றீர், அவ்வல்லபத்தால் வராகபுராணத்தில் விருஷபாத்திரி யென்னும் புண்ணிய க்ஷேத்திரத்தின் மகிமை உம் மால்முன் கூறப்பட்டிருப்பினும் விரிந்ததல்லவாதலின், பாண்டிநாட் டிலுள்ள அந்தக்ஷேத்திரத்தின் மகிமையைச் சவிஸ்தாரமாகக்கேட்க அவாவுற்றனம்.

ஆதலின் அந்தக்ஷேத்திரத்திற்கு விருஷபாத்திரியென்னுநாமம் எவ்வாறுண்டாயிற்றென்பதையும் ஆங்கு நூபுரகங்கை யுற்பத்தியான விதத்தையும், அங்கெழுந்தருளியிருக்கும் எம்பெருமானார் எவருக்குப்பிரத்தியக்ஷமாயினாரென்பதையும், அத்தலத்தில் மெய்த்தவஞ்செய்து உத்தமசித்தி பெற்றவர் யாவரென்னும் விபரத்தையும் மிக விரிவாபெடுத்துரைக்க வேண்டுமெனமிக்க அன்போடு வினவினர்.

புராணிக சிரேஷ்டரான சூதமகாமுனிவர் முனிவர்களைநோக்கி நைமிசாரணியவாசிகாள்! நும்மொழிகளைக் கேட்டுமிகக்களிப்படைந்தனன். நும்மாற் கேட்கப்பெற்ற இவ்வற்புதமான புண்ணியகதையானது சொல்வோரையுங் கேட்டானந்திப்போரையும் சந்தேகமின்றிச் சாவபாவங்களினின்றும், அப்பொழுதே நீக்கக்கூடியது இத்தகைய சிரவணத்தை நீங்கள் விரும்பியபடியால் மனோபீஷ்டத்தை நிறைவேற்றுகின்றேனென்று கூறித்தபோதனர்களை ஆசனங்களிலமரச்செய்து விஷ்ணு சொரூபரும், தவத்தினால் அளவிடக்கூடாத பிரமதேஜஸையுடைந்தவரும், இருக்குமுதலிய நான்குவேதங்களையும், வியாகரண முதலாகிய ஆறுசாஸ்திரங்களையும், மச்சியமுதலான பதினெண் புராணங்களையும், அக்ஷரவிலக்ஷணை முதலிய அறுபத்திநான்கு கலைக்கியானங்களையும், மனுவிக்ஞான முதலிய சகலசாஸ்திரங்களையும், நன்குணர்ந்தவராகிய ஸ்ரீ வியாசபகவானை நமஸ்கரித்துப் பின்னர்தாமும் ஓர் தவசிலிருந்து சொல்வாராயினர்,

தபசிகாள்! மற்றெவ்விடத்தும், மனதைச் செலுத்தாமல் திருமாலிருஞ்சோலைமலையென்னும் விருஷபாத்திரியாகிய புண்ணிய க்ஷேத்திரத்தின் மகிமையைச் சொல்வேன் கேட்பீர்களாக.

வாரிதியைத்தனக்குரிய வஸ்திரமாக மருங்கிற் கொண்டிருக்கின்றமாநிலமாகிய நானிலங்களினுஞ் சிறப்புற்று மறப்பற்ற தவசிகளாலே தவமுற்றத்தக்கதான மகாமேருகிரி முதற் பொதிகையீறாகவுள்ளவுத்தமந்தங்கிய வத்திரிகளிலெல்லாம் மிக்கநலனிறைந்து சத்தியலோகம்வரை நிமிர்ந்து இணைசொலற்கரிதாய் நிலவுகின்றஅந்தவிருஷபாத்திரியென்னு மலையானது வராகமலைக்குக் கிழக்கே ஆறுயோசனைதூரத்திலும், காவிரிக்குத் தெற்கே ஆறுயோசனை தூரத்திலும், கீழ்சமுத்திரத்திற்கு மேற்கே ஏழுயோசனை தூரத்திலும், மலயவரைக்குவடக்கே பத்துயோசனை தூரத்திலுமிருக்கின்றது.

இப்பெருந்தலத்து ளெப்பெருங்கிரியையு மொப்புவமை யாகச் செப்புதற்கரிய அற்புதநிறைந்த கற்பகம்போலுந் தற்பரன்வளரும் இப்பெருஞ்சயிலம் இடபத்தைப் போன்றும், பசுவைபபோன்று மிருத்தலால அமரர் கருடகாந்தருவ கின்னரர் கிம்புருடர் சித்தர் வித்தியாதரர் முனிவர் மனிதருட் சிறந்தோர் முதலிய யாவரும் விருஷபாததிரி யெனவிருபபோடு திருபபெயரிட்டுக் கொண்டாடினார்கள்.

ஆகலால் இப்பருவதமானது மற்ற அசலங்களுக்குச் சிரசில் வைத்துமுடிக்கின்ற உச்சிமலர் போன்று மெச்சத்தக்க அழகுவாய்ந்து எனறும, பிரகாசித்திருக்கின்றது. உம்பலருகுவரை ஓங்கியுயர்ந்த விருஷபாத்திரியின்மேல் நீங்காதிருக்கும் மதகரிகளும், பாங்காயதற்குச் சமீபத்திலுலாவும் மேகங்களும் ஒன்றுக்கொன்று வேற்றுமை தோன்றாதிருததலால தந்தியினங்கள் அம்மஞ்சுததிரள்களைத்தம்மினமெனச சிந்தித்து அவற்றோடு சேர்வதற் கோடியோடியினத்தைக்காணாது மருட்சியடைந்து நிற்கும். இலட்சக் கணக்காயுள்ள வரையாடுகள் தமமிச்சையாகவே அச்சமில்லாமற் குதிக்கும்போது அவற்றின் பாதங்களால் மற்றுண்டு குதிககுமபச்சை ரத்தினங்களின் மிச்சமாகிய வொளியினால் அம்மறியினங்கள் பச்சைக் குதிரைகள் போலத் தோற்றும். அங்கமபெருத்த மலைப்பாம்பின் சருமங்கள்புங்கர் வாழ் நகரின் துங்கக்கொடிகள்போல அங்கங்கே தொங்கிக்கொண்டிருக்கும். தவறிய கவரிமான மயிர்த்தொகுதிகள் அருவிநீர் பாய்வதுபோல அழகுபெற வரிசையாகத தோற்றும். முற்றிய மூங்கிலுதிர்த்த முத்துக்கள் சிற்றிடைசசிங்கத்தாற கொலையுண்ட அத்தியினுடைய விரத்தபபெருக்கிற் றோய்ந்து கூட்டங் கூட்டமாய்க கிடப்பதானது பததினிப பெண்களின் உததமமாயிற சிததிரக்குங்குமத்திற்றோய்ந்த முத்துமாலை களைப போன்று விளங்கின. செங்கழுநீ ரலர் பொங்கிமேற்றிகழ வெங்கும பரவுந துங்கபபுனல்சேர் அருவிப்பெருக்கானது சங்கரன் முடிமேல் மங்காதிருககுங் கங்காஜலம் வந்ததுபோலிருக்கும்.

ஏமஹாிஷிகளே! அந்தப்புண்ணியபருவதத்தின்வளத்தை இன்னுங்கேட்பீர்களாக, அம்மலையானது தன்னைச்சார்ந்த பூங்காவனத்திற்புதுப்போதலர்ந்து தேஞ்சாற்றைச் சொரிந்திடக்கண்ட வண்டினஞ்சென் றப்பாங்குளதேனைப் பருகியேமருண்டு பேடைகளுடன்

கிதங்கள் பாடிப் பொலிந்ததை யுணர்ந்த ஆண்கிள்ளைகள் தம்பெடை களோடு கொஞ்சிக்குலாவி மிஞ்சியேசென்று மாங்கனி ரசத்தைப் பாங்குடன் குடித்து மகிழ்தலையும், பெட்டையானைகளை வாட்ட மடையா நாட்டமாக மதயானைகள் துதிக்கையினுற் றாக்கித் திரிகின் றதையும் ஆகாயமளாவி வளர்ந்திருக்கின்ற சந்தனச் சோலைகளினெ ருக்கத்திற் சந்திரனனவன் புகுந்து செல்ல அச்சோலைகள் இடை யிடையே சுவர்ணபூப்பூத்தன போன்று துலங்குதலையும், காட்டி யானைகள் ஈட்டமாக மரக்கிளைகளை யொடித்துவண்டுகளை யோட்டித் தூன்றிய தேனிறாலை மிஞ்சியரசங்களா லெடுத்து கருப்பந்தரித்த பெட்டையானைகட் கூட்டுதலையும், மலைத்தேன்கள்பொங்கிப்பெரு கிக் குறமகளிர்கிழங் கெடுத்தபள்ளங்கடோறும், பரவிநிறைந்து நிற் றலையும், தாவியோடும் பெண்குரங்குகள் அருவியினீரை வெருவி வாரி யிறைக்க மந்திக் குரங்குகள் மரங்களின் மீதிருந்து புஷ்பங் களின் தேனைபபதிலா யுதிர்க்கின்றதையும், மரகதப பாறைகள் பச்சை யொளிகளை மிகுததுபபரப்பக் காட்டாவின் கன்றுகள் பசும புல்லீதெனக் கருதி விரைந்தோடிக் கவ்வித் திகைக்கின்றதை யும், கதிர்மதிவடிவைக் கவர்ந்துகொண்ட மாணிக்கப் பாறையே அக்கதிர்மதியாக வெக்காலத்தும் பிரகாசிக்கின்றதையும, தினைப்புனக் காவலை யிணக்கமாப்புரியும் மாந்தளிர் போலும் வாய்ந்த மேனியை யுடைய வேடுவமங்கையர் அந்தரப்பக்ஷி வந்திரங்காது செங்கைவ ளையலொலிக்கக் கவண்கல்லாக வைத்தெறிகின்ற மாணிக்கங்கள் ஆகா யத்திருநது வாகாயுதிரும் உடுக்கணங்கள்போல விழுகின்றதையும் கானுறுகடோறும் நானாவித ரத்தினங்கள் பிரகாசித்துக் கொண் டிருபபதால் அவ்வாறுகள் பலநட்சத்திரங்களைக் கூட்டமாகக் கொ ண்ட வாகாயத்தைப் போன்று பிரகாசித்தலையும, சற்குணங்களா கிய சமுகதிரததின் எல்லைகண்டவர்களாயும் வேதவேதாந்தங்களை ஓதாநிற் கின்றவர்களாயுமுள்ள முனிபுங்கவர் செய்கின்ற ஓமப் புகைகளானவை பர்வதங்களினுடைய சிகரங்களைப் போன்று மேலெ ழுந்து பிரகாசித்தலையும் விஞ்சையஸ்திரீகளுடைய செம்பஞ்சுதோய் ந்திருக்கின்ற காலடிகள் மாணிக்கபபாறையிற் பிரகாசமறைநது மரக தப்பாறையிற் பிரகாசிக்கின்றதையும், தேவலோகக்கணிகையர் ஆவ லோடணிந்திருந்த பாரிஜாதப்பூந் தொடைகளைக்கழித்துப்போட அவைகள்அங்கங்கே அருவிபோன்று ஒழுங்காய்க்கிடத்தலையும்தேனை யுமிழுந் தினைப்புனக்காவல் வேடக்குமரியர் வைத்திருக்கின்ற சிறு

பறைகளை மந்திகள் கவர்ந்துகொண்டு தித்திமித்தோமென மத்தளங் கொட்டுதலையும், மாமரச்சோலையில் மகிழ்வா யமர்ந்திருக்கின்ற பூங்குயில்கள் பாடகர்நிகர்ப்பச் சங்கீதம்பாடுதலையும், ஆங்கு பூத்துச்சிதறு மலர்த்தேனருந்தும வண்டினங்கள் தூருத்தியி னிசைபோல ரீங்கார மிடுதலையும், குரங்குகள் கரங்களால் வெண்சாமரைவீசுதல் மரகிளைகளைப் பிடித்தசைத்தலையும, உடையதாய் செங்கமல நீரோடை சூழுஞ் சிங்காரவனங்களில இச்சையோடு பச்சைமயில்கள் நிருத்தஞ் செய்யவும், சந்திரவதன சுந்தரவடிவ கந்தருவபெண்கள் நூபுரகங் காள் கானத்திற் கன்புகூர்ந்து தம்நடைநடக்க எந்நிலமாதரும வல்லர லவென்றுன்னிதமாக நன்னடைநடந்து செல்லுங்கால அங்குள்ளவாசப்பூங்காவில் நேசபபேடையோ டுலாவும, அன்னத்தினடையைக்கண்ணுற்று வெட்கி அயமின்னார் மற்றடி வைக்கச் சிற்றடியெடாமல் தலைகவிழ்ந்து சற்றே நின்று அவ்வனனங்களின்முன் ஒயிலாய் நடத்தலுதவாதென்றெண்ணி மமதையைவிட்டுச் செலலவும, கோகிலமொழிசேர் வேடுவமாதா கூடிக்குலாவி ஆடுஞ்சமயம சந்திரன் திடுமெனச் சோலையிற் சென்று மறைந்தது; அம்மாதா களின முகத்தைக்கண்டு நாணி மறைந்தது போன்றிருக்கவும, குருக்கத்தியில் வசந்தமல்லிகை படர்ந்திருப்பது திவ்ய மணப்பந்தல்கள் போன்றிருக்கவும், அவைகளினடியில பெய்தமைபோற் சிந்தி நிறைந்திருக்கின்ற மலர்ப்பாயலினமீது அரம்பாஸ்திரீகள் நித்திரை செய்யவும், குறமாதர் இன்னிசை கூட்டிப்பாடும் நன்னயக கீதங்களைக் கேட்டு அசுணங்கள் அருகேவந்து நின்றிடவும, சுனைகடோறும தெய்வமாதர் தினமும்வந்து கூந்தலில்முடித்த பாரிஜாதமலரோடு நீரிலமூழ்கிஸ்நானஞ்செய்வதால் அவைகளிலுள்ள கயலகள் தங்கள் இயற்கை மணமாகிய புலாலநாற்றம நீங்கிப பாரிஜாதவாசனையைப் பெற்றவைகளாய்த் திகழவும், மேற்பாகத்திற செல்லுகின்ற செங்கதிரோன் தன்சிரசிற்றரித்த சுடர்மணிபதித்த கிரீடம்போற் பிரகாசிக்கவும் இன்னும் அத்தி அரசு, அசோகு, அகத்தி, அனிச்சை, ஆச்சா ஆத்தி, ஆல், இத்தி, இலந்தை, இலவம், இலுப்பை, ஈந்து, உசில், எலுமிச்சை, ஓமை, கடம்பு, கடவு, கடு, கடுக்காய், கமுகு, கருக்குவாளி கருங்காலி, காயா, குங்குமம, குருந்து, கூந்தற்பனை, கொன்றை, கோங்கு, சந்தனம், சிவந்தி, செண்பகம், செருந்தி, தணக்கு, தெங்கு தேக்கு, நறுவிலி, நாரத்தை, நாவல், நெல்லி, டலா, பனை, பாதிரி, புன்னை, பூவரசு, மகிழ், மருதம, மலைப்பச்சை: மலைமல்லிகை, மா

தளை, மா, முருக்கு, முருங்கை, மூங்கில், வன்னி, வாகை, வில்வம்,
விளா, வெட்பாலை, வேம்பு, வேமுதலியவிருக்ஷங்களடர்ந்து அ
வைகளிற்பூவும், பிஞ்சும், காயுங்கனியுமாகிய பலவளங்களு மதிகரித்
திருக்க அவைகளின்மீது படிந்துவரும் தென்றற்காற்றானது பல
விதமாகிய பரிமளங்களை வீசவும், மிகவும் நெருக்கமாய் வளர்ந்திருக்
கின்ற அந்தமரசசோலைகளெங்கும், அன்றில், அன்னம், ஆந்தை,
உள்ளான், ஊர்க்குருவி, தூக்கணங்குருவி, எண்காற்புள், கருடன்,
கவுதாரி, கழுகு, காக்கை, கண்டபேரண்டம், அண்டங்காக்கை, நீர்க்
காக்கை, காடை, கிளி, குயில், குருகு, கூகை, கேயம், கொக்கு,
கோழி, கானங்கோழி, சம்பங்கோழி, சக்கரவாகம், சாதகம், சிச்
சிலி, சிவல், செம்போத்து, சாகணவாய்ப்புள், நாரை, கருநாரை,
பெருநாரை, வெண்ணாரை, நிலாமுகி, பருந்து, புறா, கருமபுறா,
மாடப்புறா, பொய்யாப்புள், மயில், மீன்கொத்தி, வானம்பாடி
முதலிய பறவையினங்களெல்லாம் கும்புகும்பாய்த் தங்கள் பே
டைகளோடுகூடிக் கனிவர்க்கமுதலிய தங்களுக்கிஷ்டமானவைகளைப்
புசித்து மரக்கிளைகளிற் றங்கியும், கற்பாறைகளிற் றூங்கியும், கா
விடங்களிற் பறந்தும், தாமரைத்தடங்களினோரங்களிலுலாவியும்,
இன்னிசைகளைப் பாடியும், சிலபக்ஷிகள் மரக்கிளைகளிற் படர்ந்து
தொங்குகின்ற ஊஞ்சற்கொடிகளைப் பிடித்தூஞ்சலாடியும் சந்தோஷ
த்துடன் வாழவும் ஆகியசிறப்புடன் பிரகாசிப்பதோடு மற்றும்,
தன்னிடத்து அமிர்தசஞ்சீவிக் கொப்பாகிய மர்மமான மூலிகைக
ளையும், அஷ்டமாசித்துகட் குகந்தவஸ்துக்களையும், மல்லிகை, முல்
லை, இருவாட்சி, பிச்சி, மரு, மருக்கொழுந்து, ரோஜா, சண்பகம்
பாரிசாதம், சிவந்தி, பன்னீர்முதலிய புஷ்பஜாதிகள் மிகுந்திருப்பதா
கிய நந்தனங்களையும், அணில், ஆடு, குரும்பையாடு, செம்மறியாடு,
வெள்ளாடு, எருது, எருமை, காரெலி, ஒட்டகம், கஸ்தூரிமிருகம்
கரடி, கவரிமா, கீரி, குரங்கு, சிங்கம், நரி, நாய், செந்நாய், நீர்நாய்,
நாவிப்பிள்ளை, பசு, பன்றி, முட்பன்றி, புலி, புலவாய், பூனை, மான்,
மரை, முசு, முயல், யாளி, யானை, முதலிய மிருகத்தொகுதிகளையும்
அவைகளினாரவாரங்களையுமுடையதாய் காட்டியானைகள் அருவிநீ
ரைத் தும்பிக்கையினாலே, கொண்டுவந்து செஞ்சடாபாரத்தையுடை
ய முனிசிரேஷ்டர்களினது கமண்டலங்களிலே சொரியவும், மி
ஞ்சிய தவத்தினாலே தேகபலங்குன்றித் தள்ளாடிக் கொண்டு
திரிகின்ற சிலஇருடியருக்கு மந்திகள் தமதுவாலை அவர்கள்கையிலே
கொடுத்து வழிகாட்டிக் கொண்டு போகவும், கிள்ளைகள்சென்று தினை

க்கதிர்களையும் மூங்கிலரிசிகளையும் கொண்டுவந்து ரிஷிகளுடைய பன்னசாலைகளில் முத்துகளைச் சொரிந்ததுபோற் சொரியவும், மலைப்பாம்புகள் கற்றறிந்தவர்களைப் போல அடங்கி மகாரிஷிகளுக்கு நடப்பதற்குப் படிக்கல்களாகக்கிடக்கவும், தபோதனர்களை யழைத்துக்கொண்டு போவதற்குத் தெய்வவிமானங்கள் இடைவிடாது வந்துகொண்டே யிருக்கவும், பாபங்களைப் போக்கப்பட்ட கணக்கற்ற பலபுண்ணிய தீர்த்தங்கள் எங்கும் பிரகாசித்துக் கொண்டிருக்கவும், இடனாய் மந்திரபர்வதத்திற் கொப்பாகி விளங்கிக் கொண்டிருக்கும், ஸ்ரீமந்நாராயணமூர்த்தியே தமக்கிருப்பிடமாய் வாசஞ்செய்வதற்கமைந்த இந்தவிருஷபாத்திரியின் மகிமையை ஒருவிதத்திற் சொல்லமுடியாது, ஆயிரம் நாவைப்படைத்த ஆதிசேஷனாலுமளவிட்டுச் சொல்லமுடியாதென்றால், என்னொரு நாவாலெடுத்துச் சொல்லுந் தரமுடையதோ முனிசிரேஷ்டர்களே நீங்களேயூகித்தறிந்து கொள்வீர்களாக.

ஸ்ரீ விருஷபாத்திரிநாதாயநமஹா.

இக்கப்பிரகாரம் வாமனபுராணம க்ஷேத்திரகாண்டத்தில் விருஷபாத்திரிமகாத்மியம.

முதலாவது அத்தியாயம்,

முற்றிற்று.

இரண்டாம் அத்தியாயம்.

வாமதேவ மகாமுனியானவர் ஜனகமகாராஜனுக்குச் சொன்னபடியே இந்தவிருஷபாத்திரி யென்னும் புண்ணியக்ஷேத்திரத்தின் மகிமையையான உங்கட்குச் சொல்லுகிறேன், கேளுங்களெனச் சூதபுராணிகர் சௌனகாதிமஹரிஷிகளை நோக்கிமேலுஞ் சொல்லத்தொடங்கினர்.

தபோதனர்களே! கேட்பீர்களாக, ஜனமஹாராஜாவானவர் வாமதேவரைநோக்கி யஞ்சலியஸ்தராய்த் தமதிரு கரங்களையுஞ்சிரமேற் கூப்பி ஓமுனிநாதரே! புராணார்த்தங்களைச் செவ்வையாகத்தெரிந்தவ

ராதலால் தெரிசித்த காலத்தே தேகசுத்தியையும், பாவவிமோசனத்தையுந் தருகின்ற விருஷபாத்திரியின் மான்மிய மெல்லாவற்றையும் அடியேன் விருப்பததின்படியே கிருபைபாலித் துரைத்தருளவேண்டுமென்ற ஜனகமஹாராஜனுக்கு வாமதேவரானவர் சொல்லுகின்றார்.

மகாராஜனே? கேட்கக்கடவாயாக, சகலபுவன சம்ரக்ஷகராகியும் சர்வஜீவதயாபரராகியும், எங்கும் வியாபித்திருக்கின்ற பரப்பிர்ம சொரூபராகியும், துழாய் மௌலிதாரியாகியும், சங்குசக்கரந்தரித்தவராகியும், விளங்காநின்ற இலக்குமிதேவி சமேதராகிய ஸ்ரீமந்நாராயணர் வாசமாகவிருக்கின்றதும், சோமசந்திரவிமானப்பிரகாசிப்பதும், இந்திராதி தேவர்களாலுங் கொண்டாடத்தக்கதும், தெரிசித்தவர்களுடைய சர்வபாவங்களையும் போக்கத்தக்கதும், விருஷபாத்திரியென்னும் பெயரினையுடையதுமான புண்ணியபர்வதத்திற்கு ஓர்காலத்தில் மார்க்கண்டேயர், பரீசர், கௌதமம, மயிததிரேயர், புலத்தியர், பராசர், சவுனகர், தாலப்பியர், ருக்மாங்கதர், பிரகலாதர், அருச்சுனர், வதிஷ்டர், மாபலி, விபீஷணர் முதலிய தபோதனர்களும், அம்பரீஷமகாராஜாவும் வந்துசேர்ந்து ஸ்ரீமந்நாராயணனைக் காணவேண்டுமென எத்தபோதனருஞ் சித்ததேதே செபிக்கும் ஸ்ரீராமநாமமாகியும், பிர்மதேவனுக்காதியில் விஷ்ணுவாலுபதேசிக்கப்பட்டதும், மூலமந்திரமுமாகிய (ஓம்நமோபகவதேவாசுதேவாயா) என்றமந்திரத்தை மனதினிடத்திலுன்னி நாவினாலுச்சரித்து முந்நூற்றைம்பது வருஷம்வரை அருந்தவஞ்செய்து கொண்டிருந்தனர்.

அக்காலத்தில் விருஷபாத்திரி வாசராகிய மகாத்மா அவர்கள்செய்த தவத்திற்கு மனமகிழ்ந்து அவர்கட்குத் திருக்காட்சி கொடுத்தருளக் கருதிகெருடாழ்வார் மீதாரோகணிதது ஆதிசேடன் முத்துச்சரங்களாலலங்கரிக்கப்பட்ட வெண்பட்டுக்குடை கவித்துக்கொண்டு வரவும், தர்மதேவர் பொற்பிரம்பினால் சந்தடிவிலக்கிக் கட்டியங்கூறிவரவும், சந்திரசூரியரிருவரும் வெண்சாமரைவீசிவரவும், நாரதர், தும்புருவர், கந்தருவர்முதலியோர் அரிகீர்த்தனம் பாடிவரவும், இன்னுமற்றுமுண்டாகிய தேவரிஷிகளனைவரும் அஞ்சலியஸ்தர்களாய் நின்றுசகஸ்திர நாமங்களைப்புகழ்ந்துவரவும், தேவேந்திரனுந் தேவர்களும், புஷ்பமாரி பொழிந்துவரவும், ஸ்ரீமத்அகிலாண்டகோடி பிர்மாண்டநாயகராகியும், ஆதிமத்தியாந்தரகிதராகியும், ஆபத்பாந்தவராகியும், விளங்காநின்ற அந்தப்பகவானது திருக்கரங்களில் சங்குசக்கரங்கள்

விளங்கவும், மகரகுண்டலகேயூரகடக கங்கணங்களாகிய பலஆபரணங்கள் சூரியப்பிரகாசத்தைச் செய்யவும், விருஷபாத்திரிநாயகர் வந்தாரென்று திருச்சின்னங்களூதிவரவும், பதினெட்டுவகை மேளவாத்தியங்களும், தேவதுந்துபியும் அண்டங்களெல்லாஞ் செவிடுபடும்படி தாம்தாமென்று முழங்கிவரவும், ஆகிய கணக்கிடற் கரிதானசம்பிரமங்களுடனே அந்த எம்பெருமானார் மேற்கண்டரிஷிகளுக்கு முன்பாக வந்திறங்கினார்.

இத்தகைய பெருமானது திருக்காட்சிகண்டவுடன் முன்தவஞ் செய்துகொண்டிருந்த மார்க்கண்டேயர் முதலான தபோதனர்களியாவருமெழுந்து அடியற்றதருக்கள்போல பூமியில்விழுந்து சாஷ்டாங்கமாய் நமஸ்கரித் தொழுந்துநின்று தங்கள் தங்கள் கரங்களைச் சிரமேற்கூப்பிவிருஷபாத்திரி வாசராகிய எம்மிறையே! எல்லாவற்றிற்கு மேலானதாயும், நிர்ணயிக்கமுடியாததாயும், அசிந்தயமாயும், அசிரஞ்ஜீவியாயும், அசிராவையாயும், அவ்வியாகிருதமாயும், சாஸ்வதமாயும், துருவமாயும், சாந்தமாயும், நிஷ்களமாயும், சுபமாயும், அமலமாயும், சகலவேதங்களிலுஞ் சொல்லப்பட்ட சூக்ஷ்மமாயும் யாவராலுந் தியானிக்கப்பட்டதாயும், நிகதிரையற்றதாயும், நிர்குணமாயும், பிரகிருதிக்கு லட்சணமாயும், எம்பொருளுக்கு சொரூபமாயும், சர்வலோகத்தின் உற்பத்திக்காரணமாயும் விளங்காநின்ற ஹரிஹரிகோவிந்தா, அச்சுதா, பரந்தாமா, விஸ்வரூபா, விருஷிகேசா, அகிலாண்டகோடி பிர்மாண்டநாயகா, அநாதரக்ஷகா, அப்பிரமேயா, பக்தஜனபரிபாலனா பரமபுருஷா, கோபிகாவல்லபா, குருசாபரக்ஷகா, நீகமணிமனோகரா, எமதிஷ்டதெய்வமேரக்ஷியும், ரக்ஷியுமென்று துதித்தனர்.

அந்தச்சமயம் பிர்மலோகவாசியாகிய பிர்மதேவரானவர் அன்னவாகனரூடராய் சகலதேவ கணங்களுந் தன்னைச் சூழவந்து தனதுபிதாவாயும், விருஷபாத்திரி வாசியாயும் விளங்காநின்ற ஸ்ரீமந்நாராயணனைக்கண்டு சாஷ்டாங்கமாய்த் தெண்டஞ்சமர்ப்பித்து எழுந்துகைகட்டிநின்று தனதுநான்குதிருவாயாலும், ஸ்ரீமத்துவாதசராம நாமங்களைச்சரித்துத் தோத்திரஞ்செய்து கொண்டிருந்தான்.

ஸ்ரீ விருஷபாத்திரி நாதாயநமஹா.

இந்தப்பிரகாரம் வாமனபுராணம் க்ஷேத்திரகாண்டம், 42-வது அத்தியாயத்தில் விருஷபாத்திரிமான்மியம்,

இரண்டாவது அத்தியாயம்.

முற்றிற்று.

மூன்றாம் அத்தியாயம்.



கேளுமையா ஜனகமகாராஜாவே! மேற்கண்டவிதமாக அஞ்சலியஸ்தர்களாய்ச் சந்திரனைச் சூழ்ந்திருக்கின்ற நக்ஷத்திரங்கள்போல பிரமன் இந்திரன்முதலிய தேவர்களும்; கருடகாந்தருவ கின்னரர் கிம்புருடர் முதலியோரும், நம்பெருமானைச் சூழ்ந்திருக்கின்ற சமயத்தில் கிருபாசமுத்திரமாகிய அக்கடல் வண்ணன் மிருகண்டமகாரிஷியின் புத்திரராகிய மார்க்கண்டேயனைக் கிருபையோடு நோக்கி ஹே! விப்பிரேந்திர! ஓ மகாதவசே! நான் இங்கு பிரசன்னமாகியிருக்கின்றேன். சந்தேகமின்றி நீ கேட்கிய வரத்தைக்கேளும், கடாக்ஷித்தருளுகின்றேனென்றத்திருவாய் மலர்ந்தருளினர்.

இவ்வாறு ஸ்ரீபரவாசுதேவர் கிருபையோடுரைத்த வசனங்களைச் செவியுற்ற மார்க்கண்டேயர் மிகவும் ஆனந்தபரவசராய்த் தமதிருகரங்களையுஞ் சிரமேற்கூப்பி ஓ பகவானே! தாங்கள் சிருஷ்டி, திதி, சம்மாரமென்னும் முத்தொழில்கட்குங் காரணபூதராயும், ஒவ்வொருவருடைய இதயகமலங்களில் வசிப்பவராயுமிருக்கின்றீர்கள். ஆதலால் தாங்களறியாத தொன்றிருக்கின்றதுண்டோ? இல்லை, ஸ்ரீயப்பதே. உம்மைக்கண்டு தொழுதேன் பிரார்த்தனையென்ன, யான்கோருகின்ற வரம் ஒன்றுண்டு, அதாவது — எனக்கு நித்தியத்துவங்கொடுத்தருளவேண்டுமென்று சொல்லித் தோத்திரஞ்செய்து நிற்க, பகவானுங் களிப்போடும் புன்சிரிப்போடும் பார்த்தருளி மார்க்கண்டேயரே! உமதவாவின்படியே நித்திய ஜீவியாய்வாழ்ந்திருக்கக் கடவீரென்றாசீர்வதித்தருளினர்.

பின்பு அந்தவாசுதேவன் அம்பரீஷமகாராஜனை நோக்கி ஹே பூபாலக! நும்மனதில் நினைத்திருக்கின்ற வரத்தைக்கேளுங் கருணையோடளிப்போமென மொழிந்ததைக்கேட்ட அந்தஅரசரிற் சிறந்தோனாகிய அம்பரீஷனும் சாஷ்டாங்கமாய்ப் பணிந்தெழுந்து நின்று அஞ்சலியடைத்துப் ஓ தேவதேவா, பரமபுருஷோத்தமா, பரந்தாமா, பக்தவத்ஸலா, பன்னிருநாமா, பரமதயாளா, விருஷபாத்திரிவாசா, தேவகிநந்தனா, வசுதேவகுமாரா, வாசுதேவா, கம்ஸசம்மாரா, கமலாசனிமித்திரா, கௌரிசகோதரா, ஹரிமுகுந்தா, கோ

பாலா, கோவிந்தா, ருக்குமணிமனோகரா, வனமாலிகாபரணா, சங்குசக்கராயுதா; தாமோதரா, கேசவா, கஜேந்திரரக்ஷகா, கருடவாகனா, அண்டர்பெருமானே, வைகுண்டவாசா, என்னை இரக்ஷியும்!! இரக்ஷியும்!! யான் இப்பிரபஞ்சமாயை யென்னும், சம்சாரமாகியசாகரத்தில் அழுந்திமெத்தவும் நொந்து தவிக்கின்றேன், ஆதலால் எனக்கு உமது பாதாரவிந்தமாகிய தோணியைப்பற்றிக் கரையேறி மோக்ஷத்தையடையும்படியான வரத்தைக்கொடுத்தருள வேண்டுமென வெகுவாய்த் துதித்துநிற்க, அந்த அம்பரீஷனமீது நம்பெருமான் அன்புகூர்ந்து அவனையருகழைத்து ஓராஜேந்திரா! மகாவதசியாயும், உன்னுடையபுரோகிதராயுமிருக்கின்ற வசிஷ்டமாமுனியானவர் சரியை, கிரியை, யோகம், ஞானமென்னு நான்கு மார்க்கங்களையுங் கண்டுணர்ந்தவர், ஆதலால் அவரைவணங்கி அவர்சொல்லுகிற விதமாய்ச் செய்வாயானல், இபபிரபஞ்சமாயை யெனனுந் துக்க சாகரத்தினின்றுஞ் சுலபமாய்க்கரையேறி சீக்கிரத்தில் எவரும் அடைவதற் கரியதானமோக்ஷானந்தத்தையடைவாய, அவவாறே செய்யெனக் கட்டளையிட்டருளினா.

அந்தச்சமயத்தில் இதுகண்டகமலத்தின்வழி வந்தபிர்மதேவனவன் ஸ்ரீமந்நாராயணருடைய பாதாரவிந்தங்களில சாஷ்டாங்கமாய்விழுந்து நமஸ்கரித்தெழுந்து கைகட்டிநின்று தனதுநான்குதிருவாய்களினாலும், துதிசெய்து ஏ அப்பிரமேயா தாங்கள் ஆகஞாபித்தவண்ணம் அண்டாண்ட பூதலங்களையும், மேலுலகாகிய பூலோகம் புவலோகம், சுவலோகம், சனலோகம; தபோலோகம, மகாலோகம், சத்தியலோகமென்னு மேலேழுலகங்களையும, அதல, விதல, சுதல தராதல, இரசாதல, மகாதல, பாதாளமெனனுங் கீழேழுலகங்களையும், வாயுமண்டலம், வருணமண்டலம, சந்திரமண்டலம, சூரியமண்டலம், நக்ஷத்திரமண்டலம், அக்கினிமண்டலம், திரிசங்குமண்டலமென்னும் சப்தமண்டலங்களையும், உவர்நீர், நன்னீர், பால, தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன் எனனுஞ் சபதசமுத்திரங்களையும், நாவல், இறலி, குசை, கிரவுஞ்சம, புட்கரம், தெங்கு, கமுகு என்னுஞ் சப்ததீவுகளையும், கங்கை, யமுனை, சரச்சுவதி, நருமதை காவேரி, குமரி, கோதாவரி, சிந்து, தாமிரபருணி, துங்கபத்திரி, கிட்டிணியென்னும் பதினொருநதிகளையும், கைலை, இமயம், மந்தரம் விந்தம், நிடதம், ஏமகூடம, நீலகிரி, கந்தமாதனமென்னும் அஷ்டமாகிரிகளையும், அனலன், அனிலன், ஆபச்சைவன், சோமன், தரன்

துருவன், பிரத்தியூசன், பிரபாசன் என்னும் அஷ்ட வசுக்களையும், ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புஷ்பதந்தம், சார்வபூமம், சுப்பிரதீபம் என்னும் அஷ்டகஜங்களையும் வாசுகி, அனந்தன், தக்கன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடகனென்னும் அஷ்டமாநாகங்களையும், இந்திரன் அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்னும் அஷ்டதிக்குப் பாலகர்களையும், அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், நிருதர்; கிம்புருடர், காந்தருவர், இயக்கர், வித்தியாதரர், பூதர், பைசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாயவாசிகள், போகபூமியர், என்னும் பதினெண்கணங்களையும், சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி, ராகு, கேதுவென்னும் நவக்கிரகங்களையும், பிராம, க்ஷத்திரிய, வைசிய சூத்திரரென்னும், வர்ணாச்சிரமத்தாராகிய மானிடர்களையும், நால்வகையோனி, எழுவகைத்தோற்றம், எண்பத்துநான்குலக்ஷம், ஜீவஜெந்துக்களையும், இன்னும் அநேக அற்புதமான வஸ்துக்களையும் நினது கிருபாகடாக்ஷ மகிமையினாலேயே சிருஷ்டித்துக்கீர்த்திபெற்றேன் மேலும் என்னையாண்டருளவேண்டு மெந்தையே யெனப்போற்றி நின்றனன்.

அதன்பின்பு தங்கள் தங்கள் கரங்களைச் சிரமேற் கூப்பி நமஸ்கரித்துப் பன்னிருநாமங்களையு மிடைவிடாது சொல்லித் தோத்திரஞ்செய்துகொண்டு நின்ற தேவேந்திராதிதேவர்களைச் சாரங்கபாணியாகிய அந்தவிருஷபாத்திரி நாதர் அருட்பார்வையாகப்பார்த்து அனுக்கிரகித்து ஆதரவுசெய்து அவர்களை நோக்கி நீங்களியாவரும், இப்பர்வதத்தினின்று நீங்கி உங்கட்குரிய ஸ்தலங்களிற் சென்று மங்களகரமாய் வாழக்கடவீர்களென்றாசீர்வதித்து அந்தர்த்தியானமாய் மறைந்தருளினார்.

ஸ்ரீநிவாஸர் க்ஷணநேரத்தில் மறைந்ததை யுணர்ந்தயாவரும் சித்திரப் பதுமைபோல மௌனமுற்றுந்தோற்றத்தைவற்றுநின்று பின்பு ஆச்சரியத்தையடைந்து ஆனந்த பரவசராய் ஸ்ரீமந்நாராயணரைப் பற்பல விதங்களாகப்பாடித் துதித்துக்கொண்டாடி இவ்விருஷபாத்திரி யானது மிகவும்புண்ணிய முள்ளதாயும், பிரமதேசசுள்ளதாயும், தவஞ்செய்தற்கு யோக்கியமாயு மிருக்கிறதெனப் புகழ்ந்து பேசித் தத்த மிருப்பிடஞ்சேர்ந்தனர்.

ஸ்ரீ விருஷபாத்திரி நாதாயநமஹ.

இந்தப்பிரகாரம் விருஷபாத்திரிமான்மியம்,

மூன்றாம் அத்தியாயம்,

முற்றிற்று.

நான்காம் அத்தியாயம்.



ஜனகமகாராஜனே! கேட்கக்கடவீர்! மேற்சொன்னபடி ஆனந்த பரவசராயிருந்த பிரமசொரூபியும், சிரஞ்சீவியுமாகிய மார்க்கண்டேயரும், அம்பரீஷ மகாராஜனும், பிரமதேவனும், தேவேந்திரனும், மற்றைய முனிசிரேஷ்டர்களும், கருட காந்தருவ கின்னரர்களும், ஏனைய தெய்வ குழாங்களும், ஒன்றுகூடி அவ்விருஷ பாத்திரியின் கண் சோமசந்திர விமானத்தில் எழுந்தருளிப் பிரகாசிக்கின்ற ஸ்ரீஹரிவாசுதேவனது திருவுருவத்தைக் கண்களாரக் கண்டானந்திக்க வேண்டுமெனக் கருதி அந்த விமானத்தருகே வந்து நோக்குங்கால், அது எப்படியிருந்ததென்னில், வேதசாரமாகிய மூன்றெழுத்துக்களு மோருருவாகிய பிரணவ மந்திரமே தன் ரூபமாகவும், வேதங்களே சிகரமாகவும், ஓமகுண்டம்போற் சுற்றிலும் அழகுவாய்ந்து ஜெயவிஜயாளென்கின்ற இரண்டு துவார பாலகரூபம் வாயிலிற் காத்து நிற்க, அவர்களுக்குப்பின் க்ஷேத்திரபாலகர் அதிக உற்சாகத்தோடு நிற்க ஸ்ரீவைகுண்டப் பதிபோற் பிரகாசித்துக்கொண்டிருந்தது.

அதைப் பூரணமாகக் கண்களாற் கண்ட அனைவரும் பேரானந்தக் கடலின் மூழ்கினவராகி இன்று இவ்விமானத்தைத் தெரிசிக்கப் பெற்ற மாத்திரத்திலேயே சகல பாவங்களையும் போக்கடித்தோமெனப் புகழ்ந்து அதில் அமர்ந்திருக்கின்ற எம்பெருமானை ஆவலோடு காணப்பெற்றனர். அப்போது அந்த இலக்ஷ்மிநாதன் எவ்வாறிருந்தாரெனில், சுந்தரநீலம்போற் பிரகாசிக்கின்ற மேகவர்ணமும், பூரணச்சந்திரனைப்போற் பிரகாசிக்கின்ற திருமுகத் தாமரையும், மூன்றாம் பிறைச் சந்திரனைப்போல விளங்காநின்ற நெற்றியும், கோதண்டத்தைப் போன்று வளைந்து விளங்குகின்ற புருவங்களும், கிருபையே திருவுருவாய் விளங்குகின்ற திருக்கட் கமலங்களும், தாமரைமலர்களில் நீலோற்பலப் பூத்ததுபோற் பிரகாசிக்கின்ற கருவிழிகளும், எள்ளின் மலரையும், குமிழின் புட்பத்தையும், சண்பகப்பூவையும் தாழ்த்திய நாசியும், கொவ்வைக்கனியையும், இலவமலரையும், பவளத்தையும் பழித்த இதழ்களும், திரிலோகங்களும் பிரமைகொள்ளத்தக்க புன்சிரிப்பும், சாணைக்கலையும், கண்ணாடியையும், நீர்நிலையையும் பழித்த கன்னபாகங்களும், வள்ளைக்கொடியை வாட்டிய செவிகளும் வலம்புரிச் சங்கத்தையும், கமுகையும், பழித்த கண்டமும், மேருவை

ப்போன்று வீரலட்சுமிக்கிடனாய் விளங்குகின்ற புஜங்களும், பஞ்சாயுதங்களோடு பிரகாசிக்கின்ற கரக்கமலங்களும், மகாலட்சுமி வாசமாய் விளங்குகின்ற மார்பும், சகல சராசரங்களையும் அடக்கி வைத்திருக்கின்ற அண்டம்போன்ற உதரமும், புண்ணியமிகுந்த கங்காநதியிலுண்டாகும் நீர்ச்சுழிபோன்ற திருநாபியும், வாழைத்தண்டையும், யானைத்துதிக்கையையும், மருட்டிய ஆடைகளும், மன்மதபாணம்போன்ற ஆசனமும், செங்கரும்புபோன்ற கணைக்கால்களும், சந்திரரேகை, வச்சிரரேகை, பதுமரேகை, அன்னரேகை, குயிலரேகைகளுடன் சிவந்துவிளங்காநின்ற பாதகமலங்களும், நவரத்தினகசிதமாய்க் கோடி சூரியரொளிபோற் பிரகாசிக்கின்ற மகுடமும், மகரகுண்டல ஆரகேயூரவா குவளையமுதலிய இரத்தினாபரணங்கள் விளங்குகின்ற பூரண தேகமுமான திவ்விய அலங்காரத்தோடு வனமாலை முதலிய சுகந்த பரிமள புஷ்பத்தொடைகள் எங்கும் வாசிக்கவும், விநோத தெய்வீக பீதாம்பரம் மேனியில் மின்போற் பிரகாசிக்கவும், மின்னற்கொடி போன்ற ஸ்ரீதேவி பூதேவி யென்னுமிருமாதர்களும், இருமருங்கினும் இசைந்து நிற்கவும், பேரானந்த வாரிதிபோற் பிரகாசித்தனர்.

அத்திருவுருவைக் கண்ட யாவரும் மெத்தவுங் குதூகலித்து பத்திவசப்பட்டவர்களாய் இலக்குமிநாதா இரட்சி இரட்சியென வணங்கித் துதிக்க அடங்காப் பெருவெள்ள ஆனந்தத்தேனை யருந்தினாற்போல, பிரமதேசசோடும் பிரகாசிக்கின்ற அந்தத் தேவசேவிதமான விமானத்தினின்றும் வெளிப்பட்டு வந்தார்கள்.

அவ்வாறுவந்த பிரமாதி தேவகணங்களோடும், தபோதனராகிய முனிவர் கணங்களோடும், அம்பரீஷ மகாராஜனும், இன்னும் வந்த மற்றையரும், அவ்விமானத்திற்கு மேற்கே ஓர் தகுதியான தலத்தில் வந்தமர்ந்தனர். அக்காலத்தில் பிரமதேவரானவர் மார்க்கண்டேயராதிமுனிவர் குழாங்களைப் பார்த்து சர்வ பூதாத்மாவாகிய ஸ்ரீமந் நாராயணர் வாசமாயிருக்கின்ற அந்தச் சோமச்சந்திர விமானத்தின் மகிமையைப்பற்றிப் பிரஸ்தாபிக்கத் தொடங்கினார்.

ஸ்ரீ விருஷபாத்திரிநாதாயநமஹ.

வாமனபுராணம் விருஷபாத்திரி மான்மியம்
நான்காவது அத்தியாயம்
முற்றிற்று.



ஐந்தாவது அத்தியாயம்.

சர்வ சுகானுபவங்களையுங் கொடுக்கிறதாகிய இவ்வுலகத்தில் தேவர்களாலும், முனிவர்களாலும், கந்தருவ கின்னரர்களாலும், இயக்கர் முதலிய மற்றையராலும், பூஜிக்கப்பட்டு தெரிசிக்கும் சர்வ பாவங்களையும் போக்குதற் கிடனாயமைந்திருக்கின்ற இந்த விமானத்தை யாவரேனும், அந்தரங்க பக்தியோடு கூடித் தெரிசிப்பார்களே யானால், அவர்கள் எவ்வளவு பாவத்தைச் செய்தவர்களாயிருந்தாலும் அப்பாவங்களினின்றும், விடுபட்டு விருஷபாத்திரி வாசியாகிய ஸ்ரீமந் நாராயணருடைய வரப்பிரசாதத்தினாலே பாபிகளால் அடைய முடியாததாயும், புண்ணிய ரூபமாயும், நித்தியானந்த சுகமாயும், சாதுக்களால் விரும்பப்பட்டதாகியும், விளங்குகின்ற ஒப்புவமையற்ற மோக்ஷத்தானத்தை யடைவார்கள். இன்னும் இத்தலத்தில் ஒருவன் வந்து காமிய தவத்தைச் செய்வானாகில், அவன் விரும்பியவற்றை யெல்லாம் தடையின்றிப் பெற்று இம்மை மறுமை யிரண்டிலும், சுகானுபவங்களை யடைவான். நிஷ்காமிய தவத்தைச் செய்வானாகில் பிறப்பிறப்பென்னு மிருவாதனையுமற்று முத்தித் தலத்தையடைந்து என்று நீங்காப் பேரானந்தத்தை யடைந்துகொண்டிருப்பான்.

தேவர் முனிவர்களாகிய உங்களின் தவங்களுக்கும், ஸ்தோத்திரங்களுக்கும், மனதிரங்கி ஸ்ரீமந் நாராயணர் திருக்காட்சி கொடுத்து நீங்கள் தெரிசித் தானந்த சாகரத்தில் மூழ்கியிருக்குமபோதே தம்முடைய பெரிய அழகுவாய்ந்த ரூபத்தை மறைத்துக்கொள்ளும்படி செய்ததும், அப்படியவர் பிரசன்னமாகி யிருக்குங்காலத்தில் சூழ்ந்திருந்த சுரர்முனிவர் முதலிய நாமெல்லாம் பூரணமாகத் தெரிசித்ததும் அந்தச் சொரூபத்தின் முடிவைக் காணாமல் இன்னும் பூர்த்தியாகக் காணவேண்டுமென்னும் அவாவினோடிருக்கச்செய்ததுமாகிய அந்தப் பெருமான் வாசமாயிருக்கின்ற சோமசந்திர விமானத்தையுடைய இந்த விருஷபாத்திரி யென்னும் புண்ணிய க்ஷேத்திரத்தில் தங்கியிருக்கின்ற தாவரங்களுங்கூட தாம் அவ்வாறு அற்பமாகிய பிறவிகளில் வருவதற் கேதுவாயிருந்த சர்வ பாவங்களினின்றும் விடுபட்டு இச்சேத்திரத்தில் வசிக்கப்பெற்ற புண்ணிய வசத்தினாலே, புண்ணிய தேகங்களைப் பெற்று பதவிகளில் மிகவும் உயர்ந்ததாகிய தெய்வலோக

பதவியைப்பெற்று எப்பொழுதும் நீங்காத பேரானந்தத்தை யடைந்துகொண் டிருக்குமென்றால் மற்றையர் பெறும்பேற்றிற் களவுண்டோ? இவ்வாறாகிய இத்தலத்தின் மகிமையை யெடுத்துரைக்கவும் இயலுமோ.

முனிசிரேஷ்டரே! கேட்பீர்களாவென்று பிர்மதேவர் சொன்னதுபோல் சூதபுராணிகர் மேலுஞ் சொல்லுகின்றார். தபோதனர்களே! இன்னும் விண்ணையளாவிய சிகரத்தையும், தவசிகள் தவஞ்செய்வதற்கு யோக்கிய பலகுகைகளையும், பலபுண்ணிய தீர்த்தங்களையும், உயர்ந்த தருக்களின் நிழல்களையுமுடைய விருஷபாத்திரியென்னும் இந்த மகிமை தங்கிய கிரியில சோமசந்திர விமானத்தி லெழுந்தருளி யிருக்கின்ற விருஷபாத்திரி நாதராகிய எம்பெருமானை ஒருவன் ஒருமுறை தரிசிக்கப் பெறுவானாகில், அந்தத் தேவருடைய பெருங்கருணையால் தான் விரும்பிய புண்ணிய லோகங்களின் பதவியில் உன்னதமான தெதுவோ? அதை யாதொரு தடையுமின்றிப் பெறுவான்.

மேலும், இலக்குமி தேவியோடு எப்பொழுதுங் கூடி இஷ்டப்பிரகாரம் ரமிக்கிறவரும், பூதப விஷயத் காலத்தை நியமனம் பண்ணுகிறவரும், சுபமான பக்தர்களால் சேவிக்கப்பட்டவரும், சுபமான மனசினால் பக்தர்களுடைய ஹிருதயத்தைச் சிந்தித்துக்கொண்டிருக்கின்றவரும், இந்த லோகமானது தம்மால் சிருஷ்டிக்கப்பட்டதென நினைத்து இதைத்தபமுடைய உதரத்திலேயே யடக்கி கருணையோடு காத்துவருபவரும, தேவரெகதருவ மனிதர்களா லறியப்படாதவருமாகிய ஸ்ரீ வாசுதேவர் குடிகொண்டிருக்கின்ற, இந்தப்பர்வதத்திலுள்ள தடாகம், கிணறு, ஏரி, அருவிமுதலிய நாமங்களோ டமைந்திருக்கின்ற பலவிதமாகிய புண்ணிய தீர்த்தங்களில் ஒருவன் முறைப்படியே ஸ்நானஞ்செய்து ஹரியைத் தொழுதாலும், ஒருகையளவள்ளிப் பானஞ்செய்தாலும், அவன் ஒப்புயர்வற்ற நற்பதவியைப் பெற்றுச் செப்பமாய் விளங்குவான். இன்னும் அந்தத் தீர்த்தங்களில், எவனாயினும் கிரமப்படி அஷ்டாக்ஷரத்தை யுச்சரித்துக்கொண்டு செய்ய வேண்டிய ஒழுங்கின்படியே தவறாது ஸ்நானஞ்செய்வானாகில், அவன் அங்கே வாசமாயிருக்கின்ற நாராயணருடைய வரமகிமையாலும், அந்தத் தீர்த்தங்களின் பிரபாவத்தினாலேயும், சமஸ்தமான பாவங்களினின்றும் விடுபட்டு மூமூட்சுகளு மடைதற்கரிய உத்தமமான

கெதியை யடைவான். ஒருவன் இந்தப் பர்வதத்தைத் தெரிசிக்கும் பாக்கியத்தைமட்டு மடைந்தாலும், அவன் உடனே பலவருஷங்கள் தவமியற்றுவதினால் என்னபலன் கிட்டுமோ? அந்தப்பலனை யடைவான்.

முனிவர்காள்! மேலுங் கேட்பீர்களாக. இந்தப் புண்ணிய பருவதத்திற்கு அனையோசனைக் குட்பட்டவிடங்களில வசிக்கின்றமனிதர்கட்கும், தேவர்கட்கும், மற்றைய ஜீவராசிகட்கும், பாவமென்பதே சேராது, மிக்கபுண்ணியமே கிட்டும. சகலசுகமுங்கைகூடும், அந்தப பர்வதத்தின் நிழலானது எவ்வளவு தூரம்பரவியிருக்கின்றதோ அவ்வளவு தூரத்திற்குட்பட்ட பூமியானது, உலகத்தில் மிகவுமுயர்வுற்றது, யாவராலும பூஜிக்கபபட்டது. அதிகசுபமானது, நிர்மலமானது, இவ்விடத்தில் வசிக்கபபட்டவர்களோ? அதிகபூஜைசள்ளவர்கள். மிகவும்புண்ணியந்தங்கியவர்கள், விஷ்ணுவினுடைய கிருபைக்குப்பாத்திரமானவர்கள்.

எல்லாராலும அறியப்படாமல் பூர்வத்தில் மறைந்து இரகசியமாயிருந்த விமானந்தங்கிய இந்தபபர்வதத்தை அக்ஷஹரிகத்தை யிச்சித்தவர்கள் மிகுந்தபக்தி வாய்ப்பட்டவர்களாய்த் தெரிசிக்கவேண்டும் சர்வபூதேஸ்வரரூபியாயும், சர்வாதபாவாயும, அச்சுதராயும், ஸ்ரீதேவியோடு கூடியநாராயணராயுமிருக்கின்ற சுந்தரராமசுவாமிவினுடைய திருப்பாதங்களினால் பீடிக்கபபட்டதாயும், அதிகபுண்ணியந் தங்கியதாயும், திவ்வியமாயுமிருக்கின்ற இந்தமகத்தவ க்ஷேத்திரமானது மிகவும்இரகசியமுடையது' சாமானியர்களுக்குப் புலப்படாத பெருமையையுடையது, இதனமகிமையை இவ்வளவினதெனக்கணித்துச்சொல என்னால்முடியாது சௌனகாதி ரிஷிகளே! நானசொல்வதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். சர்வக்கியானியாகிய வாமதேவரே? இத்தலத்தின்பெருமையை எனனைத்தவிர மற்றையர் எவ்விதத்தாலும் உணரார் எனச் சொல்லியிருப்பாரேயானால் இதுஎவ்வவு உயர்ச்சிபெற்றதாயிருக்கும, இதைநீங்களே யூகித்தறிந்து கொள்வீர்களாக,

முனிசிரேஷ்டர்களே! இந்தபிர்மமபர்வதத்தின் மஹாத்மியமானது நிரம்பவும ஆச்சரியமுள்ளது, இதை விஸ்தரித்துச்சொல்லவேண்டுமானால், அநேகவருஷங்கள்செல்லும், ஆயினும், சொல்லுகிறேன் கேட்பீர்களாகவென்று பிர்மதேவர் தேவகணங்களுக்குச்

[illegible]ன்னது போல வாமதேவர் ஜனகனுக்குச் சொன்னதை சூதபுரா ணிகர் நைமிசாரணிய வாசிகளுக்கு மேலுஞ் சொல்கிறார்.

[illegible] நந்தகா, இவ்வுலக இகபர பாவத்தகில, சர்வ [illegible] மாதாவாயும், [illegible] பாவங்களையும் போக்கடிக்கிறதாயும், [illegible] இனிமையான வொலியையுடைய [illegible] பாக்கியானதும, சகல தேவர்களு [illegible] ப்ரசவிபவைகளாற பரி [illegible] புண்ணிய தீர்த் [illegible] லுளிருக்கப [illegible], இதற்கு நூபுர கங்கை [illegible] பகவத் பாதத்தீர்த்த மென [illegible]. [illegible] பெருமை யை [illegible] சொல்ல முடியாது. இதில் ஸ்நானஞ் செய்ப்பட [illegible] பலனைத் [illegible] அலேபிற் [illegible] அந்தத் [illegible] யுடை[illegible] வை. அத்தேச [illegible] லைமையுற [illegible] க்கைக [illegible] க்ஷேத் [illegible] பலத்திற்கு இதி [illegible] போனது. இந்த க்ஷேத்தி [illegible] கொப்பான நதியும [illegible] தோடிருந்து [illegible] சுந்தரராஜப் பெ[illegible] வசிக்கின்ற ஸ்ரீ [illegible] தேவபூஜிதமான [illegible] கடவுளை நமஸ் [illegible] பலனை கிட்டு [illegible] பலவாறுன அத் [illegible] சொல்லி அங்குள்ள தேவர்க ளையும், [illegible] க்ஷேத்ரத்தில் வாழ்ந்து செய்து ஸ்ரீமந் நாராயணனுடைய [illegible], வாணிநாய கரும், [illegible] படடவரும், சிருஷ்டிகாத்தா

ரும், அன்னவாகனரும், வேதத்திற்குரியருமாகிய பிர்மதேவர் எழு து சகல தேவர்களும் ரிஷிகளும் புடைசூழவந்து புருஷோத்தமராகிய நாராயணனை நமஸ்கரித்து அந்த உத்தமமான விமானத்தை பிரதக்ஷணம்செய்து தமமுடைய லோகததிற்கெழுந்தருளினார். அந்தச் சபையதில அவரைச் சூழ்ந்திருந்த தேவர்களும், முனிவர்களும் கொஞ்ச தூரம் பின்சென்று அவரிடம் விடைபெற்று விருஷபாத்திரி நாதனை வணங்கிக்கொண்டு அவரவர்க ளிருபபிடம போய்ச் சேர்ந்தார்கள்.

வாமனபுராணத்தில் விருஷபாததிரி
மஹாத்மியம் ஐந்தாவது அத்தியாயம்.
முற்றிற்று.

—◦◦—

ஆறாவது அத்தியாயம்.



ஹே! மஹா ரிஷிகளே! வாமதேவா ஜனகமகாராஜனுக்குச் சொன்னதாகிய புண்ணியரூபமாயும், கேட்பதற்கு மனோகரமாயும் இருக்கப்பட்ட சிரேஷ்டமான இந்த விருஷபாத்திரியின் சரித்திரததை மேலுஞ் சொலவேன்கேட்பீர்களாக.

பூர்வததில் ஓர் கெநதருவன் அநேககெந்தருவாகளோடு கூடி மகாமததமபிடித்தவனாய் கண்டகண்டவிடங்களோறுங் கானம்பண்ணி சந்தோஷமாகச் சஞ்சரித்துக்கொண்டு வருங்காலததில் ஓர்தினம் மேற் குறிப்பிட்டமற்ற கெநதருவக்கூட்டத்தோடு கானப்பண்ணிக் கொண்டு ஆகாயமார்க்கமாய்ச சென்றான், அப்போது அவர்கள் செல்வதற் கிடையில் கீழ்ழ விருஷபாததிரியானது தோற்றப்பட்டது. அதைகண்ட மற்றகெந்தருவரெல்லாம பயந்து ஆகாமோசம் வந்ததே; இதுபரமாதமாவாகிய ஸ்ரீமந்நாராயணர் வாசஞ்செய்யப பட்டஸ்தலமல்லவா வென்றெண்ணி மரியாதையோடும், பகதியோடும் வணங்கி யொதுங்கிச் சென்றார்கள். அவர்களில தலைபெற்றிருந்த கெந்தருவன் மட்டும் அகங்காரத்தை வகித்தவனாய், அதைஇன்னதுடையன் தானமென்பதை ஒருசிறிதுமெண்ணாது அவமதித்து நேரே சென்று இத்தப்புண்ணியரூபமா விருஷபாத்திரியென்னும் மகாக்ஷேத்திரத்திற்கு மேற்பட்டுத்தாண்டிவிட்டான்.

அப்படித்தாண்டும்போது விருக்ஷபாத்திரியின்பக்கங்களில் தெய்வசொரூபமாகத்தங்கிய விஷ்ணுபக்தாளனை வரும்மனம் பொறுதவராகி மிக்ககோபத்துடன் கெந்தருவனைப்பார்த்து அடாபாதக சொரூபமுடையவனே, நாராயணரை யவமதித்த நாசகாலா, தெய்வத்துரோகி, உன்னுடைய அகங்காரத்தினாற் சகலபாவங்களையும் போக்கடிக்கத்தக்க இந்தப்புண்ணிய க்ஷேத்திரத்தைத் தாண்டினபடியால், நீ, உன்பறக்கும் பலமொழிந்து பாரில்விழக்கடவாயெனச் சபித்தனர்.

இவ்வாறு சபித்தவுடன் அந்தக்கெந்தருவன் திடுமெனத் தன் வல்லமை கெட்டுப்பறக்குந் தன்மையற்று ஆகாயத்திலிருந்து அடியற்றமரம்போலும், சிறகறுபட்ட கழுகுபோலும், ஸ்ரீராமபாணத்தினால் மாரீசன் என்ற ராக்ஷஸன் எவ்வாறு தள்ளிவிடப்பட்டானோ? அவ்வாறே, ஓர்பெரியமலை விழுந்ததுபோல மண்ணினமேல் விழுந்தான். இந்தச்சம்பவத்தைப் பார்த்த மற்றைய கெந்தருவரெல்லாம் மனதில் அச்சமுற்றவராகிச் சற்றும், நிலைகொள்ளாது தம்கொற்றவனையும் வேண்டாது ஓடிவிட்டார்கள்.

பூமியில் விழுந்த அந்தக்கெந்தருவனானவன் மிகமூர்ச்சையடைந்தவனாய் ஸ்மரணையற்றுப்பிணம்போல் வெகுநேரம்வரையிற்சாய்ந்துகிடந்தான். அந்தசமையத்தில் முன்பயந்தோடிய கெந்தருவர்களிற் சிலர்பரிதாபமுற்றுத்திரும்பிவந்து இவன் இவ்வாறு கிடப்பதைப்பார்த்துச்சிறிதுபசாரஞ், செய்து, மயக்கத்தைநீக்கி தெளியவைத்தார்கள். உடனே அவன் மூர்ச்சை தீர்ந்தெழுந்து அங்குநின்ற கெந்தருவரைப்பார்த்து எம்மவர்களே! எனக்கு எக்காரணமுமின்றி இவ்விதசம்பவம் யாதால் நிகழ்ந்ததெனவினவினான். எமது தலைவா! சர்வலோகரக்ஷகராகிய ஸ்ரீமந்நாராயணருக்கு அபசாரஞ்செய்தீர், எத்தேவர்களும நித்தமும்வந்து பத்தியுடன்பணிந்து முத்திபெறுவதற்குரிய இத்தலத்தின் மகிமையைச் சித்தத்திலுணராதுமறந்தீர். எம்பெருமானை உமதுசெருக்கால் அவமதித்தீர், இந்தவிருக்ஷபாத்திரியின் மகிமையை எண்ணாமலிழந்தீர், சர்வபாவங்களையும் போக்கத்தக்கதாகிய இந்தவிருக்ஷபாத்திரியின் சாயையைத் தாண்டியதால் உமக்கிந்தக் கெதிநேர்ந்ததென்றார்கள்.

இவைகளை யெல்லாங் கேட்ட அந்தக்கெந்தருவன் மனச்சஞ்சலத்தை யடைந்து, உடனே அவைகளைமறந்து மயமாய் வந்த கந்தருவரோடு பிராயணமாகப் போதையிற் காலினை. ஆயினும் அவன் கருதிமேலேபறக்கமுயன்ற சமயத்தில் பூமியைவிட்டுச் சிறிது உயரமாவது மேலேயெழும்பக்கூடவில்லை. அதுகண்ட அந்தக் கந்தருவன்மகா துக்கத்தையடைந்து இனிமேல் செய்வதென்ன வென்று ஆலோசிக்குங்காலத்தில் அவனுக்குச் சிறிது அகங்காரம் நீங்கி மனதில் நல்லஞானம் பிரவேசித்தது. அவ்வாறு ஞானமுண்டாகவே ஆகாமத்தையால் வலிகுன்றினேன், அகங்காரத்தால் ஆட்பட்டேன் ஸ்ரீமந்நாராயணருடைய பக்தர்கோபத்திற்குப் பாத்திரமாயினேன், எம்பெருமானுக்குத் தீங்குசெய்தேன் அவர்வடிவமாகிய இத்தலத்தைச்சற்றுமதியாமல் அவமதித்துக் கடந்தேன். அதனாலேயே எனக்கிவ்விதத்துன்பம் நேர்ந்தது. இனி அவனை வழிபட்டு அவரால் என் குறைகளை நீக்கிக்கொள்ளவேண்டுமேயல்லாமல் வேறு எவ்வுபாயத்தாலும் ஒன்றும் சாதிக்கப்படமாட்டாதென்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு உடனேபறந்து கொண்டுவந்தடைய சகாயத்தைக்கொண்டு ஸ்ரீவிஷ்ணுவெழுந்தருளியிருக்கும் விருஷபாத்திரியின் விமானத்தருகே வந்து நின்றுகொண்டு அநேகராகங்களால் புண்ணியகானங்களைப்பாடி ஸ்ரீவாசுதேவா, பரந்தாமா, பாண்டவசகாயா, பக்தர்துயரநாசனே ஆலிலைமேற்பள்ளிகொண்ட அநாதநாயகா அண்டசராசரா, அம்புஜநேத்திரா, கோபாலா, தேவசகாயா, ஸ்ரீபதே சுகுமார ஸ்வாமி வண்ணா! என்னை இரக்ஷியும் இரக்ஷியும்; ஒப்புயர்வற்ற நின் பெருமை யிட்டிறத்தையென்றும் நிகழ்த்தேன், விவேகமில்லாமல் விருஷபாதகிரியின் சாயையைக் கடந்தேன், அதனால் பெருந்துன்பமடைந்திருந்தேன், தெரியாமற்செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும் புண்ணியமூர்த்தியே யென்று பலமுறையும் சொல்லி முன்னேவிழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்துத் துதித்தான்.

இவ்வாறு துதிக்கவே எம்பெருமான் அவனைக் கண்டு மிகவும் துதித்துப், மனதிரங்கி அந்தரத்தினின்று தன் உருவத்தை அவன் கண்களுக்குக் காட்டாமல் ஹே! கெந்தருவா! நீ உன்னுடைய பெருங்கிறுமையாலே நாமவாசஞ்செய்வதாகிய இந்தத்திவ்ய க்ஷேத்திரத்தின் சாயையைத்தாண்டிய அபராதத்தால் நமது பக்தர்களின் கோபத்திற்கு ஆளாகி யிவ்வாறு பரிதபித்துள்ளாய். ஆயினும் நீசெய்த துதிக்கிரங்கி உனக்கரிய கிருபையைச் செய்தோம், நீபூரண நிலைமை

யை இப்பொழுதே யடைவாய், இதற்குமுன் நீராடி ஆலயங்க ளொராடல், நியமசாமார்த்தெ ரடையபிடி, சில மிக கிசாயாகு நடையோதிருக்கல் வேண்டுமென்று கட்டளையிட்டரு ளினார். உடனே கிரந்தர், முனிவனையனைத்து எம்பெ ருமானே! தினந் திருத்தளாறாயிரைறதேன், இனி எந்நாளும் உனது கட்டளையை மறவேனென்று சொல்லிப் பன்முறை வணங் கித் தன்னிடஞ் சேர்ந்தான்.

முனிவர்களே! சிறீமான் இந்த விருஷபாத்திரியை அவம திக்கவன் பட்டபாட்டைப் புராணத்தில் சமயறிவுடன், இந்தப்பர் வதத்தின் சாமர்த்தியமறிந்து, யாபடி ஆபத்தைத் தாண்டியவராகி, எவனும் மோக்ஷமடைவது திண்ணமென்றைதயறிந்தாக.

வாமனபுராணத்தில் விருஷபாத்திரி மகாத்மியம், ஆறாவது அத்தியாயம் முற்றும்.

ஏழாவது அத்தியாயம்.

முன் சொல்லிய விருஷபாத்திரி வைபவங்களை யெல்லாங் கேட்ட சௌனகாதி முனிவர்கள் மிக்க ஆனந்தத்தை யடைந்தவர்களாய் மீண்டும் சூதமகாமுனிவரை நோக்கி மேலும் முனிபுங்கவ! தாம் இதுவரை சொல்லிவந்த விசேஷங்களையெல்லாம் கேட்டு பேரானந்தக்கடலில் மூழ்கினோம், ஆயினும் இன்னுமொரு விஷயத்தைக் கேட்க விரும்புகின்றோம். அதாவது — சர்வலோக ரக்ஷகனாகிய ஸ்ரீ மந்நாராயணன் என்னும் பக்தர்கள் பிரார்த்தனைக்கிரங்கி, இந்த விருஷபாத்திரியில் இலக்ஷ்மிசமேதனாய் எழுந்தருளியதென்னும் விபரத்தைத் தயைசெய்து சொல்லவேண்டுமென்று மிகவும் பிரார்த்தித்தார்கள்.

இவ்வார்த்தையைக் கேட்ட சூதமகாமுனிவர் மனமகிழ்ச்சியோடு அவர்களை நோக்கி இருடியர்களே! நீங்கள் அவாவாய்க் கேட்கின்றபடியால், அடியார்க்கு நேயராகிய எம்பெருமான் இங்கெழுந்தருளிய காரணத்தை இசைபடச் சொல்லுவேன் கேட்பீர்களாக வென்றுரைக்கத் தொடங்கினார்.

ஹே முனிபுங்கவரே! ஸ்ரீ வியாசபகவான் எனக்குத் திருவுளமகிழ்ந்து சொல்லியவாறே இந்த வரலாற்றைச் சொல்கிறேன் கேளுங்கள் சர்வலோகங்களுக்கும் க்ஷேமத்தைச் செய்யவேண்டிய நிமித்தமாய் ஏதோ ஒருகாரணத்தினால் வைகுண்டத்தினின்றும க்ஷீரசமுத்திரத்தையடைந்தவரும், தருமத்தை நிலைநிறுத்தும் பொருட்டும அசுரர்களை வதம்பண்ணும் பொருட்டும், சாதுக்களுக்கு ஹிதததைச் செய்யும் பொருட்டும், அந்த க்ஷீராப்தி சயனத்தைவிட்டு விருஷ பாத்திரிக்கெழுந்தருளியவரும், இஷ்டகாமியங்களைக் கொடுக்கும்படியாகிய மகாலட்சுமியானவள் மனமகிழ்ந்து வாசஞ்செய்வதாகிய அத்தலத்தில் கிருதயுகத்திலே பரமேஷ்டியாகிய பிர்மாவினாலே பூஜிக்கபபட்டவரும், மகாவட விருக்ஷத்திற்குக் கிழககுபபாகமாயுள்ள நூபுரகெங்கையின் கரையில் தேவர்களாலும், பிருகுவாதி முனிவர்களாலும், உபாசிக்கப்பட்டவருமாகிய வாசுதேவனைக குறிதது மிக்க தவத்தைச் செய்து நற்பேறுபெற வேண்டுமெனக கருதிய தருமதேவரானவர் ஓர் காலத்தில் விருஷபரூபததைத் தரித்துக்கொண்டு தவததிற்குத் தகுதியான விடத்தைத் தேடும்போது அதற்குத் தகுதியுள்ள தலம் புண்யதீர்த்தங்களாலும், தடாகங்களாலும, தெய்வத் தன்மைபொருந்திய விருக்ஷங்களாலும் சிறந்து பல தலங்களினும் மேற்பட்டு இஷ்டகாமியங்களை யளிக்கின்றதாகிய விருஷபாத்திரியொன்றே யென்று துதிகொண்டு இந்த மகாக்ஷேததிரததை யடைநது தேவவருஷத்தால் எண்ணூறு வருஷம்வரை பஞ்சாக்கினி மத்தியிலிருந்து அகோரமாகிய தவத்தை யியற்றி வநதனர்.

முடிவில் அந்த நூபுரகங்கைக் கரையில் மாதவீமண்டபததிற்கு முன்னாலே எம்பெருமானாகிய வாசுதேவர் மந்தாரமலர் முதலியவைகளாற் றொடுக்கப்பெற்ற மாலைவிளங்காநின்ற அகிலாவண்ய தேகத்தோடும் சுந்தரராஜர் என்று சொல்லும்படியான திருக்கோலத்தோடும், அந்த வனத்தில் தர்மதேவருக்கு முன்னால் பிரசன்னமாயினார்.

அப்பொழுது தர்மதேவர் திடுக்கிட்டெழுந்து எல்லாத் தேவர்களாலுந் துதிக்கத்தக்கவராயும் கெருடாரூடராயு மிருக்கிற பகவானைப் புன்முறையும் நமஸ்கரிதது ஹே! தேவதேவா, பரந்தாமா, அடியேன் தமது திருவடிநோக்கிச் செய்யும், பத்து, நூறு, ஆயிரம், கோடியென்று கணக்கிடுவதான அபரிமிதமாகிய நமஸ்காரத்தை ஏற்றருள வேண்டும். ஆதிபுருஷரே தங்களுடைய தெரிசனை கிடைத்தமாத்

திரத்தில், என் அமங்கலமெல்லாம் தீர்ந்தன பாவங்களெல்லாம் அடி யோடு தொலைந்தன என் ஜென்மம் சாபல்யமாயிற்று. எத்தகைய தேவ ருங் காணமுடியாத தமது திருக்கோலத்தைக்கண்டேன். பேரானந் தங்கொண்டேன இனி எனக்கியாதொரு குறைவுமில்லையெனப் பல வாறுகத் துதித்து உரோமஞ்சிலிர்ப்பத் தேகம் பரவசமாகி பகவானை அடிக்கடி பிரதக்ஷணஞ் செய்து நின்றார்.

அந்தச் சமையத்தில் ஸ்ரீமந் நாராயணர் மகா பிரியத்தோடும் மேற்கண்டபடி நமஸ்கரித்து விருஷரூபியாகநின்ற தருமதேவனைப் பார்த்து பக்தியிற்சிறந்த பரம புருஷா! உத்தமமாக நீ செய்த தவத் தை மெச்சினோம், உனக்கு மிகுந்த க்ஷேமமுண்டாகுக; நீ விரும்பிய வரத்தைக்கேள் அருள்வேமென மகிழ்ந்து கூறினர்.

இந்த அருளான திருவாய்மொழியைக் கேட்ட தருமதேவர் எம்பெருமானே! தங்கள் தெரிசனை கிடைத்த மாத்திரத்திலேயே எல்லாச் செல்வங்களையும் அடைந்தேன் ஆயினும் நான் செய்யப்பட் ட பூஜையை யேற்றருளி என்னை யிரட்சிக்கவேண்டியதே எனக்குக் கொடுக்கவேண்டிய வரமென்று பணிய அப்போது ஆதிநாராயணர் அகமகிழ்ந்து தருமதேவ! உன் மனோபீஷ்டப்படியே நின்பூஜையை யேற்றருள விசைந்தேம். ஆகையால் மகாபுண்ணியந் தங்கியதான இந்த நூபுரகங்கைக் கரையில் எமக்குரிய ஓர் ஸ்தலத்தை ஸ்தாபித்து அதில் எமக்குரிய பூஜையை வழிப்படியே செய்து வருவாயாக வெ ன்று திருவாய் மலர்ந்தருளி விரைவாக மறைந்தனர். அதன்பின் தருமதேவர் மீண்டும் அவ்விடத்திலேயே வாசஞ்செய்து எம்பெருமா னுக்கு ஓர் சிறந்த ஆலயத்தை ஏற்படுத்த வேண்டுமென்னும் எண்ண முடையவராய் தபசு முதலியவைகளைச் செய்துகொண்டுவந்தனர்.

இப்படி நடந்து வருங்காலத்தில் இந்தவிருஷ பாத்திரியினுச்சியி பிரதோஷகாலத்தில் பூரணச்சந்திரன் தன்னுடைய கிரணங்களை மிகுதிப்பிரகாசித்தான், அப்போது, ஓஷதிகட்கெல்லாம் அதிபனு ம், அந்த ஒஷதிகளுடைய தாபங்களைத் தன்னுடைய கிரணங்களி னாற் போக்கடிக்கத்தக்கவனும், சூரியனுடைய கிரணங்களால் வெப் பத்தையடைந்து வாடிய விருக்ஷங்களை சந்தோஷத்தோடு பிதாவான வர் புத்திரனை கைகால் தடவி உபசரித்தும் பிரியவாக்கியங்களினு லே சந்தோஷப்படுத்தியும் வளர்ப்பதுபோல் தன்னுடைய அமுர்த கிரணங்களால் வெப்பத்தைத் தவிர்த்துச் செழிப்பாக வளர்ப்பவனு யும், பிரசன்ன முகத்தினாலே அழகுள்ளவனான தனது இஷ்டநாயகி

யை சந்தோஷிக்கச்செய்கின்ற இஷ்டநாயகன்போல் அமிர்தரஸத்தோடுங்கூடிய தன்னுடைய காந்தியினாலே கொஞ்சம் வெளுத்தமுகம் போன்ற வனவிருட்சங்களைச் செழிப்பாகச் செய்கிறவனையும், தன்னுடைய மின்னற்கொடிபோன்ற கிரணத்திரளினால் இந்தப்பர்வதத்திற்றங்கிய வனமந்திகளை நனைக்கிறவனையும், பாவசத்தினாலாகிய குரங்குகள் மதுபானங்களை யருந்தி பக்ஷோபயோகங்களைக் [illegible] மேலே [illegible] கிளம்பி தன்னிடத்திலுண்டாயிருக்கின்ற அமிருதக்கலைகளை கிரஹித்து மற்ற குரங்குகளுக்கும், சிசுக்களுக்கும், பரிவாரங்களுக்குங் கொடுத்துக் களிக்கச்செய்கிற [illegible] பார்த்து, அந்தச் சந்திரனைச் [illegible] ஆதிய [illegible] கைப்போன்ற ஓர் சிறந்த விமானத்தைப் [illegible] அடையக்கவேண்டுமென்கிறதைக்கொண்டு [illegible] விஸ்வகர்மாவை ஸ்மரித்தார்.

மேற்கண்ட விதமாக தேவேந்திரன் [illegible] அந்த வினாசகாலத்தில் மகாசாமான மேலான [illegible] கரையில் அஸ்வத்த விருக்ஷத்தினுடைய பூர்வபாகத்தில் [illegible] ஸ்தானத்திலுடனே [illegible] விஸ்வகர்மா பிரத்யக்ஷமாயினன். அவர் [illegible] அந்த [illegible] தேவேந்திரமகேந்திரரே! என்னை [illegible] அந்த தேவேந்திரமகேந்திரர் ஹே! [illegible] செய்யவேண்டியவைகள் [illegible] விஸ்வகர்மாவே! [illegible] ராமனை [illegible] ராகிய ஸ்ரீ[illegible] ஆலயம் கட்டவேண்டும். அந்த விமானம் சகல லக்ஷணங்களுடன் [illegible] நான்கு வியூகங்களோடு கூடினதாயும், விசாலமான [illegible] இருப்பதாயும், திக்குப்பாலகர்களாலும், [illegible] களாலும், சனகாதி முனீந்திரர்களாலும், நாரதாதிகளாலும் சேவிக்கப்பட்ட சிறப்புள்ளதாயும், சூரியகாந்தத்துக்குச் சமமாகப் பிரகாசிக்கத் தக்கதாயும், தாமிரிகளாலும், விசித்திரங்களான கண்ணாடிகளாலும், பூர்வவேதங்களாலும் [illegible] பட்டதாயும் இருக்கவேண்டும், இவ்விஷயத்தை நிறைவேற்றுவீரானால், விஷ்ணுவினுடைய திருவருள் உமக்குமெத்தவுண்டாகுமென்று பல உபசாரவார்த்தைகளைச் சொல்லிவேண்டினார்.

இதைக்கேட்ட விஸ்வகர்மா வானவர் தர்மதேவர் விரும்பிய வண்ணமே சகல லட்சணங்களும் அமைந்த விமானத்தை நிருமித்து நான்கு பக்கங்களிலும், வரிசையாகச் சத்தியைஸ் தாபித்து ஈசானிய பாகத்தில் வீரசத்தியை ஸ்தாபிதம்பண்ணி க்ஷணநேரத்தில் தம்கைச் சமர்த்தைக்காட்டிஅந்தவிமானத்தைப்பார்த்து அது அமைந்திருக்கும் அமைப்பிற்காகத் தாமே அளவிலடங்காமகிழ்ச்சிகொண்டு தருமதேவரைப்பார்த்து தவத்திற் சிறந்த தருமதேவரே! தாம்கட்டளையிட்டவாறே உத்தமவிமானத்தைச் சகலலட்சணங்களோடும், அமைத்து விட்டேன். மேலும் என்னாலாகவேண்டிய காரியம், இன்னதெனத் தெரிவிக்கவேண்டு மென்றுரைக்க அப்போது தருமதேவரானவர் விமானத்தைமுற்று நோக்கி அது அமைத்திருக்கும் சிறப்பைக்கண்டு அடங்காமகிழ்ச்சி கொண்டு விசுவகர்மாவின் கைச் சாமர்த்தியத்தை மெச்சிப்புகழ்ந்து விஸ்வகர்மாவைப் பார்த்து சிறப்புற்றோங்கிய தெய்வத்தச்சரே! உமது கைவல்லமையால் எம்பெருமானுக்கு எனதெண்ணப்படியே இணையிலா விமானம் அமைந்தது. இதன் இலட்சணத்தை ஒருவிதத்தாலும், அளவிட்டு முடியாது. ஆதலால் உம்மீது அளவிலா ஆனந்தங்கொண்டேன். உம்மாலாகவேண்டிய காரியமெல்லாம் ஆய்விட்டது. இனிமேல் உமக்கு என்னாலாகவேண்டிய வரத்தைக்கேளும், தருகிறேனென்று விளம்பினார்.

விஷ்வகர்மாவானவர் இந்த வார்த்தைகளைக் கேட்டு ஆனந்தங் கொண்டு தருமதேவரே! எனக்குவேண்டிய வரத்தைச் சொல்லுகின்றேன். கேளும், என்னாற் செய்யப்பட்ட இந்த விமானத்தில் விருஷபாசலபதியாகிய ஸ்ரீமந் நாராயணர் எந்தக்காலத்திலும் வாசம்பண்ணிக்கொண்டிருக்கவேண்டும். இந்தப்பூமியும், சந்திரசூரியரும் உள்ளமட்டும் “அதாவது பிர்மகற்பம் வரையிலும்” இந்த விமானமானது பிரசித்தமாயிருக்கவேண்டும். இந்த விமானமானது என்னாலமைக்கப்பட்டதென்று எக்காலத்தும் உலகத்தார் பிரசித்தமாகச்சொல்லிக் கொள்ளவேண்டும். இவைகள்தான் எனக்கு சர்வோத்தமமான பலங்கள், இவைகளைத்தவிர எனக்கு வேறொன்றும் வேண்டுவதில்லையென்றுசொல்லிவிட்டுத் தமதிருப்பிடஞ் சென்றார்.

இதன்பிறகு தருமதேவரானவர் அஷ்டாக்ஷர மந்திரத்தை ஜெபித்துக்கொண்டும் தேவதேவனாகிய பகவானைப் பிரார்த்தித்துக்கொண்டும் அந்த உன்னதமாகிய விமானத்தருகேவந்து அந்த ரங்கபத்தியாடு நின்றார். அந்தச்சமயத்தில் லாவண்ய சமுத்திரரான ஸ்ரீ ஹரி

யானவர் தரும தேவருக்கு அனுக்கிரகத்தைச் செய்யும்பொருட்டு சதுர்பாகுவாயும் மஹா மனஸ்வியாயும் ஸ்ரீதேவி, பூதேவி ஆகிய மெல்லியரோடு அந்த விமானத்தினுடைய மத்திய பிரதேசத்தில் எழுந்தருளிப் பிரகாசித்தனர். அந்தச் சமையத்தில் தேவர், கெந்தருவர், சித்தர், சாரணர், குஹ்யர், முதலியோர் தேவதேவேசனாகிய அரியைத் தோத்திரம்பண்ணினார்கள். அப்ஸரோகணங்கள் நர்த்தனம் பண்ணினார்கள், திவ்யமான துந்துபி முதலிய வாத்தியங்கள் முழங்கின. மஹாரிஷிகளியாவரும் வந்து வணங்கினார்கள்.

அந்தச் சமையத்தில் சந்திரமண்டலத்தைப்போல அமைக்கப்பட்ட காரணத்தினால் சோமசந்திர விமானமென்று சொல்லற்குவாய்ந்த அந்த விமானத்தில் எழுந்தருளியிருக்கின்றவரும், ஆச்சரியகாரும், ஸ்படிகமயரும், பீதாம்பரதாரியும், ஸ்ரீலட்சுமிதேவி வாசம்பண்ணப்பட்ட மார்பை யுடைத்தானவரும், சண்டாளரை அதஞ்செய்யுந் தண்டம் சாவலோகத்தையும் ஆட்சி புரிதற்கேதுவாய சக்கரம், வலம்புரிச்சங்கம் முதலியவை பிரகாசிக்கின்ற கரங்களையுடையவரும், கௌஸ்துவமென்ற மகா ரத்தினத்தினா லலங்கரிக்கப்பட்ட கண்டத்தையுடையவரும், குளிர்ந்த செந்தாமரைப் புஷ்பம், அமிர்தம் நிறைந்த பூரணச் சந்திரமண்டலம், இவைகளையொத்த முகமண்டலத்தையுடையவரும், செம்பரத்தம், புஷ்பம், பவளம், இவைகளைப்போன்ற அதர பல்லவங்களையுடையவரும், மிகவும் நீண்டதாயும், அழகாயும், ஸ்பரம்போன் றிருக்கின்ற இரண்டு கண்களையுடையவரும், கண்களாகிய சமுத்திரங்கட்குக் கரைபோன்றிருக்கின்ற அழகமைந்த நாசியையுடையவரும், மகத்தான வில்லைப்போன்று வளைந்திருக்கின்ற இரண்டு புருவங்களையுடையவரும், அர்த்தசந்திரனைபோல அழகு பிரகாசிக்கின்ற நெற்றியை யுடையவரும், அநேககோடி பாலசூரியர்கள்போல பிரகாசிக்கின்ற இரத்தினங்களா லமைந்த கிரீடத்தையுள்ளவரும், சிரசிலிருக்கிற கிரீடமுதல் உள்ளங்கால் வரையிலும் மனோகரமான அங்க சம்பந்தத்தையுடையவரும், ஆகிய பகவானைத் தருமதேவர் பார்த்து நமஸ்காரம்பண்ணி யெழுந்துநின்று அவர்க்குரிய மந்திரத்தினாலும், புருஷசூக்தத்தினாலும், இன்னும் விஷ்ணு சம்பந்தமான மஹா மந்திரங்களாலும், ஸ்தோத்திரம்பண்ணி பூஜித்து அருச்சனை செய்தார்.

அப்போது அந்த ஸ்தோத்திரங்களைப் பகவான் கேட்டு மிகவும் சந்தோஷித்து தர்மதேவனைப் பார்த்து ஹே, தர்மதேவ! இந்தப் பர்வதத்தில, உன்னுடைய பிரியார்த்தமாக நான் எழுந்தருளியிருப்பதால் எக்காலத்தும இவ்விடத்திலேயே வாசஞ்செய்துகொண் டிருப்பேன். பரிசுத்தமான நூபுரகெங்கையினுடைய ஸ்ரீவத் ஸாங்கிதமான தராதலத்தில் விஸ்வகர்மாவினால் நிர்மிதமான இந்த விமானத்தில் கற்பகோடிகாலமவனை விட்டகலாமல் தங்குவேன், ஆதலால் நீ என்னை ஆராதித்து இங்கு நடக்கவேண்டிய காரியங்களையும் உற்சவாதிகளையும் நடத்திக்கொண்டு இவ்விடத்தில் என்னோடுகூட வாசஞ்செய்து கொண்டிருக்கக் கடவாய். நீ யிவ்வாறே செய்து வருவாயானால் கற்பமுடிவில் திருபதியாக என்னையடைவாய் என்று திருவாய் மலர்ந்தருளினார்.


இந்தப் பிரகாரமுரைத்த பகவானுடைய வார்த்தையைத் தருமதேவர்கேட்டு ஏமதுதேவனே! உமது பக்தனாகிய எனக்கும், தேவர்கட்கும், முனிவர்கட்கும், தெரிசிக்க எவ்வாறு சுலபராயிருக்கிறீரோ; அவ்வாறே பணிதருக்கும தெரிசிக்க ஏற்றவராயிருக்கவேண்டுமென்று விண்ணப்பிக்க அழகான பாஹுக்களோடுங்கூடிய ஸ்ரீமந் நாராயணர் தருமதேவனைப்பார்த்து மகா புத்திசாதுரியமுடைய தருமதேவ! சந்திரவம்சத்தில், என்னுடைய பக்தனை மலையத்துவஜன் என்னும் பெயருள்ள ஓர் பாண்டியராஜனானவன் பிறந்து பிற்காலத்தில் என்னைப் பூஜிக்கப்போகிறான். அதுமுதற்கொண்டு எல்லா மனிதர்களுக்கும் சுலபமாய்த் தெரிசித்து இஷ்டகாமியங்களை யடையும்படியாக விளங்குவேன். நீ இங்கு எனக்கு முன்னால் எந்தெந்தக் காலங்களில் என்னென்ன வரங்களை யிச்சிக்கின்றாயோ? அந்தந்த வரங்களை அவ்வக்காலங்களிற் கொடுப்பேன். பெற்றுக்கொண்டு என்றும் சுகஜீவியாக வாழக்கடவா யென்றருளிட னுரைத்த பகவானைத் தருமதேவர் மீண்டும் நோக்கி எமதிறைவனே! உம்மால் எல்லாப் பாக்கியங்களையு மடைந்தேன். இன்னொரு விஷயத்தை யெனக்குத் தெரிவிக்கத் திருவுளம் பற்றவேண்டும். அதாவது:—தருமமானது எப்பொழுது பேதத்தை அடையும்? உம்மை ஆசிரயித்தே எந்தெந்தச் சமையத்தில் எப்படி எப்படி மாறப்போகின்றது என்னும் அடியேனுடைய வினாவிற்குத் தக்க, விடையளிக்கவேண்டுமெனப் பிரார்த்தித்தார்.

அதற்கு பகவா னிரங்கித் தருமதேவனே! தருமத்தைச் சொல்வேன் கேட்பாயாக. தருமமானது கிருதயுகத்தில் வடவிருக்ஷரூபமாகவும், திரேதாயுகத்தில் அஸ்வத்தமரமாகவும், துவாபரயுகத்தில், பலாவிருக்ஷமாகவும், கலியுகத்தில புத்திர ஜீவிவிருக்ஷமாகவும் விளங்கி அந்தப் புத்திரஜீவ விருக்ஷத்தினுடைய அடியில் மனிதர்கள் என்னைப் பூசிப்பார்களென் றுரைத்து மறைந்தருளினார்.

இந்தப்படிக்கு க்ஷேத்திர மஹாத்மிய பாகத்தில்
ஏழாவது அத்தியாயம்
முற்றிற்று.



எட்டாவது அத்தியாயம்,



மேற்சொல்லிவர்த்தைகளைக்கேட்ட பின்பு சௌனகாதிரிஷிகளெல்லோரும் பேரானந்தக்கடலுள் மூழ்கினவராய சூதமாமுனிவரை ஸ்தோத்திரஞ் செய்து பின்பு வராக க்ஷேத்திரத்தின் மகாத்மியத்தைக்கேட்க விருப்புற்று அவரைநோக்கி ஹேமகாமுனிவரே! வராகக்ஷேத்திரத்தின் மகிமையை யுணரவிரும்புகின்றோம், ஆனதால் எங்கள்மீ தன்புகூர்ந்து பாண்டிநாட்டிலேயுள்ள அந்தக்ஷேத்திரம் இன்னவிடத்தி லிருக்கிறதென்பதையும், இவ்வளவு விஸ்தீரணமுடைய தென்பதையும், இன்னின்ன தீர்த்தங்களிருக்கின்றனவென்பதையும், அதில்எவரெவர் நற்பலனை யடைந்தாரென்பதையும், சவிஸ்தாரமாகச் சொல்லவேண்டுமென்று விண்ணப்பிக்க, சூதர்மகிழ்ச்சியடைந்து சௌனகாதிரிஷிகளைப்பார்த்து ஹே. முனிவரே! நீங்கள் மனவிருப்போடு கேட்டபடியால் அந்தக்ஷேத்திரமகிமையை நாரதமஹாரிஷியானவர் நிர்ஜலமானவனத்தில் வியாசருக்குச் சொன்னவாறே நான் உங்களுக்குச்சொல்கிறேன், கேட்கக்கடவீர்களாகவென்று சொல்லத்தொடங்கினார்.

ஹேமஹாரிஷிகளே! அந்தவராக க்ஷேத்திரத்தினுடைய மகிமையைச் சொல்கிறேன். அன்புற்றுக் கேளுங்கள். தென்னன்நாட்டிற் றென்மேற்கெல்லை முடிவில் மலயமென்ற ஓர் சிரேஷ்டபர்வதமிருக்கின்றது. அதில் அனேகமுனிவர்கள் எப்பொழுதும வசித்துக்கொண்டிருக்கின்றார்கள். அகஸ்தியரும் அவ்விடத்திலேயே வசித்துக்

கொண்டிருக்கின்றார். அவர்லோகஹிதார்த்தமாக இன்னும் அங்குத வமியற்றிக் கொண்டிருக்கின்றனர். இத்தகைச் சிறப்புவாய்ந்த அந்த மலயபர்வதத்தின் கிழ்ப்பாகத்தில் பலபிரபல பர்வதங்களிருக்கின்றன. அவைகளிலமகாசிறப்புவாய்ந்தமண்டுகேபர்வதமென்னும ஓர்பர்வதமுண்டு அந்தபர்வதத்தில் அநேகமுனி கணங்கள்புடைசூழ மண்டுகேரென்னுபபெயருள்ள ஓர்மகான் தபோநிஷ்டையிலிருந்துகொண்டிருக்கின்றார். இவர் தவமியற்றிக் கொண்டிருந்த தலத்திற் கிழக்கே இரண்டு யோசனைதூரத்திற்கப்பால் உத்தமமான வராகக்ஷேத்திரமென்று சொல்லப்பட்ட தலமிருக்கின்றது, இந்தப்புண்ணிய தலத்தில் ஹரியானவர் பக்தர்களுக்கருள் புரியும்பொருட்டாய் எப்பொழுதும் வாசஞ்செய்து கொண்டிருக்கின்றார். இதில் அநேகரிஷிகள் தவத்தினுல் ஜென்மசாபல்யத்தை யடைந்திருக்கின்றார்கள். பலர்யாதொருபிரயத்தனமுமில்லாமல் இத்தலத்தில வசிக்குங்காரணத்தினுலேயே இஷ்டசித்திகளையெல்லாம் அடைவார்கள். இதுதலங்களுளெல்லாம் மகா சிறப்புவாய்ந்தது என்றுசொல்லமேலும, முனிவர்கள் வணங்கிஹேசூதரே! அந்தமண்டுகரென்பவர் யாவர் அவர் அந்த வராகக்ஷேத்திரத்தில் என்னகாரணார்த்தமாகத் தவஞ் செய்யவிசைந்தார், இங்குஎன்னசித்தியை யடைந்தார், இந்தவிபரங்களையும, இன்னும்இதுசம்பந்தமாக நடந்த பலவிஷயங்களையும் சவிஸ்தாரமாகச சொல்லவேண்டுமென்று மரியாதையோடுவேண்ட சூதபுராணிகர் அவர்கள் மீதன்புகூர்ந்து நாரதர் வியாசருக்குச சொன்னவாறே மீண்டுஞ் சொல்லத்தொடங்கினுர்.

ஹேமஹரிஷிகளே! கேட்பீர்களாக, கௌண்டிண்ய குலத்திலவதரித்தவராகிய சுதபஸ்என்ற திருநாமமுடைய ஓர்மகாத்மா வானவர் பிர்மசாயுஜ்பதத்தையடையவேண்டு மென்னும் விருப்பங்கொண்டவராய் இந்தவிருஷபாதிரியென்னும புண்ணியதலத்தில், மிகவுமுன்னதமான தவமியற்றிவந்தனர் இவ்வாறு இவர்தவமியற்றிக்கொண்டு வருங்காலத்தில் ஓர்தினம்ஸ்நானத்தின் பொருட்டாக அந்தத்தபோவனத்திலுள்ளதாகிய தெள்ளிதானநூபுரகங்கையை நோக்கிச்சென்றார் அப்போது அந்தப் புண்ணியதீர்த்தத்தின்கரையில் மிகத்தபோதனராயும், பிர்மநிஷ்டராயுமிருக்கப்பட்ட வாலகில்யாளும், துருவாசபிரமுகாளும் ஆகியமுனிசிரேஷ்டர்கள் வந்தனர். அப்போது இந்தசுதபஸ் என்றமுனிவர் தாம்விரைவில் ஸ்நானஞ்செய்து செல்லவேண்டுமென்னுமெண்ணத்தால் அந்தமுனிவர்களை நோக்காமலும் அவர்களுடன் வார்த்தையாடாமலும் சென்று அகமர்ஷணமந்திரத்தை வாக்கி

னுச்சரித்துக்கொண்டு அந்தமகா நதியிலிறங்கிஸ்நானஞ்செய்தார், இவருடையஸ்நானமானது முடிவுபெற நெடுநேரமானது. இவர் இறங்கி ஸ்நானஞ்செய்துகொண்டிருந்தபடியால் அந்த ஆச்சிரமத்தில் மற்ற முனிவர் இறங்கி மூழ்குவதற்கு இடமில்லாது இவர் ஸ்நானமுடியுமட்டுங் காத்து நின்றார்கள். அப்போது துருவாசர் ஓர் பக்கத்திலிறங்கித் தம்முடைய ஸ்நானத்தை முடித்துக்கொண்டு வந்துவிட்டார். அதுவரையிலும் இந்த சுதபஸ் என்பவர் ஸ்நானமுடித்துக்கொண்டு வரவில்லை. பின்பு அதிகநேரஞ்சென்று இவர் ஸ்நானத்தை முடித்துக்கொண்டு கரையேறி முனிவரை பூஜிப்பதற்காக கந்தமூல பலாதிகளைத்தேடிச் சுமந்து தமதாசிரமத்திற்குச் சென்று அங்குவந்திருந்த துருவாசர் முதலிய முனிவர்களை உபசரிக்க எத்தனித்தார். அப்படி எண்ணுஞ் சமையத்தில் துருவாசர் அதிக கோபத்தை யடைந்து அந்த சுதபஸ் என்பவரைப்பார்த்து பெரியோரை அவமதித்த பேதாய் நீ நாங்கள் வந்து காத்துநிற்பதைக்கொஞ்சமுங் கருதாமல் உன்னிஷ்டப்படியே ஸ்நானஞ்செய்துகொண்டு எங்களை பதியாதிருந்தபடியால் நீ அந்த ஜலத்திலேயே வாசஞ்செய்யப்பட்ட மண்டூகரூபத்தைப் பெறக்கடவாயென்று சபித்தனர்.

இவ்வாறு சபித்தவுடன் அந்த சுதபஸ் என்பவர் மிகவும் அச்சங்கொண்டவராய் அங்கிருந்த துருவாசர் முதலிய ரிஷி கூட்டங்களின் முன் அடியற்ற மரம்போல் சாஷ்டாங்கமாக விழுந்து மகா துக்கத்தோடு மஹரிஷிகளே! நான்செய்த அபசாரத்தைப் பொறுத்தருளி யென்னை யிரட்சிக்கவேண்டும். நான் அறியாமையாலும் என்னுடைய கெட்ட காலத்தினாலும் இவ்வாறு உங்களை அவமதித்தேன். இந்தக் கொடுஞ்சாபம் என்னாற் றாங்கமுடியாதென்று பலவாறாக ஸ்தோத்திரஞ்செய்தார்.

அப்போது முனிவர்களனைவரும் மனதிரக்கமுடையராகி அவரைக் கைகளாற்றூக்கி ஹே சுதபஸ் என்னும் உத்தமா! அரிய தவத்திற்சிறந்தவராகிய துருவாச மகாமுனிவர் எவ்வாறுரைக்கின்றாரோ? அவ்வாறே நடக்கும். அதில் எள்ளளவும் ஐயமின்று. ஆயினும் நீர் அஞ்சவேண்டாம். இந்த சாபமானது விமோசனமாகும் ஓர் மார்க்கத்தைச் சொல்வோம் கேட்பீராக. வராகக்ஷேத்திரத்தினுடைய அடிவாரத்தில் தர்மாத்திரியென்ற ஓர் பர்வதமிருக்கிறது. அதனுடைய கிழக்குப்பாகத்தில் ஓர் மலையருவி பாய்கின்றது, அதன் இருமருங்கி

னும் கற்பகக் காவைப்போன்ற சோலைகளடர்ந்திருக்கின்றன. அந்த அருவித் தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி முறைப்படியே தவமியற்றி சத்திய நிஷ்டராயும், தபோதனராயுமிருக்கிற வசிஷ்டரைச்சேர்ந்த இருடியரும், காசிபரைச்சேர்ந்த முனி கூட்டங்களும், கண்ணுவரைச்சேர்ந்தவர்களும், பாரத்வாசரின வர்க்கத்தாரும் கௌதமரைச் சேர்ந்தவர்களும், வாதஸ்யாயனரைச் சேர்ந்தவர்களும், ஆர்ஷாணரைச்சேர்ந்தவர்களும், இன்னும் சாகலயாள், சாகிகாயனுள் முதலினவர்களும், மற்றவர்களும், பிரமசாயுஜ்யத்தை யடைந்திருக்கின்றார்கள். ஆதலால் நீர் அந்த தலத்திற்குச் சென்று அந்த அருவியில் ஸ்நானஞ்செய்து முறையே தவமியற்றி வருவீராயின் நீர் பெற்றிருக்கும் இந்த மண்டூகரூபமானது மாறி இஷ்ட சித்திகளையெல்லாம் அடைவீரென்றுரைக்க சுதபஸ் மகிழ்ந்து ஹே முனீஸ்வரர்களே! நான் இந்த விருஷபாத்திரியில் மோக்ஷத்தைத் தரும் நூபுரகங்கையில் ஸ்நானஞ்செய்து முறைப்படியே ஸ்ரீமந்நாராயணனைத் தொழுது வருகின்றேன். அப்படியிருக்க ஏதோ என்னுடைய காலகதியால் இந்தக் கொடிய சாபத்தைப் பெற்றேன். இப்பொழுது அந்த சாபத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக அந்தப் பர்வதத்தைச் சார்ந்த விடத்திற்குப்போகச் சொல்கிறீர்கள். அவ்வாறே செல்கின்றேன். ஆனால் நான் மோக்ஷத்தைக்கருதியிங்குச்செய்து வந்த தவம் கெட்டுவிடுமே. இதற்கென் செய்வேனென்றார். இதைக்கேட்ட ரிஷிகள் அன்போடு திரும்பவும் அவரைப்பார்த்து ஹே சுதபஸ்ஸென்பவரே! அதற்காக நீர் கவலைப்படவேண்டாம், இங்குள்ளபடி ஹரியானவர் வாசஞ்செய்கின்றாரோ அப்படியே அந்த இடத்திலும் வாசஞ்செய்கின்றார். அங்கு ஓடுகின்ற அருவியோ இந்த நூபுரகங்கையினின்றும் வேறுபட்டதல்ல. ஆனதால் நீர் அங்கு சென்று முறைப்படியே நாராயணனை வழிபடுவீராயின் உமது சாப நிவர்த்தியாவதோடு உமக்கு இந்த விருஷபாத்திரியில் என்ன பலன் கிடைக்க விருக்கின்றதோ அந்தப்பலனும் அவ்விடத்திலேயே கிடைக்கும். ஆனபடியால் விரைவிற் செல்லுமென்று சொல்லிவிட்டு அந்த இருடியரெல்லோருந் தமதிருப்பிடஞ் சேர்ந்தார்கள்.

பின்பு சுதபஸ் என்பவர் மிக்க ஆனந்தத்தை யடைந்தவராய் அங்கிருந்த தமக்குரிய முனிகணங்களோடும், சிஷ்யர்களோடும், அந்த விருஷபாத்திரியைவிட்டு நீங்கி அங்கு தெய்வசங்கல்பத்தால் எதிரே தோன்றிய விமானத்திலேறி அதிவிரைவில் தர்மாத்திரி வந்துசேர்ந்து அந்தப்பர்வதத்தின் கிழக்குப்பாகத்தில் ஓடுவதாகிய இருமருங்கி

னுஞ் சோலைகளடர்ந்த மலையருவியில் மிக்க பக்தியோடு ஸ்நானஞ் செய்தார். அவ்வாறு செய்தவுடனே அவற்குச் சாபத்தால் நேர்ந்த மண்டூக ரூபமானது சூரியனுக்கு முற்பட்ட பனியைப்போல உடனே நீங்கிவிட்டது. முன்னிருந்த மானிடதேகத்தை மிகவுஞ் சுலபமாயடைந்தனர். இவ்வாறு தமது சாபம்நீங்கியவுடன் சுதபஸ் என்பவர் பேரானந்தக்கடலுள்மூழ்கி தீர்த்தர்களிகாய நம்முடைய சாபமானது இந்த அருவியில் மூழ்கின மாத்ரத்திலேயே தீர்ந்துவிட்டபடியால் நம்முடைய இஷ்டசித்தியெலாங் கைகூடுவதற்கு யாதொரு ...யுமின்றென நிச்சயங்கொண்டு அந்த இடத்திலேயே அமர்ந்து ...ந்தவமியற்றி வந்தனர். இவ்வாறு தவஞ்செய்துவந்த சொற்ப தினங்களுக்குள்ளேயே சர்வலோக ரக்ஷகராகிய விருஷபாத்திரிநாதர் அவர்மீது மனகிரக்கங்கொண்டு யாவரும் பிரமிக்கும்வண்ணம் பீதாம்பரம் விளங்கிய தேகத்தோடும் வளர்ந்த செந்தாமரைப் புஷ்பம் போன்ற இரண்டு கண்களோடும், சூரியப்பிரகாசத்தையொத்த தேககாந்தியோடும், மேகத்தையொத்து விளங்காநின்ற நிறத்தோடும், கௌஸ்துவாபரணம் பிரகாசிக்கின்ற மார்போடும், முத்தாரம், தோள்வளைகள், கடகங்கள், கிரீடம் இவைகளினாலாகிய அலங்காரத்தோடும், ஸ்ரீதேவி, பூதேவியென்னும் இருமாதரும் அமர்ந்திருக்கின்ற இருமருங்கோடும், சாமரங்களைக்கொண்டு வீசுகின்ற சத்திகணங்களோடும், சேவிக்கின்ற ஆதிசேஷன், கருடன் முதலிய பக்தர்குழாத்தோடும், சனகசனந்த சனத்ஸுஜாத முதலான முனீஸ்வரர் செய்யுந் துதிகளோடும், நான்கு பக்கங்களிலும் பிரமாதி சகலதேவர்களுஞ் சூழ்ந்து ஜெயஜெயவென்று போற்றிவருஞ் சிறப்பினோடும், சுந்தரராஜர் என்னும் பெயரினோடு அவர்களுக்கு முன்பு பிரசன்னமானார்.

இவ்வாறு கருணைகூர்ந்து பிரத்தியக்ஷமான ஸ்ரீமந்நாராயணரது திருக்கோலத்தைக் கண்களாரக்கண்டு எல்லையற்ற இன்பமாகிய சமுத்திரத்தில் மூழ்கினவராய்ப் பலவாறுதுதிசெய்து எளியேன்தவத்திற்கிரங்கித்திருக்கோலங் காட்டியதேவதேவனே உனதுதெரிசனை கண்டமாத்திரத்திலேயே எல்லாம்பாக்கியங்களையு மடைந்தவனானேன், என்னையெப்பொழுதும் ஆண்டருளவேண்டும் எந்தையேயென வணங்கினனர், அப்போது எம்பெருமான் மகிழ்ந்து அந்த சுதபஸ் என்பவனைப்பார்த்து தவத்திற்சிறந்த சற்குணனே! நீசெய்தபெருந்தவத்திற்காகமிகவுமகிழ்ந்தனம், நீஇன்றுமுதல் இஷ்டசித்திகளையெல்லாம் அடையக்கடவாய், நீஎக்காலத்தும், இவ்விடத்திலேயேயிருந்து நம்

மைமொழிபட்டு முடிவில் நமது பதத்தை யடைவாயாக. மண்டூக ரூபத்தைப்பெற்ற உன்னால் தவமியற்றி, இஷ்டகாமியத்தை யடைந்த தலமாகையால், இன்றுமுதல் இந்தப் பாவகத்திற்கு மண்டூக பர்வதமென்று பெயர் வழங்கக் கடவது. நீயும் மண்டூக ரூபத்தை, எனதருளால் நீக்கிக்கொண்டபடியால், அந்த ஞாபகார்த்தமாக, உனக்கு இன்றுமுதல் மண்டூகனென்னும் பெயர் பிரகாசிக்கக்கடவது என்று சொல்லி யனுக்கிரகித்தார். இவைகளைக்கேட்ட அந்த சுதபஸ் என்பவர் மீண்டும் ஸ்தோத்திரம்பண்ணி சில காரியங்களை விண்ணப்பஞ்செய்ய ஆரம்பித்தார்.

இத்தப்படிக்கு விருஷபாத்திரி மஹாத்மியம்.
எட்டாவது அத்தியாயம்
முற்றிற்று.

ஒன்பதாவது அத்தியாயம்.

முன் சொல்லியபடி ஹரியின் தெரிசனத்தையும் வரப்பிரசாதத்தையும் பெற்ற மண்டூக முனியானவர் மீண்டும் ஸ்ரீபகவானிடத்தில் சிலகாரியங்களை விண்ணப்பித்துக் கொண்டதும் அதற்குப் பகவான் அனுக்கிரகித்ததுமாகிய விஷயங்களை நாரதர் வியாசருக்குச் சொன்னபடியே, சூதபௌராணிகர் நைமிசாரணிய வாசிகளுக்குச் சொல்லத் தொடங்கினார்.

பிரமரிஷிகளே! கேளுங்கள் முந்தி யுரைத்தபடியே மண்டூக முனியானவர் ஹரிவாசுதேவரது தெரிசனத்தையும் வரப்பிரசாதத்தையும் பெற்றுக்கொண்டு மீண்டும் அந்த பகவானைப் பார்த்து வணங்கி உலகரக்ஷகா! நீர் பிரமஸ்வரூபியாயும், சர்வ காரணங்களில் நிறைந்தவராயும், அடியார்செய்யுந் தவத்திற்கிரங்கித் தெரிசனை யளிக்கின்ற திடகாத்திரத்தையுடையவராயும், யோகிகளுக்கு முத்தியைக் கொடுக்கிறவராயும், அவ்யக்தராயும், ஆதிரூபராயும், சர்வபிராணிகளுடைய அந்தராத்மாவாயும், சகலமும் அறிந்தவராயும், மனசுத்தியுள்ளவராயும், முக்தராயும், முக்தாத்மாக்களான முனிவரிடத்தில் விசுவாசமுடையராயும், சுத்த சத்துவகுண சம்பன்னுள்ளான ஞானிகளால் சேவி

க்கப்பட்டவராயும், ஜகத்காரணராயும், சர்வபூதங்களுக்கும் பிரளயஸ்தானராயும், அவ்யயராயும், சர்வபூதங்களும லயததையடைந்த பொழுதும் சகலமும் ஸ்திரமாயியங்கும்பொழுதும் சர்வத்துக்கும் பிரதான மூர்த்தியாயும, சமஸ்தவஸ்துககளுடைய சேஷங்களினுலே பரிசிக்கப்படாத ரூபத்தையுடையவராயும், சேஷியாயும, ஸ்ரீதேவியோடும் பூதேவியோடுங் கூடிககொண்டு சிரமபரிகாரார்த்தமாக உரிய ஸ்தானங்களில் அடிக்கடி சயனமபண்ணப பட்டவராயும, சாந்தாளாகிய பக்தர்களாற சூழப்பட்டவராயும, சராசராதமகமான லோக முழுவதும் சமமாய்ச சூனியமாகும்பொழுது நாமரூபஙகளிலலாத சமஸ்த சேதனங்களோடுங் கூடிக்கொண்டு எல்லாப புருஷர்களுடைய நானுவிதங்களான புராதன காமஙகளைப பார்த்து ஏகராய்ச் சுயரூபத்தோடிருந்துகொண்டு அநேக ரூபஙகளோடு வெகு பிரகாசமாக ஆகபபோகின்றவராயும. நானுவித ஆதமகணங்களும, மறைந்திருக்கிற மாயையை ஆதமகயாணததினுலேயே போககடிக்கிறவராயுமிருக்கின்றீர்.

இக்கத்தன்மையானது அக்ஷரசொரூபமாயும், நான்குபக்கங்களிலுஞ்சமமாயும, வேதமனஸ்வினின்றும வேறுபட்டதாயும், மகத்தாயும் வழங்குகின்றது, இநத அக்ஷரரூபததினின்றும் பூதங்களுக்காதிபூதமான அகங்காரமுண்டாகிறது, சதவ, ரஜஸ், தமோ, வென்னுமூன்று குணங்களினவயபபட்டு அநத அகங்காரம் மூன்றுவிதமாகிறது, இராஜசகுணாதமதோடுங் கூடியததவகுணததினின்றும இந்திரியமுண்டாகிறது, ஸதவரஜோ குணயுக்தமானதமோ குணததினின்றும், பஞ்சதன் மாத்திரைகளுண்டாகின்றன, பஞ்சீகிருதமான பூதஙகளினின்றும் மகத்தானஅண்டமானது உண்டாயிற்று, அநத அண்டததில பிர்மாவானவர உமதனுககிரகததால சநநிககமலவாயிலாகததோன்றினுர். அவராலேசகலமான ஜகததும சிருஷ்டிககபபட்டது. அந்தஜகததைநீரெப்போதும பாலனைபண்ணுகிறீர். இநதப்பிரமாணடததை முடிவுகாலம் வநதபோது நீரேஸ்வயமாக சங்காரம் பண்ணுகிறீர். இந்தப்பிரகாரம எல்லா ஜகத்தையும் சிருஷ்டித்தும, இரக்ஷிததும், சம்ஹாரம் பண்ணியும் சந்தோஷத்தையடைகிறீர். ஹே மாதவா! நீர் ஒருவரே சகல தேவர்களுக்குள்ளேயும் பிரதிபாதிக்கப் படுகிறீர், சர்வாத்மாவாயும் ஜனர்த்தனராயு மிருந்து சகலராலும் சர்வயக்ஞங்களாலும் கொண்டாடப்படுகிறீர். சர்வபூதாத்மாவாயும் எல்லோருக்கும் பலததைக் கொடுககிறவராயு மிருந்து கர்மாவினுலே ஆரா

திக்கப்படுகிறீர், சுத்த தேஜஸ்ஸையுடையபிர்மாவினாலும ஆராதிக்கத்தக்கவரா யிருக்கிறீர், பக்தருக்கு சம்சார பயத்தைப்போக்கடிக்கிற கைவல்யமான ஞானத்தைத யளிக்கின்றவராயு மிருக்கிறீர், மோக்ஷ விருப்பமுடையவாகள் உம்மையே சரணமாக அடைகின்றார்கள், உம்முடைய அனுக்கிரகத்தினாலே தொண்டர்கள் உம்முடைய சாயுஜ்யத்தை யடைந்து உம்மாலேயே எப்பொழுதும சந்தோஷத்தையடைகின்றார்கள், சம்சாரதாபத்தினாலே துக்கத்தையும், மயக்கத்தையும அடைந்தவாகளாயிருந்தாலும், ஹிதாளாயிருந்தால் அத்தகையினாகளையும நீரேபரிபாலிக்கிறீர், ஹேபுருஷோத்தமா நீர்தான் கொஞ்சமவியாஜீகரித்து ஆதமஞானியாயும், ஆதமபக்தாளாயும, இருக்கிறவாகளை உபாசிக்கிறீர், அவாகளைமறுபடியும் பிர்மவித்துக்களோடு சேகருமபடிசெய்கிறீர், உம்முடையபிரசாதத்தினாலேயே சகலபிராணிகளையும விகனெங்களைகநீரத்து உம்முடைய சரணாரவிந்தப்பிராபதியை யடையும்படிசெயகிறீர், இந்தலோகத்தில் காலக்ஷேபத்தினாலே சாதுக்களுக்கு சங்கடமுண்டானபொழுதும், வைதிகசமபிரதாயங்கட்கு துஷ்டாகளாலவிக்கினம் நேர்ந்தகாலத்தும அவைகளைதநீக்கும பொருட்டாக அடிக்கடி உலகத்திற்பல ரூபங்களோடவதரிக்கின்றீர், மனிதாமுதலிய எவர்க்கும யுகந்தோறும் அந்தந்தசமபங்கட்கேறப ஆங்காங்க இஷ்டதெய்வமாக விளங்குகின்றீர் ஆகலால் இத்தன்மைகட பெருமைவாய்ந்த உமக்கு என்னை யிரக்ஷிப்பது ஓர் பெரிய காரியமல்ல, ஆதலால் என்னை ஆண்டருள வேண்டுமென்றார்.

அப்போது ஸ்ரீ யாபதியாகிய பகவான் அந்த மண்டூகனைப் பார்த்து ஹேமுனிவ! உன்னுடைய அருந்தவத்திற கிரங்கியே உனக்கு எளிதிற பிரத்தியக்ஷமாகி வேண்டிய வரங்களைக கொடுத்தோம். இன்னும உனக்குவேண்டிய வரம யாதேனுமுளதேல் தெரிவிப்பாயாக. அதனபடியே அனுக்கிரகிப்போமென்ற திருவாய் மலர்ந்தருள மண்டூகமுனியானவர் மிக்க சந்தோஷத்தையடைந்து அஞ்சலியஸ்தராய் சகல லோகரக்ஷகராகிய எமது பகவானே! சாவபிராணிகளுக்கும் அந்தராத்மாவாயிருக்கப்பட்ட உம்முடைய சாயுஜ்யத்தை யடைய விரும்புகின்ற நான் இப்போது உம்மைத் தெரிசித்த பலனால் சகல நன்மைகளையும அடைந்தவனாய் விட்டேன். ஆயினும எனனை எப்போதும உமது பாதத்தடியிலிருக்கும்படியாயும், எல்லாவிடத்திலும் எப்போதும எந்த அவஸ்தைகளிலும் உம்மீதுள்ள பக்தியானது என்னைவிட்டு நீங்காதிருக்கும்படியாயும அனுக்கிரகிக்க வேண்டுமென்றார்.

இப்படியுரைத்த அந்த மண்டூகரை விருஷபாத்திரி வாசியான ஸ்ரீ ஹரியானவர் பார்த்து மிக்க தயவோடு ஹே மண்டூகமுனிவ! இந் தவராக க்ஷேத்திரமானது மிகவும் உத்தமம் பொருந்தியதாகையால் இந்த இடத்தில் நாம் உனக்குப் பிரத்தியக்ஷமாகி விருஷபாத்திரியில் அடையவேண்டிய பலனை இங்கு அடையும்படி செய்தோம். ஆன தால் இந்த இடத்தில் நாம் எப்பொழுதும் வாசஞ்செய்துகொண்டிரு ப்போம். நீயும் பூதங்களெல்லாம் நாசமாகிற வரையில் உன்னுடைய சிஷ்யவர்க்கத்தோடுகூட விருந்து நம்மைக்குறித்துத் தவம்புரிந்து வரு வாயாக. அப்படிச்செய்துவந்தால் முடிவில் நம்முடைய சாயுஜ்யத்தை உன்னுடைய அபிப்பிராயப்படியே யடைவாய். இந்த இடத்தில் நம்மை வழிப்படுகிற மற்றோர்வாக்கும் இதே பலன் ஐயமின்றிக் கிடை க்குமெனச் சொல்லிவிட்டு உடனே மறைந்தனர். அதுமுதற்கொண்டு மண்டூக முனியானவர் தம்முடைய சிஷ்யர்களோடிருந்து இன்னும் அந்த இடத்தில் தவம்புரிந்து வருகின்றார். இப்போது அந்த இடமா னது மண்டூக பர்வதமென்று வழங்கப்படுகிறது. இந்த வராக க்ஷேத் திரமானது விருஷபாத்திரிக்குச் சமமான மேன்மையுடையது. ஹே முனிவர்களே! இந்த வராகக்ஷேத்திரத்தின் மகிமையை ஒருவிதத் தாற் சொல்லமுடியாது. இந்த விருத்தாந்தத்தை மிகுந்த பக்தி சிரத் தையோடு கேட்ட மனிதர்கள் பெருமை அடைதற்கரிய உன்னத பல ன்களைப் பெறுவார்கள். இந்தப் பிரசங்கிக்கச் செய்பவர்க்கும் மிக்க மேன்மையே யுண்டாகும் என்று நாரதர் வியாசருக்குச் சொன்னபடி யே சூதபுராணிகர் நைமிசாரணிய வாசிகளுக்கு வராகக்ஷேத்திரத்தி ன் மகிமையைச் சொல்லிமுடித்தார்.

வராகபுராணத்தில் மண்டூகமுனி சாயுஜ்யத்தில்
ஒன்பதாவது அத்தியாயம்

முற்றிற்று.

பத்தாவது அத்தியாயம்.



முன் சொல்லியபடி வராகக்ஷேத்திரத்தின் மகிமையைக் கேட்ட சௌனகாதி மகாரிஷிகளெல்லாரும் மிகவு மனமகிழ்ச்சியடைந்து சூதபௌராணிகரை நோக்கி ஹே முனிபுங்கவ! உமது பேரருளால் விருஷபாத்திரியின் மகிமையையும், பகவானது அருட்டிறத்தையும், வராகக்ஷேத்திரத்தின் உன்னத தன்மையையுங்கேட்டு மிக்க மகிழ்வடைந்தோம். ஆச்சரியமாயும் சமானமற்றதாயும், புண்ணிய ரூபமாயும், கேட்பவர்களுடைய பாவங்களை அப்பொழுதே போக்கக்கூடியதாயும் இருக்கின்ற இந்த விருஷபாத்திரியின் வைபவமானது மகாபுண்ணியத்தைக் கொடுப்பதாயும், புராணங்களில் முக்கியமாகச் சொல்லப்பட்டதாயும், சர்வலோக ஹிதமானதாயும், எங்கும் பிரசித்திபெற்றதாயும், மனோகரமானதாயும், மனோபீஷ்டங்களைத் தரத்தக்கதாயும் கேட்கக்கேட்க ஆனந்தத்தை விளைவிக்கக் கூடியதாயுமிருக்கிறது ஆனதால் இன்னும் இதைப்பற்றிய சரித்திரங்கள் இருக்குமானால் அவைகளையும் தயைகூர்ந்து உரைத்தருள வேண்டுமென்று கேட்டார்கள்.

அப்படிக்கேட்டவுடன் காலத்தில் சூதபௌராணிகர் மிகவுமகிழ்ச்சிகூர்ந்து அவர்களைப்பார்த்து சௌனகாதிரிஷிகளே! நீங்கள் ஸ்ரீவாசுதேவரிடத்தில் மகாபக்தியுள்ளவர்களாகவும், விருஷபாத்திரியைப்பற்றிக் கேட்டபின்பு மேலும் விருப்புடையவர்களாயும் இருக்கிறபடியால் உங்களை முன்னிட்டு நாரதர் அகஸ்தியரிடத்திலிருந்து பக்தியோடு கேட்டு வியாசருக்குச்சொல்லி அவரிடமிருந்து நான்கேட்டதாகிய இந்தவிருஷபாத்திரியைப் பற்றிய இன்னுமிருக்கப்பட்ட சில கதைகளையுஞ் சொல்லுகிறேன், பக்தியோடு கேட்கக்கடவீர்களாக வென்று சொல்லத்தொடங்கினார்.

ஹே மஹாரிஷிகளே! கேளுங்கள் ஓர்காலத்தில் நாரதரானவர் பலரிஷிகளோடு சேர்ந்து பொதிகை மலையைச்சார்ந்து தவமியற்றிக் கொண்டு வருங்காலத்தில் அந்தப்புண்ணிய பர்வதத்தில் அகஸ்தியர்வாசஞ் செய்வதைக்கேள்வியுற்று நாரதரானவர் அவரைப்பார்க்கவேண்டுமென்னும் அவாவுடையாராய் மிகவும்விரைந்து சென்று அவரைக்கண்டு முறைப்படியே வணங்கினார். அவரும்பிரதி வந்தன

ங்கூறி பிர்மரிஷிகளுட்சிறந்த நாரதரே? வருக! வருக!! உம்மோடு ச ம்பாஷித்து நெடுநாளாயிற்று. தாமதிரிலோகசஞ்சாரியாயிற்றே. ஏதே னும் விசேஷமிருந்தாற் சொல்லுமென்றுரைக்க நாரதர் அவரைப் பா ர்த்து முனிவர் பெருமானே! நான் தங்களுக்குச் சொல்லவேண்டிய விசேஷம் ஒன்றுமில்லை. தாங்கள் எனக்குச் சொல்லவேண்டிய விஷ யமொன்றிருக்கின்றது. அது குறித்தே தமது திருமுன்னர் வந் தேன். ஆதலின் தயைசெய்யவேண்டுமென்றுகூற அகஸ்தியர் தாம் குறிப்பிட்ட அந்த விஷயமென்ன தெரிவியும், நான் கூறுகின்றேனெ ன்றுரைத்தார்.

அப்போது நாரதர் அவரைநோக்கி தவத்திற் சிறந்த அகத்திய மாமுனி பெருமானே! நான் இதற்குமுன் விருஷபாத்திரியென்ற ஓர் புண்ணிய க்ஷேத்திரத்தின் மகிமையைக் கேட்டிருக்கின்றேன். ஆயி னும் இன்னும் அதில் எழுந்தருளியிருக்கின்ற பகவான் எவரெவருக் கு எதனெதன்பொருட்டுப் பிரத்தியக்ஷமாகி எவ்வகைப்பட்ட வரங் களைக் கொடுத்தாரென்பது முதலாக அது சம்பந்தமாயுள்ள பல சரி த்திரங்களையும் தங்கள் திருவாக்கினாலேயே மீண்டும் கேட்க விரும்பு கின்றேன். இதுதான் எனது கோரிக்கையென்றுரைக்க, அகஸ்தியர் பேரானந்தமெய்தி நாரதரே! அந்த விருஷபாத்திரி நாதரது மகிமை நம்போலியரால் அளவிடற் கரியது. ஆயினும் நீர் அதிக பக்தி சிரத் தையோடு கேட்கின்றபடியால் யான் எனக்குத் தெரிந்தமட்டுஞ் சொ ல்கின்றேன் கேட்டு ஆனந்தியுமென்று சொல்லத்தொடங்கினார்.

நாரதமகாமுனிவரே! நீர் விரும்பியவண்ணமே அந்தவிருஷபாத் திரி நாதரது மகிமையை யெடுத்துரைப்பேன் கேட்பீராக. பூர்வத் தில் சந்திரகுலத்திலே யவதரித்த புரூரவஸ் என்ற ஓர் அரசனிருந் தான். இவன் வேதாங்கங்களுடைய தத்துவங்களை யுணர்ந்தவன் சமஸ்த சாஸ்திரங்களிலும் மகா சமர்த்தன். நீதிமார்க்கங்களை முற்று முணர்ந்தவன். சர்வசாஸ்திரப் பயிற்சியுள்ளவர்களுக்குள்ளே மிகவுஞ் சிரேஷ்டம் வாய்ந்தவன். தேவேந்திரனுக்குச் சமானமாயும், மகா ஸ்ரீ மானாகியும் இருந்தவன். அசுரர்களை ஜெயித்து முனிவருக்குப் பேரு தவி புரிந்தவன். சமுத்திரஞ்சூழ்ந்த புவிமுழுவதிலும் அரசாண்டு வந்த பல மன்னரை ஜெயித்து ஏகசக்கராதிபதியானவன். இவன், சக்கிரவர்த்தியென்று பலருங் கொண்டாட ஏழு தீவுகளுக்கும் அர சனாய் உத்தரதிக்கிலுள்ள காசியென்னும் தலத்திலே வதிந்து புவி

முழுமையும் ஓர் குடைக்கீழலி லாண்டு செங்கோல் நடாத்தி வந்தான். இவன இவ்வாறே நெடுங்காலம் அங்கு வாசஞ்செய்து பின்பு ஒரு காலத்தில் தக்ஷிண திசையை நாடிவந்து புண்ணிய பூமியாகிய ஓரிடத்திற சிப்பிகளைகொண்டு மணலூரென்னும ஓர் திவ்யபட்டினத்தை நிருமித்து அதில் வசித்து ஏக சக்ராதிபதியாய் அரசு செலுத்தி வந்தான.

இவனுக்கு அதிக பராக்கிரமமுள்ள நான்கு புத்திரர்கள் அவதரித்திருந்தார்கள். இவர்கள் சரியான பருவத்தை யடைந்த காலத்தில் புரூரவஸ் மோக்ஷத்தை யடைந்தான். இவன் இவ்வாறு சென்றபின் அவன்புத்திரராகிய நால்வருக்குள் மூத்தவனாகிய இந்திரத்யுமனனுக்கு மந்திரிமுதலியோர்கூடி இராச்சியபட்டாபிஷேகம் செய்துவைத்தார்கள். இவ்வாறு பட்டாபிஷேகத்தைக் கொண்ட அந்த இந்திரத்யுமனனென்பவன மிகவும் தர்மிஷ்டனாய் பாண்டியபூமிக்கு இராஜாவாயிருந்து அரசுசெலுத்திவந்தான். இவன் இவ்வாறு அரசுசெலுத்திவருங்காலத்தில் நெடுங்காலமளவாக புத்திரப்பேறின்மையால் வருந்திபின்பு புத்திராபேக்ஷையால் புத்திரகாமேஷ்டி யாகஞ்செய்தான். அந்த யாகத்தின்பலனால் அந்த இந்திரத்யுமனனுக்கு ஸ்ரீநாராயணரைப்போல ஸ்ரீமானாகிய ஓர் புதல்வனவதரித்தான். இந்தப்புத்திரன் சகல லக்ஷணங்களும் பொருந்தியவனும், சக்கரவர்த்திகளுக்குரிய குணம்படைத்தவனும், புதக்கத்திரசக்கரபாணிக்குச்சமான மானவனும், மலயாசலத்தைப்போன்ற திடதைரியமுள்ளவனும, மகாபலமுடையவனுமிருந்தான், இப்படியிருந்த இவனுடைய பிரதாபத்தைக்குறித்துத் தந்தை மகிழ்ந்து இவனாபினால் மலயபர்வதத்திற்குத்துவஜம் போல விளங்கப்போகின்றதுணர்ந்து அதற்குத்தக்கபடி இவனுக்கு மலயத்துவஜன் என்னுந்திருநாமத்தைச் சூட்டினன்.

இந்தமலயத்துவஜனென்பவன் எல்லாவிஷயத்திலும் மகாபிரசித்திபெற்றவனும, பிரசித்தமான குணசீலங்களை யுடையவனும், சகலவிஷயங்களிலும சமர்த்தனும், மகாசூரனும், ஆத்மகாரியங்களிற் றேர்ந்தவனும், சந்திரனைப்போல குளிர்ச்சியும், அழகும், பரோபகாரமுமுள்ளவனும், சகலஜனங்களுக்கும் விருப்புடையவனும், மிகவுஞ்சத்தியசந்தங்கியவனும், மகாமேதாவியாயும், பூரணபாண்டித்யமுள்ளவிதவானும், சமயத்தை யறிந்தவர்களுக்குள்ளே சிரேஷ்டனும, விஷ்ணுபக்தியினாலே வியாபிக்கப்பட்ட ஆத்மபுத்தியையுடையவனும, மாதாபிதாக்களை ஆதரவோடு சம்ரக்ஷணை

பண்ணுகிறவனையும், பிராமணபக்தியுள்ளவனையும், க்ஷத்திரிய கரும ங்களைத்தெரிந்தவனையும், மகாதநிஷ்டனையும், புண்ணியதீர்த்தஸ் நானங்களிற்பிரியமுள்ளவனையும், வைதிககர்மங்களை சரிவர நடத்துகிற வனையும், விளங்குந்தன்மையை இவன்பிதாவாகிய இந்திரத்யும்னன றிந்து சகலஜனங்களுங் கொண்டாட இந்தமலயத்துவஜனுக்கு இரா ச்சியபட்டாபிஷேகஞ் செய்துவைத்தான்.

பின்பு அந்தஇந்திரத்யும்னனவன்தனது புத்திரனாகிய மல யத்துவஜன இராசியத்தை ஆண்டுவரும் ஒழுங்கைநோக்கி இவன் இந்த இராச்சியாதிகாரத்தைவகிப்பதற்குத் தகுதியானவனே யெ ன்று நினைத்து அவன்நெறிவழுவாது அரசுசெலுத்துவானென்னு ந் தைரியங்கொண்டு அவனை அங்கிருந்து அரசுசெலுத்தும்படி செ ய்துவிட்டு தான்மகாபுண்ணியக்ஷேத்திரமாகிய விருஷபாசலத்திற் குப்போய் அங்கிருந்து மகாஉக்கிரமாகிய தவத்தைச் செய்து புரு ஷோத்தமரான சுந்தரராஜனை உபாசித்து அந்திமகாலத்தில் யோகாப் பியாசத்தினால், சரீரத்தை விட்டுவிட்டு ஸ்ரீமந் நாராயணனுடைய பர மபதத்தையடைந்தான்.

பின்பு மலயத்துவஜராஜன் சகலபூமியையும் சந்திரனைப்போன் றிருந்து யாவருஞ் சிலாகிக்கும்படி பரிபாலிக்கலானான். இவ்வாறு பரிபாலித்து வருங்காலத்தில், தினந்தோறும் கங்கையிற் சென்று நிய மப்படி ஸ்நானஞ்செய்து வந்தபின் பர்வதங்களிற் பிரவேசிப்ப தென்ற ஓர் உன்னத விரதம்பூண்டு அவ்விதமே நாடோறும் தவறாம ல் விரதத்தை நிறைவேற்றி வந்தான். இவ்வாறு நடத்திவருங் கால த்தில், ஒருநாள் வழக்கப்படியே கெங்கையிற்போய் ஸ்நானம் முதலியனவைகளைச் செய்து திரும்பிவருங் காலத்தில் விருஷபர்வத த்தின் வழியாக வந்து அப்பர்வதத்தின் மேலேறி உச்சியிற் சென்றா ன். அப்படிச் செல்லுங்காலத்தில் அங்கே வாசமாயிருந்த விஷ்ணு பக்தர்கள் கூடிக் கோபங்கொண்டு அவனை மேலே செல்லவொட்டா மல் தடுத்துத் தள்ளிவிட்டார்கள். அப்படித் தள்ளினவர்கள் இன் னவரென்று மலயத்துவஜனுக்குத் தெரியாததினால் நினைத்து நாம் இவ்வளவு பராக்கிரமசாலியாயிருந்தும் யாரோ நம்மைப் பிடித்துத் தள்ளிவிட்டார்களேயென்று கோபங்கொண்டு தன்னைத் தடுத்தவரை இன்னவரென்றறியும்பொருட்டு நான்கு திக்குகளிலும் தேடினான். இஃதுணர்ந்த மலயத்துவஜனது வேலைக்காரர்களும் தேடித்திரிந்தா ர்கள். அப்பொழுதும், அவர் கண்களுக்கு ஒருவரும் தோற்றவில்லை.

அதன்மேற் பணியாளர் மலயத்துவஜனைப் பார்த்து எமதிறைவனே! தங்களைத் தள்ளினவரை யறியும்பொருட்டு நாங்கள் பலவிடங்களி லும் தேடியும் ஒருவரும் அகப்படவில்லை. இது ஏதோ மாயமாயிரு க்கின்றதென றுரைத்தார்கள். அதனமேல் மலயத்துவஜன் தனது பரிவாரங்களை நோக்கி நம்மவர்களே நமக்கு இதுவரையிலும் இவ்வித அவமானம் நடந்ததேயில்லை. ஆனபடியால் எப்படியாவது நம்மைத் தடுத்தவரைக் கண்டுபிடித்துத் தண்டிக்கலலாது நாம் இவ்விடத்தை விட்டுப்போவது சரியல்ல. நீங்கள் எப்படியாவது பிரயாசத்துட ன் தேடிப்போய் நம்மைத் தடுத்தவரைக் கட்டாயம் பிடிக்கவேண்டு மென்று ஆஞ்ஞாபித்துவிட்டு அவன் மிகுந்த விசனத்தோடும், சந்தே கத்தோடும் அவ்விடத்திலிருந்தான். அவன் பணியாட் களும் அவ்வாறே எங்கும் தேடித்திரிந்தார்கள்,

இவ்வாறு அவர்கள் திரிந்திருக்கும்போது அரசன் நித்திரைசெய் யுஞ் சமையத்தில் ஸ்ரீ ஹரியானவர் கனவில் பிரத்தியக்ஷமாகி ஹே மலயத்துவஜா! நீ [illegible] பர்வதத்திலேறுங்காலத்தில் தகா தெனத் தடுத்தவர் என்னுடைய சைனியர்தாமே ஆதலால் நீ அதற் காகத் துயரப்படவேண்டாம், என்னைச் சேர்ந்தவர்களன்றி இந்தப் பூவுலகில் உன்னைத் தடுப்பவரெவரிருக்கின்றனர். உன்னையாட்கொள் ளும்பொருட்டு [illegible] உனது தந்தை என் னை வழிபட்டுப் பக்தனாய் உன்னைப் புத்திரனாக அடைந்தான். நீயும் உன் தந்தையைப்போல் என்மீது அதிக பக்தியுடையவனா யிருக் கின்றாய். உன்மீது எனக்கும் அதிகப்பிரீதி யேற்பட்டிருக்கின்றது. நான் ருஷபாசலத்தில் எப்பொழுதும் வாசஞ்செய்துகொண் டிரு க்கின்றேன். ஆனபடியால் நீ என்னை இவ்விடத்திருந்தே வழிபட்டு இஷ்டசம்பத்தை யடைவாயாகவென்று கட்டளையிட்டு மறைந்தரு ளினார்.

இவ்வாறு கண்ட மலயத்துவஜன் அடங்காப் பெருமகிழ்ச்சி கொண்டு ஆஹா மதிமோசம் போய்விட்டேன். எம்பெருமான் வாசஸ் தானமென்றறியாமல் இந்தப் புண்ணிய பருவதத்தின் மேலேறி அவமதித்தேன். எம்பெருமான் என்மீது இவ்வளவு கருணைகொண் டு தெரிசனந்தந்தது நான் செய்த பாக்கியமே இனி எப்பொழுது சுந்தரராஜனுடைய திருக்கோலத்தைக் காண்பேன். இனி அவருக்கே

தொண்டுபூண்டு அவனைக்குறித்தே தவமியற்றி அவனால் வேண்டிய
வரத்தைப் பெற்றுக்கொள்வதனையன்றி வேறொன்றையும் நாடேனென மன
த்தீர்மானித்துக்கொண்டு உடனே ராஜ்யபரிபாலனத்தை மந்திரி
களைக்கொண்டு நடத்தும்படி செய்துவிட்டு தான் அந்த விருஷபாத்
திரியிலேயே தவமேற்கொண்டு ஆச்சரியமான நேமத்தையுடைய
வரும், அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகருமாகிய அச்சுதனைக்கு
றித்துத் தவமியற்றி வரத்தலைப்பட்டான்.

அவ்வாறியற்றத்தொடங்கி சில நாட்களளவாக கந்தமூலபலா
திகளை உண்டும், வாயுபக்ஷணஞ்செய்தும், ஸ்ரீவாசுதேவனை மனதிற்
றியானித்துக்கொண்டு இ சிரிய நிஷ்டைகள் செய்து நிராகாரனாய்க்
கொஞ்சக்காலமிருந்துவந்தான். பிறகு சிலகாலம் அச்சுதானந்தா
கோவிந்தாவென்ற திருநாமங்களைச் சொல்லிக்கொண்டு சுந்தரரூபரா
யிருக்கின்ற அந்த அரியை ஏகாக்கிரதையாய், மனதிலிருத்தி அவருக்கு
அர்க்கியபாத்திய ஆசமனீயமென்ற உபசாரங்களைச் செய்து ஸ்தோத்
திரித்துக்கொண்டு வழிபட்டுவந்தான்.

இவ்வாறு செய்துவருங்காலத்தில் சுத்தஜன நேசராகிய சுந்தர
ராஜப்பெருமாள் மலயத்துவஜனுக்கு ஆகாசத்தில் பக்ஷிராஜன் கருடா
ரூடராயும், சங்குசக்கரதாரியாயும், மகாலக்ஷ்மி விளங்கும் மார்பினை
யுடையவராயும், தாமரைப்புஷ்பங்களையொத்த கண்களையுடையவ
ராயும், சர்வாபரணங்களோடு கூடியவராயும், சர்வப்பிராணிகட்கும்
மனோகரராயும், பீதாம்பரதாரியாயும், மாலைகளை அணிந்தவராயும்,
நீலமேகஸ்யாமள ரூபராயும், பூதகணங்களாற் சூழப்பட்டவராயும்,
நேரிற் பிரசன்னமாகித்தம்முடைய திருவாக்கினாலே அவனைப் பார்த்து
ஹே குழந்தாய், ஹே கல்யாணா, உனக்கு மங்களமுண்டாகுக. உன்னு
டைய மகாபரிசுத்தமாகிய தவத்திற்கிரங்கியே இங்ஙனம் பிரத்தியக்ஷ
மாயினேம். நீ நன்றாயுற்றுநோக்கி என்னைத் தெரிசிப்பாயாக. உன்மீது
எனக்கு எல்லை அன்புண்டாயிருக்கின்றது. உனக்குவேண்டிய அனு
க்கிரகங்களைச் செய்வேனென்று திருவாய்மலர்ந்தருளினார்.

அவ்வாறு அருள்சுரந்து பிரத்தியக்ஷமாகி கிருபைமொழிகளைக்
கூறிய தேவதேவராகிய அச்சுதனை மலயத்துவஜன் பார்த்து அடங்
காப் பெருவகையையும் ஆச்சரியத்தையுமடைந்து தேகபரவசமாகிப்
புளகாங்கிதங்கொண்டு மகிழ்ச்சிபொருந்திய வார்த்தைகளோடு சாஷ்

டாங்கமாக நமஸ்காரஞ்செய்து [illegible] ஸ்தோத்திரஞ்செய்து பின்பெரு
நதுநின்று பகவானை [illegible] ஹே ஜநார்த்தநா! நீர்
[illegible] அடியவர்களுக்கு இரங்குகின்றவ
ராய், [illegible] அவர்களைத் தாங்குகின்றீர். ஆ
கையால் [illegible] குற்றங்களையும் பொறுத்துக்கொள்ளவே
ண்டும். [illegible] அறிந்துசொல்லுகற்
கு [illegible] யுடையவராயும், சகலத்திற்கும் கார
ணராயும் [illegible] மை இந்தாசிரியே என்வ
ளவு [illegible] செய்யவல்லவராயும் எவராலறியவல்ல
வர் [illegible] ஜ்ஞாதியையும் அசுரர்களையும்
ஜெயிக்க [illegible] சபைக்கப்பட்டதேவ
சேவைக்கு [illegible] நின்றும் அடியே
னைக்காப்பாற்றவேண்டும் [illegible] மைக்கு ஈ
னைத்தேவராயும் [illegible] இன்னும் தெரிசி
க்கப் [illegible] பலனும் முழுமையும் நூறு அஸ்வ
மேதயாகம் [illegible] போதானப, [illegible] பிசைவக
ளினால் மட்டமேன [illegible] அப்பாவியும் அடைந்தவனேயோ
லாமோ [illegible] உடமுடைய தெரிச
னம் [illegible] நம்முடைய [illegible]
[illegible] தெரிசனம் [illegible] பெற
றேன், [illegible] தெரிசனமாம் இராஜ்யத்துக்கு
மேம்பாடு [illegible] இத்தனை பன செய்த
தவத்தை [illegible] தெரிசனம் [illegible]
மெத்தவும் ஆச்சரியமாயிருக்கின்றது. ஹே கேசவா! எ
னக்குக் [illegible] ஆசிர்வாதம் எனக்குத் தந்தையும்
நீர், [illegible] நீர், [illegible] நீர், ஆதலால் என
னையிப்படியே [illegible] வேண்டுமென்றிரந்தார்.

அந்தச்சமயத்தில் ஸ்ரீ பகவான் [illegible] த்வஜனை அருளோடு
பார்த்து [illegible] நிலைமைக்காகவே [illegible] ஹேமலயத்து
வஜர் பூர்வம் [illegible] முடைய வர்களாய் என்னை
உபாசித்து என்னுடைய [illegible] த்தினாலேயே இந்தமண்டல
த்தையாண்டுவந்து முடிவில் என்னுடைய பதத்தை யடைந்தார்கள்.
அதுபோல நீயும் என்னுடைய [illegible] த்தினாலே இராஜ்யத்தை
யடைந்தவனாயிருக்கின்றாய். நீ [illegible] வசந்தவிரதத்தினாலும்

நமக்கு அதிக திருப்தியேற்பட்டிருக்கின்றது ஆதலால், உன்னுடைய மனோபீஷ்டப்படியே சகலவரங்களையும் சித்தியாய்க்கொடுக்க விருக்கின்றோம். நீ உனக்கிஷ்டமான வரங்களைக் கேட்டுக்கொள்ளக்கடவா யென்றுரைத்தனர்,

இவ்வாறு சொன்னபகவானுடைய அமிர்தமயமாகிய வார்த்தைகளைக் கேட்டவுடனே மலயத்துவஜன் பெருமகிழ்ச்சியடைந்து தேவராங்ய ஸ்ரீ வாசுதேவரைப்பார்த்து என்ஸ்வாமியே பெருமைபொருந்திய ஸ்ரீ பகவானே! உன்னுடைய பூரணதெரிசனத்தை யடைந்ததே எனக்குப் போதுமான வரமாயிருக்கின்றது ஆயினும் இன்னும் ஒரு காரியத்தை விரும்புகின்றேன். அதாவது நீவிர் போந்து நின்றருட்தோற்றத்தை இந்த இடத்திலேயே எப்பொழுதும் தெரிசிக்கும் பாக்கியமுடைய வேண்டுமென்பதாகச் சித்தர்களும் இராஜரிஷிகளும் இச்சித்துக்கொண்டிருக்கிறார்கள் கேவல ஞானசக்தியையுடைய மனிதர்க்கு உன தெரிசனை கிடைப்பது மிகவும் அரிதாகும் ஆகையால் சகலரும் உன்னுடைய அலங்காரவடிவத்தை எப்பொழுதும் தெரிசிக்கும் பாக்கியத்தை யடையும்படியாக இந்த விருஷபாத்திரியிலேயே நீ ஸ்ரீதேவி பூதேவிசகிதமாய சமஸ்த சேனாதிபதிகளுடன் என்னுடைய பூசையைக் கிரஹித்துக்கொண்டு வாசஞ்செய்து பிரசன்னராக இருக்க வேண்டும். எனக்கு வரந்தரவேண்டியதொன்றிருப்பினும் இந்த ஒரு வரத்தைமட்டும் அருளவேண்டுமென்று பிரார்த்தித்தான்,

அந்த வார்த்தைகளை அடியார்க்கெளியனாகிய பகவானும் பேரானந்தங்கொண்டு மிக்க அன்போடு மலயத்துவஜனை நோக்கி என்னன்பனே! நீ சொன்னபடியே இந்தப் பர்வதத்தில் நித்தியம் வசித்துக்கொண்டிருக்கின்றேன். இனிமேலும் வசித்துக்கொண்டிருப்பேன் முன் ஒருகாலத்தில் தர்மதேவன் என்னைக்குறித்துத் தவஞ்செய்யும்போது அத்தவத்திற்கிரங்கி நான் பிரத்தியக்ஷமானவுடன் அவன் என்னை நோக்கி ஹே பகவானே! நீர் ஸ்ரீதேவி பூதேவியோடு கூடினவராயும், சகல பரிவார தேவதைகளோடும் இந்த விருஷபாத்திரியில் எழுந்தருளவேண்டும். அப்படி யெழுந்தருளிய உம்மை மகா பக்திமான்களாயும் மிகப்புராதனராயுமிருக்கிற முனிவர்களும், மார்க்கண்டேயாதிரிஷிகளும், மற்ற இராஜரிஷிகளும், தர்மிஷ்டர்களான வைஷ்ணவர்களும், சூத்திரர்களும் தெரிசிக்கவேண்டும். நீர் அவர்களுக்கு இஷ்டமாகிய வரங்களைக்கொடுத்தாதரிக்க வேண்டும், அவர்களால் எப்பொழுதுஞ் செய்கின்ற பூஜையை ஏற்றுக்கொள்ள வேண்டும்,

இதுதான் எனக்குத் தரவேண்டிய வரமென்று கேட்டுக் கொண்டகாலத்தில் நான் அவனுக்கு வேண்டிய வரங்களைக்கொடுத்ததோடு அவனிடத்தில் பிறப்பட்டகாலத்தில் இராஜசிரேஷ்டனும், மலயத்துவஜனென்னும் பெயர் படைத்தவனும், சந்திரவம்சத்துக்கு அலங்காரபூதனும், என்னுடைய பாதாரவிந்தத்தில் மிகுந்த பக்தியுள்ளவனும், சூரனும், சுத்தனும், சாதுரியனும், சதாசாரஹிதனும், என்னிடத்தில் சமஸ்தமான அங்கங்களையும் என்னுடைய பிரயோசனார்த்தமாக உபயோகப்படுத்தினவனும், சர்வேந்திரியங்களையும் அடக்கினவனுமாய், அப்படிப்பட்டவன் இங்கு வந்து நம்மைத் தெரிசிப்பான் அப்போது அவனிடத்தில் தவத்தின் பொருட்டாய் நாம் மிக்க அன்புற்று நீ வேண்டிய வரங்களைக் கொடுப்போம், அப்போது நீ கேட்ட இந்தக் காரியங்களையும் அவன் கேட்பான், அவன்பொருட்டாக நாம் அனுக்கிரகஞ்செய்வோமென்று, உன்னுடைய விஷயங்களையும்; நீ கேட்கின்றதும் நமக்கு இசைந்திருப்பதுமாகிய இந்த வரங்களைப்பற்றியும், முன்னமே யாம் சொல்லியபடி இவ்விடத்திலேயே இரகசியமாய் வசித்துக் கொண்டிருந்தோம், இப்பொழுது நாம் அந்தத் தருமதேவனுடைய பிரசோபித்திருக்கக் காரியமானது வந்துவிட்டபடியால் நீ இங்குவந்து தவஞ்செய்யவும் நம்மைத் தெரிசனஞ்செய்யவும் நேர்ந்தது, ஆதலால் பலவித நன்மைகளோடு நீ விரும்பியபடியே எல்லாவரங்களையுங் கொடுத்தோம், நீ எப்பொழுதும் என்னைத் தெரிசித்துக்கொண்டிரு, நானாபிரகாரங்களையுடைய மகா பெரிதாகிய கற்பகவிருக்ஷமரத்தினுடைய சுத்தமான நிழற் பிரதேசத்தில், அதாவது, இந்தச் சைலத்தடத்தில் எனக்கு வசிக்கும்படியான பிரதேசம் ஏற்பட்டிருக்கின்றது. அந்த இடத்தில் தேவசிருஷ்டமாயும் விஸ்வகர்மாவினாலே நிர்மிக்கப்பட்டதாயிருக்கின்ற விமானத்தில் இந்திரன் முதலான தேவர்களும், முனீஸ்வரரும், காலந்தோறும் சேவிக்கும்படியாக உன்னுடைய சந்தோஷநிமித்தமாய் எப்பொழுதும் வசித்துக்கொண்டிருப்போம், உன்மனோபீஷ்டப்படியே எவ்வகைக்கும் தெரிசனந்தருவோம், ஆகலால் நீ அஸ்வயுஜிமாசத்தில் எமக்கு பிரமோற்சவத்தைச்செய்யவேண்டும், இதன்பொருட்டாகத் தேவர்களெல்லோரும் இடைவிடாது நம்மைவேண்டிக் கொண்டிருக்கின்றார்கள், ஆகலால் இதை நிறைவேற்றுவதோடு இன்னும் நமக்காகவேண்டிய சகலகாரியங்களையும் நீயே நடத்திக்கொண்டு வரவேண்டும், நமது ஆலயத்தை மிகவும் விஸ்தீரணமானதாகவும், சகலமண்டபங்களோடு கூடினதாகவும், மிகவுன்னதமானதாகவும், ஆகா

யத்தை அளாவிய கோபுரத்தோடு கூடினதாகவும் செய்யவேண்டும், இன்னும் நம்மால் செய்யவேண்டிய [illegible] உத்ஸவாதி சகல சிறப்புகளையும் உனதுடைய [illegible] செய்யவேண்டும். இதற்கு [illegible] கிரகமூர்த்தியை [illegible], சாத்தினங்களாலும் அமைந்த [illegible] உத்ஸவங்களை நிறைவேற்றுவோம். [illegible] ய்து நிறைவேற்றி [illegible] இந்தப்பர்வதத்திலேயே [illegible] கொண்டிரு, என்று [illegible], [illegible]யும், புண்ணியத்தைத் [illegible] ஸ்நானம் பண்ணி [illegible] மகா [illegible] த்தில் ஸ்நானம் செய்தால் [illegible] அதிக பலன் கிட்டும். இதில் பித்ருக்களைத் [illegible] ஸ்நானம் பண்ணுகிறார்களோ அவர்கள் பூமியில் [illegible] யடைந்து மிகுந்த சந்தோஷத்தோடு வாழ்வார்கள்.

பௌர்ணமாசத்திலும், சந்திர சூரியகிரஹண காலத்திலும், புண்ணிய நக்ஷத்திரங்களிலும், இந்த ஸ்நானஞ் செய்பவர்கள் அப்படி செய்தவர்கள் இந்திர பதவியையடைந்து [illegible] யடைவார்கள். இந்த நதியில் ஸ்நானம், ஜபம், [illegible], ஹோமம், தானமுதலியவைகளைச் செய்பவர்களுக்கு [illegible] செல்வங்களைக்கொடுக்க [illegible] கடமைப்பட்டிருக்கின்றேன். நாம் இந்த விருஷபர்வதத்தில் [illegible] யிருப்போம். கருணைத் திருக்கோலத்தோடு [illegible] வந்து தெரிசித்தால் [illegible] ம்புத்திரபாக்கியத்தையடைவார்கள். [illegible] பத்தையுடையவராவார். பாவத்தையுடைய [illegible] வர்கள் நிஷ்காம முத்தியை வேண்டுபவர்கள் [illegible] கிருஷ்டமான கெதியை யடைவார்கள். [illegible] களையும் நிறைவேற்றி [illegible].

இந்தவார்த்தைகளை மலையத்துவஜன் கேட்டுத் தேகபூரிப்புடன் பகவானைப்பார்த்து எனக்குப்பேரருள்புரிந்த பேரிறையே! உன்னுடைய கிருபாகடாக்ஷத்தினாலே நானெல்லா நன்மைகளையும்பெற்றேன் [illegible] கிருதார்த்தரானார்கள். இனிமேல இவ்வுலகத்தி

[illegible] தெரிசித்தும் பாக்கியம் [illegible] யுடையதாக [illegible] தகுந்தோனாது [illegible] புண்ணிய [illegible] நடக்கின்ற [illegible] முடிக்கின் [illegible] பிரயத்தி [illegible].

[illegible] அருளி [illegible] அப்படியே செய்யக்கடவா [illegible] அவ்வண்ணமே ஏகாக ராசிஷ்டம் [illegible] மூல ராகஇனி [illegible] யுடையவரப பிரசாதங்களைப் பெற்று [illegible] இதனை [illegible] னுடைய [illegible] வருமை மைமேலிருந்து [illegible] அநேகம்பேர்களாகவரா நின்றகாலத்தில் பலபோகபாக்கியங்களை அனுபவித்து அவ்வண்ணமே முக்தி யிலும் உத்கிருஷ்டமான பாவங்களைச் செய்து சாஸ்திரதருமங்களையுடைய ராக முடிவில் மேலுப்பட்ட யடையப்போகின்றார்கள். நீயும் வெகு சீக்கிரமாயவே மேலுலகத்தை யடையப்போகின்றாய் ஆதலால் நாம உரைத்தபடியே பக்தர் நடத்தவேண்டியவைகளை நடத்திவிட்டுப்பி னையுனது நாமதுருக்கமென்று உனது குமாரனுக்கு பிதுர்தமனக்களிப போடு பட்டாபிஷேகம் [illegible] செய்து மந்திரிமாரோடும், தபசிரேஷ்டரோடும், [illegible] அநேகருமாசனு செய்து இராசகாரி யங்கள் சரியாக நடக்கும்படி ஸ்தாபித்துவிட்டு அதன்மேல் எல்லாரிடத் திலும் [illegible] விடைபெற்று [illegible] விருஷபாத்தி ரிக்குப் போய் இந்த நூபுரகங்கையின் பக்கத்தில் சுகமாகிய ஓர் சிலாத லத்திருந்து வனப்பலாசனமாகிய காட்டில் உள்ள கந்தமூலாதிபலங்களைப் புசித்து நம்மைக்காலந்தோறும் உபாசனைபண்ணி வானப்பிரஸ்தாச சிரமத்திலிருந்து ஆசைநாசமாகி நிர்மலனாய் நம்மிடத்தில் அபார சக்தியினாலும் ஞானத்தினாலும் சித்தத்தைவைத்து மனசினாலே தன் னுருபத்தைத் தரித்துக்கொண்டு மிக்க தவமியற்றி நம்முடைய வரப்பி

ரசாதத்தினாலேமுடிவில் நம்முடைய வுலகத்திற்கு வந்துவிடக்கடவா யென்று திருவாய்மலர்ந்தருளி அந்தரத்தை யடைந்துவிட்டார்.

அதன்மேல் மலயத்துவஜன் பெருத்தஉவகையோடு சக்கரபாணியாகிய ஸ்ரீஹரிக்கு பன்முறைநமஸ்காரம்பண்ணி அவராக்ஞாபித்தவண்ணமே அவ்விடத்திருந்து பல வைதீகர்களைக்கொண்டு பகவானெழுந்தருளியிருக்கும் ஆலயத்தை மிகவிஸ்தீரணமாக்கி சகல லக்ஷணங்களும் அமையும்படியாகக் கட்டிமுடித்து எம்பெருமானுக்குச் சகலவுற்சவங்களையும் முறைப்படியேசெய்துவிட்டு தன்னகர்க்குச்சென்று மைந்தனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்து பழையபடியும் விருஷபாத்திரிக்குச்சென்று அங்குதவஞ்செய்து முடிவில் பகவானது திருவடிநீழலடைந்தான். அவன்செய்தகிரியைப்படியே சகலவுற்சவாதிகளும் இன்றும்நடந்தேறிவருகின்றன. அம்மலயத்துவசனால் கட்டிமுடித்தஆலயமானது எக்காலத்தும் அழியாததாய் விளங்கிக்கொண்டிருக்கின்றது. எம்பெருமானும் மெய்யன்பர்க்கு ப்ரஸன்னராய் இன்றும்விளங்குகின்றனர்.

ஆதலால் ஹே முனிபுங்கவ! இத்தலத்தைப் பகவானைத்தெரிசிப்பவரடையும்பலனுக்களவின்று. இந்தப்புராணவிஷயங்களை எவனேனும் ஒருவன் கேட்டாலும், கேட்கும்படி செய்தாலும், சொன்னாலும், சொல்லும்படி செய்தாலும், அவன்சகல பாவங்களினின்றும் விடுபட்டவனாய் முத்திதலத்திற்கு உரியவனாவான். இதையக்ஞங்களிலும், பிரம்சத்திரங்களிலும், இரண்டுசந்தியாகாலங்களிலும், விஷ்ணுவினது பக்த சனங்களுடைய சன்னிதானத்திலும் படிக்கவேண்டும். இதனைவிஷ்ணு பக்தர்களைக்கொண்டு சர்வகாலத்திலும் சந்திர சூரிய கிரஹணகாலங்களிலும் பிரசங்கிக்கும்படி செய்யவேண்டும். இப்படிச்செய்வதால் எவ்வகைப்பாபங்களும் நீங்கி சகலபுண்ணியங்களும் கைகூடும் முனிபுங்கவரே! இந்த அத்தியாயத்தின்பெருமையை யிவ்வளவென அளவிட்டுச்சொல்லவென்னால்முடியாதென்று அகஸ்தியர் நாரதருக்குச்சொல்லிமுடித்தார். ஹே மகரிஷிகளே! நானதன்படியே யுங்களுக்குவழுத்தினேனென்று சூதபுராணிகர் சொல்லிமுடித்தார்.

விருஷபாத்திரி மஹாத்மியத்தில்

பத்தாவது அத்தியாயம்

முற்றிற்று.

பதினோராவது அத்தியாயம்.

மேற்கண்டபடி விருஷபாத்திரியில் மலையத்துவஜனால் நடந்த சிறப்புக்களையும் ஸ்ரீ சுந்தரராஜப் பெருமாளுடைய திருவிளையாடல்களையும் சௌனகாதிரிஷிகள் கேட்டவுடன் மிகவும் பேரானந்தமடைந்து மீண்டும் புராணங்களிற் சமர்த்தராயும், தத்துவங்களை யறிந்தவராயும், வியாஸசிஷ்யராயும், மிகவும் உதார குணத்தோடு கூடியவராயும், சர்வாத்மாக்களிடத்திலும் நேயமுடையவராயிருக்கப்பட்ட சூதமகாமுனிவரை நோக்கி பகவத் பக்தியோடு நமஸ்காரம்பண்ணி ஹே மஹாமுனி சிரேஷ்டரே! தங்கள் சமுகத்தினின்றும் விருஷபாத்திரியினுடைய எல்லா வைபவங்களையும், விசேஷமாகக் கேட்டுப் பெருமகிழ்ச்சியடைந்தோம். ஆயினும் இன்னும் அந்த இடத்திலேயே எப்பொழுதும் வாசஞ்செய்துகொண்டிருப்பவராகிய சுந்தரராஜமூர்த்தியினுடைய நூபுரகெங்கையினது விருத்தாந்தத்தையுங் கேட்க விரும்புகின்றோம். எங்களுக்கு அதைக் கேட்பதினால் அளவற்ற குதூஹலமேற்படுமென்று தோற்றுகிறது. ஸ்ரீ வாசுதேவரைச் சம்பந்தித்த பல சரித்திரங்களை அடிக்கடி கேட்டிருப்பினும் இது எவ்வளவு கேட்டாலும் ஆனந்தத்தையே விளைத்துக்கொண்டிருக்கக்கூடியதாகையால் அவருடைய புண்ணியசரித்திரங்களில் ஒன்றாகிய இதையும் கேட்கவேண்டுமென்னும் அளவற்ற அவா எங்களுக்குண்டாயிருக்கிறது. மேலும் உம்முடைய வார்த்தைகளாகிற அமிர்தசாரமானது செவிவழியாக உண்ணப்பட்டவர்களுடைய மனதை இழுத்து அதனிடத்திலேயே இருக்கச்செய்கிறதாய் விளங்குகின்றது. பவசாகரத்தில் மூழ்கிச் சுழலுகின்ற ஒருவனுக்கு உமது மங்களகரமான வார்த்தையாகிய தெப்பமானது கிடைக்கும்பக்ஷத்தில் உடனே அவன் அந்த பவசாகரத்தினின்று கரையேறி முத்தித் தலத்தையடைந்து மகிழ்வான், உம்முடைய அமிர்தம்போன்ற வார்த்தைகளாகிற பிரவாகமானது பலபுராணங்களாகிற பலகிளைநதிகளாகி ஆயிரத்திற்குமேற்பட்டவைகளாகப் பிரிந்துசென்று இடையறாது ஜனங்களுடைய பாபமாகிய தாபங்களைப்போக்கி சம்சாரமாகிய அக்கினியினால் தகிக்கப்பட்ட ஜீவர்களுக்கு ஞானமாகிற குளிர்ச்சியைக்கொடுத்து வளர்த்துவருகின்றது.

ஆதலால்பகவத் பிராப்தியை இச்சித்தவர்களாகிய எங்களுக்கு மேற்கண்டவாறு சிறப்பையடைந்த உம்முடைய அந்தத் திருவாக்கினாலேயே அந்த நூபுரகெங்கையானது மஞ்சீரத்தினின்றும் எவ்வாறு, உண்டாயிற்றென்பதையும், சமஸ்தகல்யாணங்களையும் உண்டுப

ண்ணுகிறதாயும், ஜனங்களுக்கு உபகாரத்தைச்செய்கிறதாயும் இருக்கின்ற அந்தகெங்கையானது எவருக்கு முத்தியைக்கொடுத்திருக்கின்றதென்பதையும், எவருக்குப்பிரத்தியக்ஷமான தென்பதையும் எவன் இதில்ஸ்நானஞ்செய்து மோக்ஷத்தை அடைந்திருக்கின்றானென்பதையும், இன்னும் அது சம்மந்தமான சகலவிஷயங்களையும் சவிஸ்தாரமாகச் சொல்லவேண்டுமென்று கேட்கச்சூதபுராணிகர் மிகவுஞ்சந்தோஷித்து பகவானுடைய திருப்பாதாம் புஜத்திற்கு நமஸ்காரமபண்ணிச் சொல்லத்தொடங்கினார்.

ஹே மகரிஷிகளே! நீங்கள் நூபுரகெங்கையினது விருத்தாந்தத்தை விரும்பிக்கேட்டபடியால் உங்களமனோபீஷ்டப்படியே சொல்கின்றேன்கேளுங்கள், அசுரகுலத்திலே உற்பவித்த பிரகலாதனுக்குப்பிள்ளையும், விரோசனன் என்னும்பெயருடையவனுமான ஓர் அசுரனுக்குப்பூர்வததில் பலிச்சக்கரவர்த்தியென்று ஓர்புத்திரன் தோன்றியிருந்தான், அவன்மகாபலிஷ்டனும், மிகுந்த கொடையாளியாயும், சத்தியவிரதனும், ஜனங்களுக்குள்ளே விசேஷகாந்திமானும், இருந்துமுடிவில் பிரமனைநோக்கி பெருந்தவஞ்செய்து ஒப்பில்லாதவரங்களைபெற்றுக்கொண்டான், அந்தவரமகிமையாலும், தானவிசேஷத்தாலும், எல்லாத்தேவர்களும் தனக்குக்கீழாகும்படிசெய்து யுத்தசாமர்த்தியத்தால் சகலதேவர்களையுஞ்செயித்து மூவுலகத்தையும்தானே அரசாண்டுவந்தான் அவனுடையயுத்தத்திற்காற்றாது இந்திராதிசமஸ்ததேவர்களும், திக்குப்பாலர்களும், புறமுதுகிட்டோடி மேருமலைச்சார்பிற்போய்ச்சார்ந்து பலிச்சக்கரவர்த்திக்குப் பயந்து பகலில் வெளிவராமல பலயுகங்கள்மட்டும் குகைகளிலேயே வாசம்பண்ணிக்கொண்டிருந்தார்கள், இப்படியேயிருந்து துன்பஞ்சகிக்காமாய்முடிவில எல்லாத் தேவர்களும் ஒன்றுசேர்ந்து ஓர்காலத்தில் பிர்மாவினிடஞ் சென்று அவரைச்சந்தி நமஸ்கரித்து சகலவுலகங்களையும் படைத்த கருணையிலே! நாங்கள் சத்துருக்களால் மிகவும்பீடிக்கப்பட்டவர்களாய் விட்டோம். நீரே சர்வப்பிராணிகளுக்குங் கர்த்தராயும், பாலனம்பண்ணுகிறவராயுமிருக்கிறீர். அப்படியிருக்கச் சிலரை உயர்த்திச்சிலரைத் தாழ்த்துவது நியாயமாகுமா. தற்போது பலிச்சக்கரவர்த்தியால் நாங்கள் அடையுந் துன்பத்திற்கு அளவேயில்லை. எங்கள் ஸ்தானங்களை விட்டுப் பலயுகங்களாய்க் குகைகளில் வாசம்பண்ணிக்கொண்டு வருகின்றோம். அவன் உம்முடைய வரத்தினாலே மதோன்மத்தனாய் எங்கும் தடையில்லாது சஞ்சரித்து சகலரையும் போரில் வென்று புறங்

கண்டு எல்லாருடைய சம்பத்துக்களையும் எளிதிற் கைக்கொண்டு அவ
னே அனுபவித்து வருகின்றான். அதாவது தேவர்களுடையவும்,
கொந்தர்வருடையவும், மனிதர்களுடையவுமாகிய சகலசம்பத்துக்களை
[illegible] நாயர் அக்காரணத்தால் மிக்க
[illegible] ஆதலால் நாங்கள் எங்
[illegible] ஸ்தானங்களிலிரு
[illegible] கிருபைபுரி
[illegible] வேண்டிக்கொண்டார்கள்.

[illegible] சிங்காசனத்தில் [illegible] ளுடைய
[illegible] ஸ்ரீமந்
நாராயணரால் [illegible] இந்தநீங்கள் எல்
லாருடைய [illegible]
தேவர்களுக்கு [illegible] அநிமகவலி
தாயும், ஜகத்திலுள்ள [illegible]
ராயும், சிரேஷ்டராயும் [illegible] ஸ்தோத்திர
ம் பண்ணினார், ஸ்ரீ பகவானும் [illegible] பக்தாளிடத்
திற் பிரியமுள்ளவரும் ஆனபடியால் பிரமதேவர்ஸ்தோத்திரஞ்செய்
த அந்தச்சமயத்திலேயே சகலதேவரும் பேரானந்தமடையும் படிப்பி
ரத்தியக்ஷமாகிவிட்டார்.

அப்படி பிரத்தியக்ஷமாகி ஜநங்களுடைய துக்கத்தைப் போக்கடிக்கிறவருமாகிய தேவதேவனை பிரமதேவர் பலதடவை நமஸ்கரித்து அந்தவாசுதேவனைப் பார்த்து ஹே பிரபோ! பலிசக்கரவர்த்தியினால் இந்திராதிதேவர்கள் தானப்பிரஷ்டர்களாகித் தமது செல்வங்களையெல்லாமிழந்து மிகவும் வறுமையுடன் துக்கத்தையடைந்து வருந்துகின்றார்கள், அவர்கள்மீண்டும் தங்களுடைய செல்வங்களைப் பெற்றுச்சுகமடையும்படி கிருபைபுரியவேண்டுமென்று மிகவுமிரந்துகேட்டுக்கொள்வதால் அவர்களுடைய மனோபீஷ்டத்தை நிறைவேற்றுதற்குத்தமையையன்றி வேறொருவரால் முடியாதாகையால் அதன்படியே அவர்களுக்குக் கிருபைபுரியவேண்டுமென்று பிரார்த்தனைசெய்தார்,

அவ்வாறு பிரமதேவர் சொன்னதை ஸ்ரீ பகவான்கேட்டு அவரைப்பார்த்து சிருஷ்டிகர்த்தனே! நான் முன்னமேயே உன்மனதிலிருப்பதைத்தெரிந்து தேவர்களுக்குக்கிருபைபுரியுமாறு விரும்பியிருக்கின்றேன், ஆதலால்இன்னும் கொஞ்சக்காலத்தில் நான் காசிபபிர

ஜாபதிக்குத் திதியினுடைய கற்பத்தில் இந்திரனுக்குத் தம்பியாகப்பிறந்து பிர்மசாரியாகவும், பரிசுத்தனாகவும் இருந்துகொண்டு அந்தப்பலிச்சக்கரவர்த்தியினுடைய சம்பத்தையெல்லாம் வியாசகத்தினாலே வியாபித்து அவனிடமிருந்து கைப்பற்றிக்கொண்டு [illegible] இந்திரன்முதலாகிய தேவர்களுக்கு [illegible] கொடுப்பேன், என்றுசொல்லி பிரமதேவனுடைய [illegible] டுத்தியனுப்பிவிட்டு ஸ்ரீமந்நாராயணர் [illegible] போனார்.

பின்கொஞ்சகாலத்திற்குப்பின் [illegible] ஸ்ரீமந்நாராயணர் [illegible] சையினாலேகாசியப்பருடைய மனைவியாகிய அதிதியினுடைய கெற்பத்தில பலருபியர்கள் [illegible] பிறந்தார், அவ்வாறு [illegible] பெருமைபொருந்திய [illegible] உபேந்திரனென்னும் பெயர் [illegible] மனசினாலேயாம உத்தேசித்த [illegible] கொண்டு தவம்பற்றி [illegible] ம்பூமியில் வாசஞ்செய்துகொண்டிருந்தார்.

இப்படியிருந்து வருங்போது [illegible] உபேந்திரனானவர் [illegible] வந்ததெனக்கருதி [illegible] அவனைக்கண்டுமகிழ்ந்து [illegible] மகாபிரசித்திபெற்றவனென்று கேள்விப்பட்டேன் [illegible] எனக்கு உன்னுடைய [illegible] மூன்றடி அளவுபூமியைத் [illegible] கொடுப்பாயானால் உன்னுடைய கீர்த்தியானது [illegible] என்று பலவாறு அவனை ஸ்தோத்திரஞ்செய்துகேட்டார், அவ்வாறுகேட்கும்போது பலவான்களுக்குள்ளே மிகுந்தசிரேஷ்டனான பலிச்சக்கரவர்த்தி மிகவுமகிழ்ச்சிகொண்டு அவரைப்பார்த்து சுவாமிகளே! இந்த அற்பக்காரியத்தைத் தானா என்னிடம்கேட்கவேண்டும் தங்களைப்போன்ற தவசிரேஷ்டர்களுக்கு இந்தவுலகத்தையும் வேண்டுமானாலும் கொடுக்கச்சித்தமாயிருக்கிறேன், ஆதலால் நீர்கேட்டபடியே மூன்றடிபூமியை இதோகொடுக்கிறேன் பிடியுமென்று தாரைநீரையெடுத்து அந்த உபேந்திரராகிய வாமனபிர்மசாரியின் கையில்வார்த்துப் பூமியைத்தானம் பண்ணினான், உடனே அந்த [illegible]வாலும் பலிச்சக்கரவர்த்தியினுடைய பூதானஜலத்தை கையிற்கிர

ஹித்தார், அவ்வாறுகிரஹித்தானபிற்பாடு வாமனரூபமாயிருந்த அந்தபகவான் அண்டத்தையெல்லாம் ஒரேஅடியில் அடக்கத்தக்கஆச்சரியமாகிய பெருத்ததேகத்தை யுடையவராகத்தோன்றி அந்தப்பலிச்சக்ரவர்த்தியானவன் மிகவும்நடுக்கங் கொள்ளும்படியாக அவனால் அளப்பட்ட மூவுலகங்களையும் தமக்கு அவன் தானஞ்செய்தபடியே மூன்றடியளந்து எடுத்துக்கொள்வார்போன்று இரண்டேயடியளந்துவிட்டார், பின்பு அந்தப் பலிச்சக்ரவர்த்தியைப்பார்த்து ஹேதர்மாத்துமாவே நீ தர்மிஷ்டர்களுக்குள்ளே மிகவுஞ்சிரேஷ்டம்பொருந்தியவன் அப்பேர்ப்பட்ட உன்னால்உன்னுடைய ஆக்ஞையில் எனக்குமூன்றடிமண்கொடுக்கப்பட்டது, அதன்படியே, நான் அளக்கத்துணிந்து இரண்டடிமட்டும் அளந்துகொண்டேன், இன்னும் ஒருஅடி அளப்பதற்கு இடத்தைக்காண்கிலேன், ஆதலால் நீசொன்னவாக்குத்தவறுமல் குறைவுபடுகிற ஒருஅடி அளவையுங்கொடுத்துவிடவேண்டும், இல்லாவிடில் சத்தியந்தவறினவனாகின்றாய், ஆனபடியால் இன்னும் ஒரு அடிக்கு என்னசொல்லுகின்றாயென்றார்.

இந்தச்சம்பவத்தைக் கண்டவுடன் பலிச்சக்கரவர்த்தியானவன் மிகவும்பிர்மித்து சொன்னவாக்கியத்தைத்தவறி நடக்கமுடியாமலும் வேறுமார்க்கம் ஒன்றுந்தோற்றாமலும் பகவானைப்பார்த்து சுவாமி! இனிமேல்தங்களுடைய ஒரு அடி அளவுக்குப்போதுமான இடம் என்னிடத்தில் ஒன்றும் இருப்பதாகத்தெரியவில்லை, என்னைத்தவிர இங்குவேறொன்றுமில்லை இதோ என்சிரமிருக்கின்றது, இதிற்றான் அந்த ஒரு அடியையும் அளந்து கொள்ளவேண்டுமென்று மிகவும் பக்தியோடு சிரசைக்காட்டினான், அதைக்கண்டுவிபுவான ஸ்ரீமந்நாராயணர் மிக்க சந்தோஷத்தோடு புன்சிரிப்புக்கொண்டு அவன்சொன்னபடியே தம்முடைய ஒருஅடியைச் சிரமீதுவைத்து அளப்பார்போன்று அவனை அப்படியே பாதாளத்தில் அழுத்திவிட்டார் அந்தப்படி பலிச்சக்கரவர்த்தியை அழுத்தியகாலத்தில் பிர்மாவினாலே பிர்மலோகமட்டும் வளர்ந்திருந்த ஸ்ரீபகவானுடையபாதம் பூஜையின்பொருட்டாக பரிசுத்தஜலத்தால் சுத்திசெய்யப்பட்டது. அப்படிசுத்திசெய்வதற்காக விட்டஜலமானது பூமியில்விழுந்து சித்தர் கெந்தருவர்களாலே கொண்டாடப்பெற்ற கெங்கையாகிப்பிரகாசித்தது. அந்தக்கெங்கையானது இன்னும் ஆகாயத்தில் அம்ஸபதம்போலபிரகாசித்துக் கொண்டு அதன்தொடர்ச்சி பூமியிலும் வழிந்தோடி வருகின்றது.

மேற்சொன்னபடி பிர்மாவினால் கழுவப்பட்டபோது பகவானுடைய பாதச்சிலம்புகளிற்றங்கிய மீதி ஜலமானது அவர்சுவர்க்கமத்தியபாதாளமென்னும் மூன்றிடங்களிலும் அடிவைத்தளக்கும்போது அங்கங்கே ஒவ்வொரு அருவிகளாக உண்டாகிமூன்றருவிகளாக ஓடி

ன, அதில்பாதாளத்தை மகாபலியின் சிரசில்வைத்தளக்கப் புகுங்கா லத்திலுண்டான அருவியானது இந்தவிருஷபாத்திரியின் உச்சியில்வி ழுந்து கீழிறங்கிப்போயது அதுதான் இங்கேஓடுகிற நூபுரகெங்கை இந்தநூபுரகெங்கையின் பெருமை ஒருவிதத்தாலும் அளவிட்டுச் சொல்ல முடியாது, இந்தப்புண்ணிய தீர்த்தமானது, இன்னும்பல அருமைவாய்ந்த அருவிகளோடு கலக்கப்பட்டு மிகவும் பரிசுத்த சுந்த ரமான ஜலத்தோடு கூடியிவைஞ் சிரேஷ்டமான வயிரக்கற்களுக்கொ ப்பாகிய பிரகாசத்தோடு சிலஇடங்களில் அழகிய நீலோற்பல புஷ்ப த்திற்குச் சமானமாகிய காந்தியையுடையதாகியும், சிலவிடங்களில் வைடூரியகற்களின் காந்தியையுடையதாகியும், சிலவிடங்களில்முக்தா பலமுள்ளதாகியும் சில விடங்களில்முத்துக்களைப்போன்ற பிரகாசமு ள்ளதாகியும், அழகுள்ளதாயும், நிர்மலமானதாயும், மாதுர்யகுண முள்ளதாயும், சித்தர், சாரணர், கெந்தருவர் இவர்களாலே சேவிக் கப்பட்டதாயும் விளங்கிக்கொண்டிருக்கின்றது, இன்னும் இந்தநூ புரகங்கையாகிய தேவதீர்த்தமானது இப்பூமியில் எப்பொழுதும் உத்தியானவனங்களிலிருக்கின்ற மரங்களின்வேர்களை நனைப்பதினா ல் அவைகளை வளர்க்குந்தாயைப்போன்று விருத்திபண்ணுகிறதா யும், செண்பகம், அசோகம் புன்னாகம், மருதாணிமுதலிய திவ்ய மணமலர்களைப் புஷ்பிக்கின்ற பல தருக்களையுடைய அநேகசுந்த ரமாகிய வனங்களை இருகரைமருங்கிலும் உடையதாயும், யூதிகை புஷ்பம், ஜாதிபுஷ்பம், மல்லிகைபுஷ்பம் கருநெய்தல்புஷ்பம் ஆகிய பலஅளவிறந்தமலர்களின் வாசனையைப்பெற்றதாயும், வனசைலங்களி ல் மிகவும்பிரியத்தோடு வசிப்பவராகிய அந்தச்சுந்தரராஜருடைய நேத்திரம் போன்றதாயும், சமுத்திரராஜனுடைய கன்னியாயும், பக் தியோடு வாசுதேவருடையபாதத்தை ஆஸ்ரயித்துக்கொண்டிருப்ப தால் புருஷனோடு கூடியபெண்போன்றதாயும், மூவுலகங்களையும் இர ண்டடியாலளந்த பாதாம்புஜங்களையுடைய ஸ்ரீசுந்தரராஜப்பெருமான து நிர்மாலியங்களாகிய தாமரைப்புஷ்பங்களையுடையதாயும், சகலமு னிவர்களாலும், இஷ்டசித்தியையடையும்பொருட்டாகச் சேவிக்கப் பட்டதாயும், தேவசுரமனுஷியர்களுக்கு ஸ்நானஞ்செய்த மாத்திரத் தில் இஷ்டசித்தியைக்கொடுக்கக்கூடியதாயும் நிலைபெற்றுப் பிரகாசி க்கின்றது.

மேலும் இதில் ஸ்நானஞ்செய்து மரீசிமஹரிஷியைச்சேர்ந்த முக்கிய முனிவர்களும், நிர்மலமுடையவராய் விஷ்ணுசாயுச்சியத்தை யடைந்திருக்கின்றார்கள். இன்னும் தர்மதேவன் சாயுச்சியத்தையும்

பிரமதேவர் விஷ்ணுவினது சமீபத்தையும், சுதபஸ் என்பவர் சாரூப த்தையும், இந்த ஸ்நான விசேஷத்தால் அடைந்திருக்கின்றார்கள். இந்த விருஷபாத்திரியில் வசித்துக்கொண்டிருக்கிற சுந்தரராஜனைத் தெரிசிப்பதினாலே இந்த நூபுரகெங்கையில் ஸ்நானஞ் செய்வதினாலும் அடையும் பலனுக் களவேகிடையாது என்றுரைத் தருளினார்.

இதைக்கேட்ட முனிவர்களெல்லோரும் விம்மிதத்தராகி அந்தச் சூதரைப்பார்த்து முனிசிரேஷ்டரே நூபுரகெங்கையினது சரித்திரத் தைக் கேட்கக்கேட்க மிகுந்த ஆனந்தமே விளைந்துகொண்டிருக்கின்றது ஆதலால் இன்னும் அந்த ஸ்நானபலனால் எவரெவர் உன்னதபதவி பெற்றார்களென்னும் விபரத்தையும் உரைத்தருள வேண்டுமென்று கேட்க, அவர்களைப்பார்த்து சூதமகாமுனி சொல்லத்தொடங்கினார்

ஹே முனிபுங்கவரே! நீங்கள் விரும்பிய அந்தச் சரித்திரத்தை யுஞ் சொல்லுகிறேன், கேளுங்கள். பூர்வத்தில் பரத்துவாசகுலத் தில் உற்பவித்த சுதபஸ் என்பவர் மோக்ஷ இச்சையுடையவராகி வி ருஷபாத்திரி பர்வதத்திற்கு வந்து நூபுரகெங்கையில் ஸ்நானஞ்செய்து வெகுகாலம்வரை தபசைச்செய்துகொண்டுவந்தார். இப்படிச் செய் துகொண்டு வருங்காலத்தில் ஓம் நமோ நாராயண மந்திரங்களை ஜெபித் துக்கொண்டு இந்த கெங்கையில் முழுகிக்கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் தூருவாசபிரமுகாளான முனீஸ்பரரும் இன்னும் பல முனிவர்களும் இந்த சுதபஸ் என்பவரைப் பார்க்கும்பொருட்டாகவும் ஸ்நானத்தின் பொருட்டாகவும் வந்து நதிக்கரையிலிருந்து இவர் வர வுக்கெதிர்பார்த்திருந்தார்கள். அவர்கள் நெடுநேரம்வரை காத்திருந்து ம் சுதபஸ் மோக்ஷகாரியாய் வந்தவர்களைக் கருதாது நூபுரகெங்கை யில் முழுகிக்கொண்டேயிருந்தார்.

அப்போது கரையிற் காத்திருந்த தூருவாசப்பிரமுகாளான எல் லா முனிவரும் மிக்க கோபத்தை யடைந்து அவரைப்பார்த்து ஹே சுதபஸ்ஸே! உம்மைப்பார்க்கவும் நூபுரகெங்கையில் முழுகவும் வந்து காத்திருந்த எங்களைக் கொஞ்சமும் மதியாமல் நீர் உம்முடைய வேலை யிலேயே மிகவும் விருப்பத்தோடு ஜலத்தில் முழுகிக்கொண்டிருந்தப டியால் நீர் மண்டூகமாகப் போகக்கடவதென்று அவர்களுள் தூருவாச ரென்பவர் சாபங்கொடுத்தார்.

அப்போது சுதபஸ் என்பவர் மிகவும் நடுக்குற்று அந்த முனி சிரேஷ்டர்களைப் பார்த்து தபோதனர்களே! நான் உங்களை மதிக் காமலிருக்கவில்லை. விதிப்பிரகாரம் ஸ்நானத்தினுடைய முடிவை பிரீதி

க்ஷித்துக்கொண்டிருந்தபடியால் அந்த இடத்தில் சற்று தாமதமாகி விட்டது. இது என்மீது ஒரு பெருந்தவறாகாது. இதற்காக எனக்கு இவ்வித சாபத்தைக் கொடுத்திருப்பது தகாது. அப்படியே என் மீது குறையிருந்தாலும் மன்னித்தருளவேண்டுமென்று கெஞ்சினார்.

அதுகண்டு துர்வாச பிரமுகரான முனிகளெல்லோரும் அந்த சுதபஸ் என்பவரைப் பார்த்து ப்ராம்மணஸ்ரேஷ்டரே! நீர் அற்பவேளை டாம் கோபத்தினால் அவசரப்பட்டு நேரிட்ட சாபம் கிடைத்துவிட்டது. ஆயினும் நீர் சுந்தரராஜனுடைய [illegible] பிரகாசத்தினால், இந்த புரங்கையிலுள்ள [illegible] நீக்கிக்கொள்வீர். நீர் இந்த [illegible] தவங்களைச் செய்துகொண்டு [illegible] அந்த நூபுரகங்கையில் [illegible] இந்த விருஷபாத்திரியிலேயே மண்டூகமாய் வசித்து [illegible] சுதபஸ் என்பவரும் சாபத்தினைப் பெற்ற தவளை ரூபமாய் [illegible] தவங்களைச்செய்து கொண்டிருந்தார்.

பின்பு அந்த துர்வாச பிரமுகரான முனிச்ரேஷ்டர்களெல்லாரும், சுந்தர ராஜனென்னும் பெயருடையவரும், விருஷபாத்திரியில் வாஸம் செய்தருளிக்கொண்டிருக்கப் பட்ட ஸ்ரீவாஸுதேவனை பேறாகச் சொன்னபடி [illegible] பணிவிடை செய்து வருஷகாலமவரையில் ஸ்தோத்திரத்துடன் வழிபட்டு [illegible] அனுக்கிரகத்தால் வராகக்ஷேத்திரத்திற்குப் புறப்பட்டார்கள். அப்போது மண்டூக ரூபத்தைப்பெற்ற சுதபஸ் என்பவர் அவர்களை நோக்கி மகாமுனிச்ரேஷ்டர்களே! எனக்கு எப்பொழுது இந்த ஜன்மம் [illegible] நிவர்த்தியாகுமென்று வணங்கிக் கேட்டார். அதற்கவர்கள் சுதபஸ்ஸே! நாங்கள் வராகக்ஷேத்திரத்திற்குப்போய் அங்கு பன்னிரண்டு வருஷகாலம் வசிக்கப்போகிறோம், அங்கே ஸ்ரீவாஸுதேவர் தமது ஸ்வரூபத்தோடு பக்தர்களின்பொருட்டு எழுந்தருளுவார், இந்த நூபுரகங்கையும் அந்த விடத்தில் பஞ்சீரநதியென்னும் பெயருடன் ஓடிவரும், இந்தவிருஷபாத்திரிக்கும் அந்தக்ஷேத்திரத்துக்கும் யாதொருவித்தியாசமுமில்லை. இதுவே அது. ஆதலால் நீர் எங்களுடன் வந்து அங்கு தவஞ்செய்து அங்கெழுந்தருளும் சுந்தரராஜமூர்த்தியை வழிபடுவீரானால் உமக்கேற்பட்ட இந்த மண்டூகரூபம் நீங்கி மோக்ஷத்தையடைவீர். நீர் சாபவிமோசனம் பெற்றுக்கொள்ளப்போகுங் காரணத்தால் அந்தப் பர்வதம் மண்டூகபர்வதமென்றும், உமக்காக வரும் அந்தத் தீர்த்தம் மண்

நேரித்தமென்றும, எக்காலத்தும பெயர்வழங்கப்போகின்றன, நீர் எங்களுடன்வந்து அந்தஇடத்தில் ஸ்ரீமந்நாராயணனைக்குறித்துத்தவஞ்செய்து அந்தப்பகவானுடைய கிருபையைப்பெற்றுக்கொள்ளுமென்றுரைக்க அதன்படியே தபஸ்என்பவர் அவர்களுடன் சேர்ந்துபுறப்பட்டு எல்லோரும வராகக்ஷேத்திரம் போய்ச்சேர்ந்தார்கள்.

அந்தப்போய்ச் சேர்ந்தவுடன் மறையமுனிவர்கள் ஓர்பக்கத்தில் தவஞ்செய்ய தபஸ் என்பவரும அந்தமுனிவர்கள் சொன்னவாறேப்படி நதியான இடத்திலிருந்து ஸ்ரீமந்நாராயணனை நோக்கி அநேகவருஷங்கள் தவஞ்செய்தார். இப்படிச்செய்து வருங்காலத்தில் கொஞ்சகாலத்திற்குப்பின் அந்தப்படியே விருஷபாத்திரிவாசியாகிய எம்பெருமான் தபஸ் என்பவருக்குப் பிரத்தியக்ஷமாகித் தரிசனங்கொடுத்தார், களையும் அங்கு சகலலட்சணங்களோடு பிரத்தியக்ஷமானது, அதன்மேல தபஸ்என்பவர் அளவிலடங்காமகிழ்ச்சிகொண்டு அநந்தராகபக்தியோடு ஸ்ரீமந்நாராயணனைக் குறித்து அந்த நூபுரகெங்கையாகிய மஞ்சீர நதியில் தினந்தோறும ஸ்நானஞ்செய்து அங்கு அவர்பொருட்டாக எழுந்தருளிய சுந்தரராஜர் திருக்கோலத்தைத் தினந்தோறும் தெரிசித்து அருக்கியங்கள் கொடுத்து வில தம்முடையமண்டூக ரூபமான துமாறி எம்பெருமானுடைய திருவடி அடைந்தார், அவர் அவ்விதம் மேலான பதவியை அடைந்தது, இந்த நூபுரகெங்கையின ஸ்நானவிசேஷமே, இந்த புண்ணிய தீர்த்தத்தின் மகிமையால் அநேகாயிரம் தவத்தைச் செய்தவர்கள், அப்போதுமுதல் இவ்விதம் சொல்லப்படுகிறது,

இந்த நூபுரகெங்கையில் துவாதசித்திதியில் ஸ்நானம் பண்ணினால் மனிதர் சாலோக சாமீப சாரூப்ய சாயுஜ்யமென்னும் நான்குவகை முத்தியும் அவைகளுக்குப் புண்ணியமேற்பட்டு மோக்ஷமதாமே கைகூடும், சண்டாளருங்கூட முக்தராயும், நிர்மலராயும், புண்ணியர்களாயும், துலங்குவார்கள், இந்தத்திதியில் ஒருமுறைஸ்நானஞ்செய்வதினால் கோடிஜென்மங்களாகச் செய்த பாபங்களெல்லாம நீங்கும. ஆனதால் இந்த தீர்த்தத்தை எவரும உன்னதமாகக் கருதாமலிரார். மேலும் அற்பிகைமாதத்தில் சுக்கிலபக்ஷத்துவாதசியில் இந்த நூபுரகெங்கையில் ஸ்நானம் பண்ணுகிறவர்கள் சர்வபாவங்களினின்றும விடுபடுவதில் எள்ளளவும் சந்தேகமே கிடையாது. பௌர்ணமாதிதியில்ஸ்நானம் பண்ணினவர்கள் இஷ்டசித்தியடை

வார்கள். இந்த நூபுரகெங்கையை தெரிசிப்பதினாலும், ஸ்மரிப்பதினாலுமே தபசிகள் மோக்ஷத்தை யடைகின்றார்களென்றால் ஸ்நானஞ் செய்வதால் கிடைக்கும் பலனைச் சொல்லவும் வேண்டுமோ? ஹே மஹாரிஷிகளே! இந்தக் கெங்கையின் சார்பாகிய பூமியில் வசிக்கின்ற எவ்வகைப் பட்டவரும் மோக்ஷத்தை யடைவார்களென்றால் இதன் மகிமை எப்பேர்பட்டதென்பதை நீங்களே அறிந்துகொள்வீர்களாக நான் தற்போது உங்களுக்கு ஸ்ரீ சுந்தரராஜருடைய வைபவங்களெல்லாவற்றையும் சொல்லிவிட்டேன். தவிரவும் நூபுரகங்கையில் ஸ்நானம்பண்ணினவர்களுக்கும், பகவத் பக்தியுள்ளவர்களுக்கும, ஹரிவாசுதேவர் பிரத்தியக்ஷமானதைப்பற்றி அங்கங்கே சொல்லிவந்திருக்கின்றேன். அத்தோடு மகாபக்திமானாகிய மலையத்துவஜனுக்குப் பகவான் பிரத்தியக்ஷமானதையும் சொல்லியிருக்கின்றேன். இந்த விருஷபாத்திரியினது மகத்துவங்களும அங்கங்கே என்னால் நிர்சயித்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால் இனிமேல் இந்த விருஷபாத்திரி விஷயத்தைப்பற்றி ஒன்றுமசொல்லவேண்டிய பாக்கியிராதென்று நினைக்கிறேன். இந்தப புண்ணிய கதையை மனிதர் சிரார்த்த காலத்தில் படிப்பார்களேயானால் அபபடிப் படிப்பவர்களுடைய பிதுர்க்கள் சுவர்க்கத்திலிருந்தாலும் விஷ்ணுலோகத்திற்குக் கொண்டுபோய்த் தேவர்களால் பூஜிக்கபபடுவார்கள். ஒருவன் தினந்தோறும் பரிசுத்தமான மனதோடு இநத மஹாத்மியததை சிரவணம் பண்ணிவைத்தாலும், படித்தாலும், அவன் வேதவேதாங்க கவிஞானபலததை அடைவதில் எள்ளளவுஞ் சந்தேகமில்லை நூபுரகெங்கையின் மகத்துவங்களையெல்லாம் சொல்லிமுடித்தார்.

பிரமாண்டபுராணத்தில் விருஷபாத்திரி மஹாத்மியம் பதினோராவது அத்தியாயம் முற்றிற்று.

பனிரண்டாவது அத்தியாயம்.

மேற்கண்டவாறு நூபுரகஙகையின் மகத்துவததைச் சொல்லி முடித்த சூதமாமுனிவர் மேலும், சிலவற்றைச்சொல்ல நினைத்து சௌனகாதிரிஷிகளைபபார்த்து ஹேமஹாரிஷிகளே உங்களுக்கு விருஷபாத்திரியின் மகத்துவங்களை யெல்லாஞ்சொல்லிமுடித்தேன், ஆயினும்இன்னும் எல்லாப்பொருள்களையும் அதிபரிசுத்தம்பண்ணுகிறதாயும், பரமஆச்சரியகரமாயும இருக்கபபட்ட சந்திரனது வம்சத்தில் தோன்றிய சிலஅரசர்களால் இந்தக்ஷேத்திரசம்பந்தமாய் நடந்தசரித்திரங்களையுஞ் சொல்லிவிடுகின்றேன் அதையுங்கேளுங்களென்று சொல்லத்தொடங்கினார்.

ஹேமஹேஹரிஷிகளே! உங்களுக்கு எல்லாச்சரித்திரங்களையுஞ் சொல்லியிருந்தாலும், இந்தச்சரித்திரம் எல்லாவற்றினுஞ் சிறந்ததாகையால் இதையுஞ்சொல்கிறேன் கேளுங்கள், பூர்வத்தில், சந்திரகுலத்தில் அவதரித்தபுரூரவஸ்வாமியினுடையபிள்ளையாயும், ஸ்ரீமானாயும், மஹாபலிஷ்டனாயும், இந்திரத்யும்னனென்னும், ஓர்அரசனிருந்தான் இவனுக்குப்பிள்ளையாகத் தோன்றியமலயத்துவஜனென்னும் அரசன்மேருகிரிக்குத் தெற்கேயுள்ள இராஜாக்களையெல்லாம் ஜெயித்து மேருபர்வதத்திலும் தன்னுடைய திருநாமஅடையாளத்தையெழுதி மகாஜெயசீலனாய் மதுரைமாநகரத்தில் தனதுபுரோகிதரான அகஸ்தியமுனிவரோடும், பிரசித்தமான மந்திரிகளோடும் இப்பூவுலகத்தை யரசாட்சிசெய்து ஆயிரம்வருஷம்வரை அந்நகரத்தில் வசித்துவந்தான், அப்படியிருக்கும்போது ஒருகாலத்தில் மலயத்துவஜன் அகஸ்தியனைப்பார்த்து ஹேமுனிசிரேஷ்டரே! நினைத்தவிடங்களுக்கெல்லாம் கொண்டு செல்லத்தக்க ஓர்விமானத்தை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டுமென்று கேட்க அவ்வாறே அகஸ்தியர் ஓர் விமானத்தை அவனுக்குத்தந்தருளித்துக்கொடுத்தார், மலயத்துவஜன் அந்த விமானத்தைப் பெற்றுக்கொண்டவுடனே அதில்தினந்தோறும் ஏறிச்சென்று கெங்காசங்கமத்தில் ஸ்நானஞ்செய்து கயையிலிருக்கிற கதாதரனென்னுமாதவனைப்பூஜித்து வரவேண்டுமென்னும் விரதங்கொண்டு அதன்படியே நாள்தோறும் வேதபாராயணரான முனிகளோடும் பகவத்பக்தரான முனிகளோடும் பகவத்பக்தரானபிராமணரோடும், அந்தவிமானத்திலேறிச்சென்று கங்கையில்ஸ்நானஞ்செய்து கயையிலிருக்கும் அந்தமாதவனைப் பூஜித்துவந்து கொண்டிருந்தான்,

இப்படிவழக்கமாகச்செய்து வருங்காலத்தில் ஓர்நாள் அந்தமாதவனைப்பூஜிக்கும்பொருட்டு மேற்கண்டவிமானத்திலேறிக் கயைக்குச் சென்றான், அப்படிச்செல்லுங்காலத்தில் இவனேறியிருந்த விமானத்தினுடைய நிழலானது விருஷபாத்திரிதடத்தில் விழுந்தது, அப்படி விழுந்தமாத்திரத்தில் விஷ்ணுபாரிஷதாள் கோபங்கொண்டு அந்தவிமானத்தை அங்குமிங்குஞ்செல்லவொட்டாமல் நிறுத்தி மலயத்துவஜனைக்கீழே தள்ளிவிட்டார்கள், அப்போது மலயத்துவஜன்திகைத்து நின்றுதள்ளினவர் இன்னவரென்று தெரியாமல் திகைக்குங்காலத்தில் விருஷபாத்திரி நாதரானவர் அவன்முன்புபிரசன்னராகி அரசனே! உன்னைத்தடுத்தவர் இன்னவரென்று தெரியாமல் திகைக்கின்றாய் அவர்கள் நம்முடைய பக்தாளே? உன்னுடையவிமானதின்நிழல்நாம்

வாசமாயிருக்கிற இந்தக்கிரியின் மீதுபடக்கூடாதென்றே தடுத்தார்கள், ஆனதால் நீ சஞ்சலப்படவேண்டாம், நீ கங்காஸ்நானத்திற்காக இனிமேல்போகவேண்டியதில்லை, என்னுடைய பாதசிலம்பினின்றும் உண்டானதாகிய இந்த நூபுரகெங்கையில் ஸ்நானஞ்செய்யக்கடவாய், பூலோகத்தில் இதற்குமிஞ்சின தீர்த்தம் வேறொன்றுமில்லை, மங்களகரமாயும், சமானமற்றதாயுமிருக்கப்பட்ட இந்த நூபுரகெங்கையில் ஸ்நானஞ்செய்தால் கோடிஜென்மங்களாகச் செய்தபாவங்களெல்லாம் நீங்கும, பரிசுத்தஸ்வரூபத்தை அடைந்த பிராணிவாத்மகாபிரமசொரூபத்தை மகாபலிசக்ரவர்த்தியைசிக்ஷிக்கும நிமித்தம் நான் திருவிக்கிரமாவதாரத்தில காலடியால் மூவுலகங்களையும் அளந்தபோது என்னுடைய சரணாரவிந்தத்தைப் பிரமன்கழுவிய ஜலந்தான் உண்டாகி பூமியில் வழிந்தகெங்கையானது ஆகாயத்தில் திரிபதகையென்று சொல்லப்பட்டபெயருடன் நிலவுகின்றது, பூமியில் அதைக்கெங்கையென்று கொண்டாடுகின்றார்கள், அந்தக்கெங்கையானது முன்னேபாவங்களையும் போக்கடிக்கப்பட்டது, இந்த நூபுரகெங்கையே! பிரமன் கழுவிய அக்காலத்தில் நமது பாதசிலம்பிலே தங்கியிருந்து இதினின்றும் உண்டானது இந்தக்கங்கையானது [illegible] கும் மோக்ஷத்தை [illegible] ல் உனக்குக்கெங்காஸ்நான [illegible] ன் கிடைக்கும். நீ மாதவனென்னும் [illegible] காகக் கன்யகையாய்ப்போய் [illegible] தாதிருமலையைத் [illegible] இந்த இடத்திலேயே [illegible] செய்வாயானால் நீ பரிசுத்த [illegible] மோக்ஷ ட்டையடைவாய், முன்னே [illegible] இந்த இடத்தில் [illegible] ய காந்திக்குச் சமானமாகிய விமானம் [illegible] ந்தவிமானத்தில் [illegible] ம் [illegible] ன்றும் சகலமனைவரும் [illegible] ற்றையடையப்போகிறார்கள், நீ இன்று முதல் [illegible] ல் பக்தபக்த[illegible] உன்னுடைய திரவியங்களைக்கொண்டு [illegible] தியினுடைய தெற்குக்கரையில் [illegible] ண்டு நிர்மித்திருக்கும் விமானமாகிய நமது ஆலயத்தை [illegible] க்கி அலங்காரமாபொருந்தும் திருப்பணிகளை [illegible] களையும் நடத்திக்கொண்டு [illegible]

ப [illegible] வரிதூவ நவாயாலை நீ சீக்கிரம் நமது பாதமூலையடை னசை இவ்விதமாகத் தடுத்தாட்கொள்ளும் பொருட்டாகவே ரிஷ தானேகங்கொண்டு தடுக்கும்படி செய்தோமென்று திருவா [illegible]ளினார்.

[illegible]வாறு விருஷபாத்கிரி தடத்தில் வசிப்பவரும், லாவண்ய [illegible]ரும், ஸ்ரீ [illegible] வனசைலத்தில் வசிப்பவரும், ரமணீயமா [illegible]உடையவரும், [illegible], சிரேஸ்டருமான ஹரி [illegible] பக்தவஜனங்கேட்டு அடங்கா [illegible] கொண்ட எம்பெருமானே [illegible] உடனே தனநகர்க்கு [illegible] கட்டளையிட்டு தனகுமாரன் சந்திர [illegible] இராஜ்யபட்டாபிஷேகம் செய்துவிட்டுவே [illegible] வந்து அங்குநடத்த வே [illegible] முறை முறையேநட [illegible] வழிபட்டு முடிவில்மோக்ஷ [illegible].

[illegible] நெடுங்காலம் அரசுபுரிந்து [illegible] தான், அதனமேல் [illegible] பெயருள்ள [illegible] தான், இவனபிதாவை [illegible] உள்ளவனையும், உலகத்தை [illegible] பேறின்மையால் [illegible] விருஷபாத்திரிக்குச்சென் [illegible] அநந்தவமபுரிந்தான், இவ்வா [illegible] இச்சித்து முறைதவறு [illegible] அவனுக்குப்புத்திரபாக்கிய [illegible] காருடையதுக்கத்தைப் [illegible], இருக்கப்பட்ட ஸ்ரீசுந்தரராஜ [illegible] இராஜசிரேஷ்டனே! [illegible], உன்னுடைய இஷ் [illegible], என்று அருள்வார்த்தைகளை [illegible] ஹிமயபூர்வததிலிருந்து [illegible], அநகெழுந்தருளினார், அப்படியெழுந்தரு [illegible] ஹேற சூலபாணி

யே! இங்கு என்னகாரண நிமித்தமாகவந்தீர், எங்கேசொல் போகின்றீர் என்றுவினவ, அதற்குஉமாபதியானவர் ஹரியே! மைத் தெரிசிப்பதற்காகவே வந்தேன், நானநினைத்து வந்தபடி உம்மைக்கண்களி கூரக்கண்டுகொண்டேன், ஆதலால்போய்வருகி றேனென்று புறப்பட்டார், அப்படிப்புறப்பட்ட ஈசுரனைப்பார்த்து விருஷபாத்திரி நாதர்சந்தோஷத்தோடு ஹே கைலைவாசனே! இச ப்ஜன்என்னும் பாண்டியன புத்திரனைக்குறித்து நெடுநாளாக அரு வம்புரிகின்றான். ஆதலால அவனுக்குப்புத்திர பாக்கியத்தையரு வேண்டுமென்று சொனனார் அநதச சமயத்தில் குபஜபாண்டியனு பரமசிவக்கடவுளைப்பலவாறு ஸ்தோத்திரஞ்செய்து கடவுளே! எம குப்புத்திரபாக்கியத்தை யருளவேண்டுமென றிரநது நின்றான அ கண்டகைலாபதி அவனைபபார்தது குபஜராஜனே நீ கவலைகொள் வேண்டாம், உமாதேவியானவள் ஒருகாரண நிமித்தமாக உங்கள்கு த்திற் பிறக்கவேண்டுமென்று பலவாறு நமமிடத்தில அனுமதிகேட் வந்தனள், நாம் அதனபடியே உனக்குப்புத்திரியாக அவதரிக்குமபட முன்னமேயே அவளுக்குக் கட்டளையிட்டிருக்கினறோம, அவள் க ணமாக நாமும் உன்வீட்டில் வநதடைவோம, ஹரியும உமமைப்பற் நம்மிடஞ்சொல்லியிருநதாலும் உமாதேவியும் நாமும்பாண்டிநாட் ல் அரசுசெலுததவேண்டு மெனறெண்ணியிருபபதாலும், இதனை ச்செய்யதவறோம், ஆதலால நீ சுகமே போய்வாவெனறு சொல் ஸ்ரீவாசுதேவரிடத்திலும விடைபெற்று தமதிருபபிடஞ்சேர்நதார

குப்ஜபாண்டியனும பரமசிவக கடவுளைபபலவாறு தொழு ஸ்ரீசுந்தரராஜப்பெருமாளிடத்தில் விடைபெறறுதான் உடனழைதத வந்திருந்தமனைவியோடும தனனுடைய பட்டணமவநது சேர்நதார பின்பு பரமசிவக்கடவுளானவர் தாம் குப்ஜபாண்டியனுக்குச சொன் படி பார்வதிதேவியைப்பார்தது உமையே! நீ எண்ணியிருக்கிறபடி குப்ஜபாண்டியனது தவததின காரணமாக நீபோய் அவனுக்கு, மூ றுதனங்களையுடைய பெண்ணாகப்பிறநது நலல பருவததில் அவ அந்தப்பாண்டி நாட்டின் இராச்சியபபட்டாபிஷேகம பெற்று அ செலுத்திவரக்கடவாய், நாமும விரதியபர்வதத்தினுடைய தாழ்வ யிலுள்ள ஓர் வேடனது வீட்டில் உதித்து பில்லனெனபவனால பூஜி ப்பட்டு அங்கு வளர்ந்து வருவோம, அக்காலததில் நீ திக்குவிஜயஞ்செ ய்து பல அரசர்களையும் ஜெபித்து முடிவில் நாமிருக்குந்திசைநோக வருவாய் அப்போது நாம் எதிர்த்து உனனுடன்போர்புரியவருவோ

ஸ்ரீ

முகவுரை.

"அழகர்கோயில்மான்மியம்,, என்னும் இத்திருமாலிருஞ்சோ லைமலை ஸ்தலபுராணம், மதுரைநேட்டிவ்காலேஜியில் ஸமஸ்கிரு உபாத்தியாயராயிருந்த, லேட்ஸரகூர் கிருஷ்ணமாச்சாரியாரிடத் ருந்தவடமொழி ஏட்டுப்பிரதியைக்கொண்டு மதுரைபுதுத்தெருவ ருக்கும், திருவையாற்று வெங்கட்டராமசாஸ்திரியவர்களால் தெ மொழியில்மொழிபெயர்த்து த. குப்புசாமிநாயுடுஅவர்களால் சீர் த்தஞ்செய்து அச்சிடமுயன்றகாலே "நல்லகாரியத்திற்கு நாலாயிர க்கினம்,, என்றபடி சிலஅசந்தர்ப்பங்கள் நேர்ந்தன ஆயினும் நமதுஅ பர்கள் சிலர் இம்மான்மியம் வெகுஅருமையுள்ளன கூடியசீக்கிரம், சியற்றி புத்தகரூபமாய்தரல்வேண்டுமென்ற வேண்டுகோட்கிணை யாவரும்வாசித் தானந்தமடையுமாறு அச்சிட்டுவெளியிடலானே

சிற்சிலவிடங்களில் ஒருவாறு வழுக்கல் காணுமேல் அதைவ க்கும் அன்பர்கள் திருத்திவாசிக்கும்படி பன்முறை கேட்டுக்கொ றேன்,

இப்புத்தகம்வேண்டியவர்கள் மதுரைபுதுமண்டபம்புத்தகஷ களிலும் அடியில்கண்ட எமதிடத்திலும் நேரிலாவது வி. பி. போ ட்மூலமாவது பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்.

வி. என். இராகவக்கோ

புக்ஷாப் மதுரை.

மைக் கண்டமாத்திரத்தில் உனக்கேறபட்ட மூன்று தனங்களில் ஒன்று மறையும் அதுகண்டு நீ நாணிநிற்பாய். அது காரணமாக நாம் உன்னைமணம்புரிந்து கொள்வோம், பின்பு நாமிருவரும், மதுராபுரியிலிருந்து அரசுசெலுத்திப பலரும் நம்மை சோமசுந்தரபாண்டியன் என்று கொண்டாடும் படியாக வாழ்ந்து விருஷபாத்திரியென்னும் பர்வதத்திலெழுந்தருளியிருக்கும் சுந்தரராஜருக்கு வேண்டிய சிறப்புகளை நடத்திவிட்டு முடிவில அரசிலைமையை விட்டு நமமுடைய தானத்தை யடைவோமென்று சொல்ல, அப்படியே மாதேவி குபஜ பாண்டியனுக்குப்புத்திரியாக அவதரித்தாள். அவளுக்குகுபஜன் தடாதகைபபிராட்டியா ரென்னும் பெயரிட்டுச சரியானபருவம் வந்தவுடன் இராச்சியபட்டாபிஷேகஞ் செய்து வைத்துவிட்டு மோக்ஷத்தை யடைந்தான். பின்பு தடாதகைப்பிராட்டியார் அரசுசெலுத்தி முடிவில திக்குவிஜயஞ்செய்து பல அரசர்களை யுமஜெயித்து விந்தியபர்வதத்தின பக்கத்தில்போகும்போது அங்குமேவட்டியில எழுந்தருளியிருந்த கடவுள்எதிர்பபட்டார். அபபொழுதே தடாதகைப்பிராட்டியாருக்கு ஒருதனமமறைந்துவிட்டது. அதனாலபிராட்டியார் பேரைவிட்டுநாணிநிற்க, அந்தக்கடவுள் மணமபுரிந்துகொண்டனா. உடனே இருவரும மதுராபுரியையடைந்து பரமசிவககடவுள சோமசுந்தரபாண்டியனென்னும் பெயரோடு தடாதகைபபிராட்டியுடன் அரசு செலுத்தி ஸ்ரீசுந்தரராஜருக்கு வேண்டிய சிறப்புகளையும, க்ஷேத்திரபாலனத்தையும் செய்து தினந்தோறும மஹா சந்தோஷத்தோடு விஷ்ணுவினுடைய பூகசங்கத்தையும, அடைந்து முடிவில தமதிருப்பிடஞ் சேர்ந்தனர், மமஹரிஷிகளே! இந்த விருஷபாத்திரி நாதனை முன்னிட்டு அசுரரே பாண்டியராக அவதரித்து அந்த க்ஷேத்திரத்திறகு வேண்டிய சிறப்புகளையெல்லாம செய்தா ரென்றால அதனபெருமையை அளவிட்டுச சொல்லமுடியுமா? நீஙகளகேட்டபடியே விருஷபாத்திரியின் விசேஷணத்தையும எடுத்துசசொன்னேனன, இதைககேட்டதினால நீஙகளும் முகதாளாகிவிட்டாகள் என்று சொல்லிமுடித்துமகிழ்சசிகொண்டனர், சௌனகாதிரிஷிகளும பேரானந்தமடைந்தாாகள்.

இந்தபபிரகாரம பிரமாண்டபுராணத்தில க்ஷேத்திர காண்டம் விருஷபாத்திரிமஹாத்மியம.

பனிரண்டாவது அத்தியாயம்வரை

அழகாகோயில்மான்மியம் முற்றிற்று.

Shribalasubiksham Ramasubramanian